விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஐப்பசி 26 திங்கட்கிழமை (12.11.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 328

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144.
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

## ஜனாதிபதி மைத்திரிக்கு அதிர்ச்சி

# சுதந்திரக்கட்சியை விட்டு மொட்டில் சேர்ந்தார் மகிந்த



(கொழும்பு) ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்து பிரதமர் மகிந்த ராஜபக்ஷ உத்தியோகபூர்வமாக விலகி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இணைந்து கொண்டார். நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் நடைபெறவுள்ள நிலையிலேயே அவர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இணைந்துள்ளார்.

மேலும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் அங்கம் வகிக்கும் கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்களும் கட்சியிலிருந்து விலகியுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் புதல்வரான நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட நால்வர் நேற்று முன்தினம் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்திருந்தனர்.

இதேவேளை, எதிர்வரும் 2019ஆம்

02ஆம் பக்கம் பார்க்க....

## "கஜா" சூறாவளி எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

மத்திய வங்காள விரிகுடா பகுதியில் காணப்படும் தாழமுக்கம் வலுவடைந்து சூறாவளியாக மாறி காங்கேசன்துறையில் இருந்து ஆயிரத்து 40 கிலோ மீட்டர்

04ஆம் பக்கம் பார்க்க....

## 11/2 வயது குழந்தை கிணற்றினுள் விழுந்து பரிதாபமாக உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

பெற்றோரின் கவனயீனத்தால் ஒன்றரை வயது குழந்தை ஒன்று கிணற்றினுள் தவறிவிழுந்து உயிரிழந்த சம்பவம் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் அரியாலைப்

23ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதியை சந்திக்க மறுத்த மகாநாயக்கர்கள்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்திக்க அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீடங்களின் மகாநாயக்க தேரர்கள் மறுத்து விட்ட

04ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதியின் செயற்பாட்டால் ஐ.நா கவலை

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாராளுமன்றத்தை கலைத்துள்ளமை குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் அன்டோ னியோ கட்டரஸ் கவலை வெளியிட்டுள்ளார்

ஐக்கிய நாடுகள் சபையின்

02ஆம் பக்கம் பார்க்க....

## ஜனநாயகத்தை காப்பாற்ற கட்சிகள் இன்றையதினம் நீதிமன்றம் செல்கின்றன!

(கொழும்பு)

நாடாளுமன்றத்தை கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லாத நிலையில், நாடாளுமன்றத்தை அவர் கலைத்திருப்பதற்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஜே.வி.பி மற்றும் ஐ.தே.க. முஸ்லிம் காங்கிரஸ் என்பன அறிவித்துள்ளன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நாடாளுமன்றத்தைக் கலைத்தமை சட்டவிரோதமானது என்றும் இதற்கு எதிராக, உயர்நீதிமன்றத்தை நாடவுள்ளதாகவும் தமிழ்

04ஆம் பக்கம் பார்க்க....

## எந்த விளைவுகளையும் எதிர்கொள்ளத் தயார்!

### சபாநாயகர் அதிரடி அறிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதியை எதிர்த்து பாராளுமன்றத்தின் உரிமைகளையும் அரசமைப்பின் ஆதிபத்தியத்தையும் மக்களின் இறைமையையும் காப்பாற்ற முயன்றமைக்காக எந்த

23ஆம் பக்கம் பார்க்க....

# நாடாளுமன்றில் இரத்த ஆறு ஓடும் என்ற அச்சம்; சபாநாயகரின் செயற்பாடு என்பவற்றால் கலைத்தேன்

### ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தன்னிலை விளக்கம்

(கொழும்பு)

நாடாளுமன்றைக் கலைத்ததற்கு மூன்று முக்கிய காரணங்கள் உள்ளன என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான கையூட்டு 500 மில்லியன் வரை சென்றது, நாடாளுமன்றில் வரும் 14ஆம் திகதி குருதி ஆறு ஓடும் என்ற அச்சம் மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை சபாநாயகர் வாக்கெடுப்புக்கு விடுவார் என்பதால் பெரும்பான்மையை நிரூபிக்க முடியாது போகலாம் ஆகிய மூன்று காரணங்களுக்காகவே நாடாளுமன்றைக் கலைத்தேன் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றிரவு ஆற்றிய சிறப்பு உரையிலேயே மேற்கண்ட விடயத்தை குறிப்பிட்டார்.

23ஆம் பக்கம் பார்க்க....



## வவுனியாவில் வாள்வெட்டு

(குருமன்காடு)

வவுனியா பட்டக்காடு பகுதியில் நேற்று மதியம் இடம்பெற்ற வாள் வெட்டு சம்பவத்தில் இளைஞரொருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா மன்னார் வீதி பட்டக்காடு பகுதியில் இருவருக்கிடையே இடம்பெற்ற வாய்த்தர்க்கம் மோதலாக மாறியதில் இவ் வாள்

24ஆம் பக்கம் பார்க்க....

### சாவகச்சேரி பகுதியில்

## 24 மணித்தியாலங்களில் 4 திருட்டுச் சம்பவங்கள்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் 24மணித்தியாலத்திற்குள் நான்கு திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றதுடன் அதில் மூன்று திருட்டுச் சம்பவங்கள் ஒரே பகுதியில் இடம்பெற்றுள்ளது.

அத்துடன் இந்த நான்கு குற்றச்செயல்களுடனும் ஒரு குழுவினரே சம்பந்தப்பட்டிருப்பதாகவும் அதில் ஒருவரை பொதுமக்கள் பிடித்து சாவகச்சேரி பொலிஸாரிடம் ஒப்படைத்திருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

02ஆம் பக்கம் பார்க்க....

## தேர்தல் நடத்தப்படுவதை யாராலும் தடுக்க முடியாது!

### ● மகிந்த ராஜபக்ஷ சவால்

(கொழும்பு)

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தல் நடத்துவதற்கான வர்த்தமானியும் வெளியிடப்பட்டுள்ள நிலையில், தேர்தல் நடைபெறுவதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாதென பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து விலகி, பொதுஜன பெரமுனவின் உறுப்புரிமையை பிரதமர் மகிந்த நேற்று ஞாயிற்றுக்கிழமை பெற்றுக்கொண்டார். பொதுஜன

23ஆம் பக்கம் பார்க்க....

## 24 மணித்தியாலங்...

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு சாவகச்சேரி கச்சாய் வீதி 1ம் கட்டைப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையமொன்றிற்குள் நுழைந்த இருவர் கடையில் தொழில் புரிகின்ற இளைஞனை தாக்கிவிட்டு கடையில் இருந்த சுமார் ஐம்பதாயிரம் ரூபாய் பணத்தை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர். கொள்ளையர்களைத் துரத்திச் சென்ற பிரதேச இளைஞர்களால் கொள்ளையர்களின் மோட்டார் சைக்கிளின் ஆங்கில இலக்கத்தை மாத்திரமே இனங்காண முடிந்தது. குறித்த சம்பவம் இடம்பெறுவதற்கு சிறிது நேரத்திற்கு முன்னர் சாவகச்சேரி பொலிஸார் கச்சாய் வீதியில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. திருட்டு தொடர்பாக அவசர பொலிஸ் இலக்கத்திற்கு தெரியப்படுத்தியும் அதிகாலை 3 மணியளவிலேயே பொலிஸார் வந்து பார்வையிட்டுள்ளனர்.

இந்நிலையில் சனிக்கிழமை காலை 11 மணிக்கு குறித்த வர்த்தக நிலையத்திற்கு அடுத்த ஒழுங்கையில் உள்ள வர்த்தக நிலையத்திற்குள் புகுந்த இருவர் கடை உரிமையாளரான மூதாட்டியை தள்ளிவிட்டு கடையில் இருந்த பணத்தை எடுத்துச் சென்றுள்ளனர். இதன்போது மூதாட்டி திருடர்கள் வந்த மோட்டார் சைக்கிள் இலக்கத்தை பார்வையிட்டபோது காலால் இலக்கத்தை மறைத்துக் கொண்டு சென்றுள்ளனர். பின்னர் 11.30 மணியளவில் அதே பகுதியில் இரண்டு வர்த்தக நிலையங்களுக்கும் இடைப்பட்ட பகுதியில் கச்சாய் வீதியால் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த பெண்ணை வழிமறித்து அவருடைய கழுத்தில் காணப்பட்ட தங்கச் சங்கிலியை அறுக்க முயன்றுள்ளனர். இதன்போது சங்கிலி பெண்ணின் தலைமுடியுடன் சேர்த்துப் பிடிபட்டதால் திருடர்களால் அறுக்க முடியாமல் போக கத்தியைக் காட்டி சங்கிலியைத் தருமாறு மிரட்டியுள்ளனர்.

இதன்போது பெண் அவலக்குரல் எழுப்ப அயலவர்கள் உதவிக்கு வர திருடர்கள் சாவகச்சேரி நோக்கி தப்பித்துச் சென்றுள்ளனர். திருடர்களைப் பின்தொடர்ந்து பிரதேச இளைஞர்கள் சென்றபோது கத்தியைக் காட்டி மிரட்டி விட்டு முகத்தில் கட்டியிருந்த துணியினையும் கழற்றி வீட்டு டச்சு வீதி ஊடாகச் சென்றுள்ளனர். இதன்போது மோட்டார் சைக்கிள் இலக்கத்தை அவதானித்த இளைஞர்கள் அதனை பொலிஸாரிடம் வழங்கியுள்ளனர். பின்னர் அதே திருடர்கள் 12.30 மணியளவில் மட்டுவில் பகுதியில் முதியவர் ஒருவருடைய வர்த்தக நிலையத்திற்குள் புகுந்து அங்கிருந்த முதியவரைத் தாக்கி பணத்தை எடுத்துக் கொண்டு தப்பித்துச் செல்ல முற்படும் போது முதியவர் பலமாகக் கட்டிப் பிடித்ததுடன் அயலவர்களின் உதவியுடன் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார். இதன்போது மற்றவர் மோட்டார்சைக்கிளுடன் தப்பித்துச் சென்றுள்ளார்.

நான்கு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் இவர்கள்தான் என பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டவர் ஏற்கெனவே பல குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இருப்பினும் மற்றைய சந்தேகநபர் இதுவரை கைது செய்யப்படவில்லை. இவ்வாறான சம்பவங்களால் குறித்த பகுதி மக்கள் அச்சமடைந்துள்ளதுடன். சிலர் வர்த்தக நிலையங்களை நடத்துவதற்கே அச்சமடைகின்றனர்.

இவ் வாறான குற்றச் செயல் களைக் கட்டுப்படுத்த பொலிஸார் விரைந்து செயற்பட வேண்டும்.இரவு வேளைகளில் பொலிஸார் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் எனவும் பிரதேச மக்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (மு-30)


# பதவி வெற்றிடம்

கனினி தமிழ் ரைப்பிங் மற்றும் பக்கவடிவமைப்பாளர்கள் (இருபாலாரும்) தேவை

முன் அனுபவம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்

070 220 2206


## சுதந்திரக் கட்சி...

ஆண்டு ஜனவரி 05ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் எந்த சின்னத்தின்கீழ் போட்டியிடுவது என்பது குறித்து மைத்திரி, மகிந்த கூட்டணிக்குள் கருத்து மோதல் உருவாகியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்தமுறைபோல் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வெற்றிலை சின்னத்தின் கீழ் போட்டியிடவேண்டும் என மைத்திரி அணியினரும் பொதுஜன பெரமுனவின் தாமரை மொட்டு சின்னத்தின் கீழேயே போட்டியிட வேண்டும் என மகிந்த அணியினரும் கருத்து வெளியிட்டு வந்தனர்

இந்த நிலையில் மகிந்தவின் வெளி யேற்றம் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு பெரும் பின்னடைவாகவும் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவுக்கு கடும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

இதனால் தற்போது மைத்திரி அணியினர் இருப்பிடம் இல்லாத நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இவ்வாறன நிலையில் மைத்திரி அணி தேர்தலிலும் தோல்வியடையப் போவது உறுதியாகிவிட்டது. எவ்வாறாயினும் நடப்பவை அனைத்தும் நன்மைக்கு என்று கருதிகிறோம் என ஐ.தே.க தெரிவித்துள்ளது.

இதேவேளை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆத்மா சாந்தியடையட்டும் என்று குறிப்பிட்டுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் உறுப்பினரும் ஐக்கிய தேசியக் கட்சியின் இந்நாள் உறுப்பினருமான மங்கள சமரவீர, பண்டாரநாயக்க, சிறிமாவோ, அநுர மற்றும் சந்திரிகாவின் அன்பான கட்சியை மைத்திரிபால சிறிசேன துரோகமிழைத்து கொலை செய்துவிட்டார் என்று குறிப்பிட்டுள்ளார். (மு)


# உடன் தேவை

கொள்கலன் (Container)
உடன் தேவை

வைத்திருப்பவர்கள்
தொடர்பு கொள்ளவும்

தொ.பே
070 220 2206


## ஜனாதிபதியின்...

செயலாளர் நாயகத்தின் பேச்சாளர் பர்ஹான் ஹக் அறிக்கையொன்றில் இதனை தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தை கலைத்துவிட்டு ஜனவரி ஐந்தாம் திகதி தேர்தலை நடத்தும் ஜனாதிபதி சிறிசேனவின் தீர்மானத்தை செயலாளர்நாயகம் கவலையுடன் அறிந்து கொணடுள்ளார் என பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

ஜனநாயக கட்டமைப்புகள் மற்றும் ஜனநாயக நடைமுறைகளை மதிப்பதன் முக்கியத்துவத்தை செயலாளர் நாயகம் வலியுறுத்த விரும்புகின்றார் என அவர் தெரிவித்துள்ளார். (மு)


### காண்டம் பார்த்தல்

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம்.

தொடர்புகளுக்கு:-076 835 1932,
021 223 2222
உரும்பிராய்.
(6343)


### காயத்திரி திருமாங்கல்ய சேவை

திருமணம் பொருத்தம் பார்த்தல், நிச்சயித்தல், குறிப்பு எழுதுதல் போன்ற சேவைகளை மிகவும் திருப்திகரமாக செய்து வருகின்றோம். எமது சேவையினூடாக உங்கள் பிள்ளைகளின் மணவாழ்வினை மங்கல வாழ்வாக்கிக் கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு:-076 835 1932,
021 223 2222
உரும்பிராய்.
(6343)


# மரண அறிவித்தல்

பிறப்பு
1948 - 03 - 27



இறப்பு
2018 - 11 - 11

## சிவராமலிங்கம் சாந்தலிங்கம்

(உரிமையாளர் - சாந்தலிங்கம் ஸ்ரோர்ஸ், அம்பாள் அரிசி ஆலை, அம்பாள் JCB)

தும்பளை பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவராமலிங்கம் சாந்தலிங்கம் (உரிமையாளர் - சாந்தலிங்கம் ஸ்ரோர்ஸ், அம்பாள் அரிசி ஆலை, அம்பாள் JCB) நேற்று (11.11.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கருணாதேவியின் அன்புக் கணவரும் சிவதீசன் (வர்த்தகர்), சோமதீசன் (கண்ணன் - அம்பாள் ரான்ஸ்போட் உரிமையாளர்) ஜெகதீசன், காலஞ்சென்ற செல்வதீசன், சிவதர்சினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சஜிதா, நித்தியா, ரமேஸ்வரன் (செயலாளர் - பருத்தித்துறை நகர சபை) ஆகியோரின் மாமனாரும் நிதர்ஷன், சுதர்ஜனா, ராகவி, சதுஷன், கர்ணிகா, ஹஜானனன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.11.2018) திங்கட்கிழமை பி.ப 1.30 மணிக்கு வட்டப்பாதி புலோலி தென்மேற்கு பருத்தித்துறை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சுப்பர்மடம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (6414)

வட்டப்பாதி,
புலோலி தென்மேற்கு, பருத்தித்துறை.

தகவல்:- குடும்பத்தினர்
077 308 6724

# 1ம் ஆண்டு நினைவஞ்சலி



கடந்த 25.10.2017 புதன்கிழமை அன்று
இறைபதம் அடைந்த எங்கள் அன்புத் தெய்வம்

## அமரர் கந்தர் தம்பிராசா அவர்களின்

முதலாமாண்டு நினைவுப் பிரார்த்தனை நாளை (13.11.2018) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்:-
குடும்பத்தினர்
077-8569295, 077-4415327

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.
(C-4388)

# எதிர்காலச் சந்ததியினருக்கும் துரோகமிழைக்கப்பட்டுள்ளது

## அகிலவிராஜ் காரியவசம் விசனம்



(கொழும்பு)

அரசமைப்பை சவாலுக்கு உட்படுத்தி, ஜனநாயகத்தைப் படுகொலை செய்வதானது நாட்டு மக்களுக்கு மட்டுமன்றி, எதிர்கால சந்ததியினருக்கும் இழைக்கும் துரோகமாகும் என ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரியவிற்கும், ஐக்கிய தேசிய கட்சியின் முக்கியஸ்தர்களுக்கும் இடையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை முக்கிய கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்நிலையில் குறித்த கலந்துரையாடலின் நிறைவில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், 'நாம் தேர்தலுக்கு என்றும் அஞ்சியதில்லை. ஆனால், இந்த நாட்டில் அரசமைப்பு என்ற ஒன்று இருக்கிறது.

19 ஆவது திருத்தச்சட்டத்தில், நான்கரை வருடங்களுக்கு முன்னர் நாடாளுமன்றை கலைக்க முடியாது எனக்கூறப்பட்டுள்ளது. அதை மீறி கலைக்க வேண்டுமெனில், நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், அரசமைப்புக்கு முரணாக அந்த் தரப்பினர் செயற்படுவார்களாயின், அது பாரதூரமான குற்றமாகும். இது முற்றிலும் ஜனநாயகத்துக்கு முரணானதாகும்.

நாம் 126 உறுப்பினர்களுக்கும் மேல் நாடாளுமன்றில் காண்பிக்க தயாராகவே இருந்தோம். எனவே, எமக்கு தேர்தலுக்கு முகம் கொடுப்பது ஒன்றும் பெரிய விடயமல்ல.

தேர்தலின்போது அவர்களுக்கு பெரும்பாலான உறுப்பினர்கள் வெற்றிபெறவில்லை எனில், மீண்டும் இரண்டு வாரங்களில் அவர்கள் நாடாளுமன்றைக் கலைக்கக்கூடும். இதனையா மக்கள் எதிர்ப்பார்த்துள்ளார்கள்?

தேர்தல்கள் ஆணைக்குழு உள்ளிட்ட சுயாதீன ஆணைக்குழுக்களை ஸ்தாபித்ததும் அரசமைப்பை பாதுகாக்கவே. எனவே, அனைத்து தரப்பினருக்கும் ஜனநாயகத்தை நிலை நாட்ட வேண்டிய பொறுப்பு உள்ளது' என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# ஆளும் தரப்பிற்குள் பாரிய பிளவு

# பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நேற்று பொதுஜன பெரமுனவில் இணைவு!

## 50 எம்.பிக்களும் உறுப்புரிமையைப் பெற்றனர்



(கொழும்பு)

**ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் போஷகரும் முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய பிரதமருமான மகிந்த ராஜபக்ஷ நேற்று முற்பகல் 11 மணியளவில் பொதுஜன பெரமுனவின் உறுப்புரிமையைப் பெற்றுக் கொண்டுள்ளார். விஜேராமவில் உள்ள தனது வாசஸ்தலத்தில் வைத்து இந்த உறுப்புரிமையைப் பெற்றுக் கொண்டுள்ளார்.**

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 50 பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் உறுப்புரிமையை பெற்றுக் கொண்டுள்ளதாகவும் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. கூட்டரசாங்கத்தில் இருந்து விலகிச் சென்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 15 பேரும் இவ்வாறு பொதுஜன பெரமுனவில் உறுப்புரிமையைப் பெற்றுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை அழிவிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்பதற்காகவே 16 பேரும் கடந்த அரசாங்கத்திலிருந்து விலகினர். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பாதுகாப்பதற்காகவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் கடந்த அரசாங்கத்தில் பல்வேறு அதிரடி தீர்மானங்களை முன்னெடுத்தனர்.

இருப்பினும், தற்பொழுது சுதந்திரப் பறவை போன்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் அங்கத்துவம் பெற்றுள்ளமையானது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு அடித்த சாவு மணியாகவே அரசியல் விமர்சகர்கள் பார்க்கின்றனர். (இ-7)

# முக்கிய அரச நிறுவனங்களுக்கு விசேட பாதுகாப்பு

(கொழும்பு)

நாட்டில் நிலவும் அரசியல் நெருக்கடி காரண மாக, ஆறு முக்கிய அரச நிறுவனங்களுக்கு விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

பொலிஸ் விசேட அதிரடிப்படையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் இதனைக் தெரிவித்தார்.

லேக் ஹவுஸ், தேசிய ரூபவாஹினி கூட்டுத்தாபனம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் சுயாதீன தொலைக்காட்சி ஆகிய ஊடக நிறுவனங்களுக்கும் இதன் போது விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனைத்தவிர, சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் அரச அச்சகம் ஆகிய நிறுவனங்களுக்கும் பொலிஸ் அதிரடிப்படையினர் பாதுகாப்பு வழங்கியுள்ளனர்.

நாட்டில் நிலவும் அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு எட்டப்படும் வரை இவ்வாறு விசேட பாதுகாப்பு வழங்கப்படவுள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (இ-7)

# அனைத்து அதிகாரங்களையும் தன்வசப்படுத்த மைத்திரி முயற்சி

## அரசியல் பழிவாங்கலில் இறங்கினால் இரத்த ஆறு ஓடும்- விஜயசூரிய

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அனைத்து அதிகாரங்களையும் தன்வசப்படுத்த முயற்சிப்பதாக சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் சரத் விஜயசூரிய குற்றம் சாட்டியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக்கியதையடுத்து எழுந்துள்ள அரசியல் குழப்பத்தை தீர்க்க தன்னால் முடியும் என்றும் அதற்குத் தேவையான பல துரும்புச் சீட்டுக்கள் தன்னிடம் இருப்பதாக எச்சரிக்கை விடுத்திருந்த மைத்திரிபால சிறிசேன பொலிஸ் திணைக்களத்தை தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துள்ளார்.

இந்த நிலையிலேயே மகிந்தவுடன் இணைந்து உருவாக்கியுள்ள சட்டவிரோத அரசாங்கத்தை ஆட்சியில் தக்கவைத்துக்கொள்ள மைத்திரிபால பல சதித்திட்டங்களை முன்னெடுத்திருப்பதாக சமூக நீதிக்கான தேசிய இயக்கம் நேற்று கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் பேராசிரியர் சரத் விஜயசூரிய குற்றம் சாட்டினார்.

"மைத்திரிபால சிறிசேன அரசியலமைப்பை மீறியுள்ளதை பல்வேறு தரப்பினர் தர்க்க ரீதியாக எடுத்துக்கூறியும் அதில் இருந்து பாடம் கற்றுக்கொள்ளாமல் தொடர்ந்து அரசியல் சாசனத்தினை மைத்திரிபால சிறிசேன மீறி வருகின்றார். 19ஆவது அரசியல் சாசன திருத்தச் சடடத்தில் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதிக்கு எந்த அமைச்சுப் பொறுப்புக்கள் உரித்துடையவை என்பது குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வாறான நிலையில் ஆட்சியாளர் மைத்திரிபால சிறிசேன ஊடகத்துறை அமைச்சை கைப்பற்றியுள்ளார். அத்துடன் சட்ட, ஒழுங்கு அமைச்சையும் வர்த்தமானி அறிவித்தல் ஊடாக தன்வசப்படுத்தியிருக்கின்றார். இவ்வாறான நடவடிக்கைகள் அரசியலமைப்பு முற்றிலும் மீறியவையாகும். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இவ்வாறு அதி காரத்தை கைப்பற்ற முய ற்சிப்பதும் சட்டம் ஒழுங்கு அமைச்சை கைப்பற்ற நினைப்பதும் தனக்கு தேவையான நபர்களை சில வழி முறைகள் ஊடாக கட்டுப்ப டுத்துவதற்காகவே என்ற சந்தேகம் எமக்கு எழுந்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்று சபை மற்றும் செயற்குழு உறுப்பினர்களை நேற்று முன்தினம் அழைத்திருந்த அந்தக் கட்சியின் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தன்னிடம் இருந்த ஒரு துரும்புச் சீட்டையே தான் இதுவரை பயன்படுத்தி இருப்பதாகவும், தேவைப்பட்டால் பயன்படுத்துவதற்கு தன்னிடம் மேலும் பல துரும்புச் சீட்டுகள் கைவசம் இருப்பதாகவும் கூறியிருந்தார்.

அது மாத்திரமன்றி நாடாளுமன்றம் 14 ஆம் திகதி கூடும் போது மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமித்து தான் உருவாக்கியுள்ள புதிய அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு குழப்பம் விளைவிக்காமல் ஐக்கிய தேசியக் கட்சியினர் ஆதரவு வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்திய மைத்திரிபால சிறிசேன, இதனை ஐக்கிய தேசியக் கட்சி செய்யத்தவறினால், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதியத்தை இழக்க நேரிடும் என்றும் எச்சரிக்கையும் விடுத்தார்.

மைத்திரிபால சிறிசேனவின் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டு சில மணி நேரங்களில்பொலிஸ்திணைக்களத்தையும் அவர் தன்வசப்படுத்தியிருக்கின்றதன் மூலம், அடுத்துவரும் நாட்களில் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய தலைவர்கள் பலர் கைதுசெய்யப்படலாம் என்றும் சமூக நீதிக்கான தேசிய இயக்க்தின் ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் சரத் விஜயசூரிய அச்சம் வெளியிட்டுள்ளார்.

"சில வேளைகளில் நாளை அல்லது அடுத்துவரும் நாட்களில் சில நபர்கள் ஆதாரமின்றி கைதுசெய்யப்படலாம். அவர்கள் கைதுசெய்யப்பட்டமைக்கு இதுதான் காரணம் என, மைத்திரி தெரிவிக்கலாம். இவ்வாறான பழிவாங்கல் நடவடிக்கை இரத்த வெள்ளத்தில் தான் முடியும். முன்வைத்த காலை பின்வைப்பதில்லை என்று ஆட்சியாளர் மைத்திரிபால சிறிசேன தொடர்ச்சியாக தெரிவித்து வருகின்றார். அதன்படி சாகும்வரையான தாக்குதலுக்கு அவர் தயாராகியுள்ளதாக தெரிகின்றது. நாடாளுமன்றம் 14ஆம் திகதி கூடுவதற்கு முன்னதாக அவர் அதிகாரங்களை கைப்பற்ற முனைகின்றார்.

இதனால் மைத்திரிபால சிறிசேனவின் இந்த ஜனநாயக விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க பொதுமக்கள் முன்வர வேண்டும். ஆட்சியாளர்கள் தான்தோன்றித்தனமாக செயற்படமுடியாது. தனது தனிப்பட்ட நலனுக்காக மைத்திரிபால சிறிசேன இவ்வாறு செயற்படுவது நாட்டில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும். ஜனாதிபதியின் இவ்வாறான செயற்பாடு நாட்டை எந்தளவு பாதிக்கும் என்பதை எடுத்துகூற விரும்புகின்றோம். இரண்டு வாரங்களாக நாட்டின் ஆட்சி நடவடிக்கை மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது" என்றும் அவர் தனது காரசாரமான கருத்துக்களை முன்வைத்தார். (இ-7)

# இலங்கையின் ஸ்திரத்தன்மைக்கு நாடாளுமன்றக் கலைப்பால் அச்சுறுத்தல்

## சுவிஸ் கவலை

(கொழும்பு)

இலங்கையில் அரசியல் நெருக்கடி மற்றும் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டமை தொடர்பில் சுவிட்சர்லாந்து கவலை வெளியிட்டுள்ளது.

அந்நாடு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில், இலங்கையில் அதிகரித்து வரும் அரசியல் நெருக்கடி மற்றும் நாடாளுமன்றத்தை கலைத்த அண்மைய முடிவு ஆகியவற்றால் சுவிட்சர்லாந்து கவலை கொண்டுள்ளது.

மேலும் இந்த முடிவு இலங்கையின் ஸ்திரத்தன்மைக்கு அச்சுறுத்தலாக இருப்பதாக சுவிட்சர்லாந்து கருதுகிறது.

இதனால் பொருளாதார செழிப்பு, நல்லிணக்க செயற்பாடு ஆகியவற்றில் பாதகமான விளைவுகள் ஏற்படலாம்

அனைத்துக் கட்சிகளும் ஜனநாயக வழிமுறைகளை பின்பற்றவும், சட்டத்தையும் மதித்து செயற்பட வேண்டும் எனவும் சுவிட்சர்லாந்து கேட்டுக்கொண்டுள்ளது.

அத்துடன் தற்போதைய நெருக்கடி நிலைக்கு மிக விரைவில் தீர்வுகண்டு, நாட்டின் ஜனநாயகத்தை பேணுமாறும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (இ-7)

# 42 இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்கக்கட்டிகளை கடத்தியவர் கைது



(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் தங்கக் கட்டிகளை விமான நிலையத்தில் இருந்து வெளியே கொண்டு செல்ல முயன்ற ஊழியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் தனது பயணப் பொதியில் மறைத்து குறித்த தங்கக் கட்டிகளைக் கொண்டு செல்ல முயன்ற போது அவர் கைது செய்யப்பட்டதாக சுங்கப் பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த தங்கக் கட்டிகளின் பெறுமதி 42 லட்சம் ரூபாய் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# கிண்ணம் வென்றது இந்தியா

## கடைசிப் போட்டியில் திரில் வெற்றி

மே.தீவுகள் அணிக்கு எதிரான மூன்றாவது 'ரி20' போட்டியில் தவான், ரிஷாப் அரை சதம் விளாச இந்திய அணி 6 விக்கெட்டுக்களால் 'திரில்' வெற்றி பெற்றது.

இந்தியா சென்ற மே.தீவுகள் அணி, அங்கு மூன்று போட்டிகள் கொண்ட 'ரி20' தொடரில் பங்கேற்றது. முதலிரண்டு போட்டியில் வென்ற இந்திய அணி 2-0 என்ற கணக்கில் ஏற்கனவே தொடரை கைப்பற்றிய நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவது மற்றும் கடைசி போட்டி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நேற்று நடந்தது.

நாணயச்சுழற்சியில் வென்ற மே.தீவுகளின் அணித் தலைவர் பிராத்வைட் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார். இந்திய அணியில் குல்தீப், பும்ராவுக்கு ஓய்வு தரப்பட்டதால் சகால், வாஷிங்டன் சுந்தர் இடம் பிடித்தனர்.

**நிக்கோலஸ் அரைச்சதம்**

மே.தீவுகள் அணிக்கு ஹெட்மயர், ஷோய் ஹோப் ஜோடி 'சு ப்பர்' ஆரம்பம் கொடுத்தது. முதல் விக்கெட்டுக்காக 51 ஓட்டங்கள் சேர்த்தபோது, சகால் 'சுழலில்' ஹோப் (24) ஆட்டமிழந்தார். ஹெட்மயர் 26 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். வோஷிங்டன் சுந்தர் பந்தில் ராம்தின் (15) சிக்கினார். நிக்கோலஸ் பூரன், டரன் பிராவோ வேகமாக ஓட்டங்கள் சேர்த்தனர்.

குர்னால் ஓவரில் பிராவோ ஒரு பவுண்டரி, ஒரு சிக்சர் விளாசினார். புவனேஷ்வர் பந்துவீச்சில் நிக்கோலஸ் தொடர்ந்து இரண்டு சிக்சர் பறக்கவிட்டார். கலீல் வீசிய கடைசி ஓவரில் மிரட்டிய நிக்கோலஸ் அரை சதம் எட்டி னார்.

முடிவில், மே.தீவுகள் அணி 20 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 181 ஓட்டங்கள் எடுத்தது. பிராவோ (43), நிக்கோலஸ் (53) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.




பந்துவீச்சில் இந்திய அணி சார்பில் அதிகபட்சமாக சகால் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

**தவான், ரிஷாப் அரை சதம்**

கடின இலக்கை விரட்டிய இந்திய அணிக்கு ஷிகர் தவான், அணித் தலைவர் ரோகித் ஜோடி ஆரம்பம் கொடுத்தது. ரோகித் 4 ஓட்டங்களில் திரும்பினார். தோமஸ் பந்தில் லோகேஷ் ராகுல் (17) ஆட்டமிழந்தார். தவான், ரிஷாப் இணைந்த எதிரணி பந்துவீச்சை சிதறடித்தனர்.

பிராத்வைட் பந்துவீச்சில் ரிஷாப் இரண்டு பவுண்டரி விளாசினார். தாமஸ் பந்தை தவான் சிக்சருக்கு பறக்கவிட்டார். தவான் 'ரி20' அரங்கில் 8ஆவது அரை சதம் எட்டினார். கீமோ பந்தை பவுண்டரிக்கு விரட்டிய ரிஷாப், முதல் அரை சதம் விளாசினார். ரிஷாப் 58 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

கடைசி ஓவரில் வெற்றிக்கு 5 ஓட்டங்கள் தேவைப்பட்டது. முதல் நான்கு பந்தில் 4 ஓட்டங்கள் கிடைக்க, 5ஆவது பந்தில் தவான் (92) ஆட்டமிழந்தார். ஆனால், கடைசி பந்தை ஒரு ஓட்டத்துக்கு மணிஷ் பாண்டே தட்டிவிட, வெற்றி உறுதியானது.

இந்திய அணி 20 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 182 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. மணிஷ் பாண்டே (4), தினேஷ் கார்த்திக் (0) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இதன்மூலம், இந்திய அணி 3-0 என முழுமையாக தொடரை வென்று கிண்ணத்தை கைப்பற்றியது.




தொடரை வென்றது தென்னாபிரிக்கா

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் போட்டியில் அணித் தலைவர் டு பிளசி, டேவிட் மில்லர் சதம் கடந்து கைகொடுக்க தென்னாபிரிக்க அணி 40 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதன்மூலம் தொடரை 2-1 எனக் கைப்பற்றி கிண்ணம் வென்று அசத்தியது.

அவுஸ்திரேலியா சென்றுள்ள தென்னாபிரிக்க அணி, அங்கு மூன்று போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்றது.

முதலிரண்டு போட்டிகளின் முடிவில் தொடர் 1-1 என சமநிலையில் இருந்தது. இந்நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவது போட்டி ஹொபர்ட் நகரில் நடந்தது.

நாணயச்சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணியின் தலைவர் பின்ச், களத்தடுப்பை தேர்வு செய்தார்.

**சுப்பர் ஜோடி**

முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணிக்கு குயின்ரன் டிகொக் (4), ரீசா ஹென்டிரிக்ஸ் (8) ஏமாற்றினர். மார்க்ரம் (32) நிலைக்கவில்லை. பின் இணைந்த அணித் தலைவர் டு பிளசி, டேவிட் மில்லர் ஜோடி அவுஸ்திரேலிய பந்துவீச்சை வெளுத்து வாங்கியது.

அபாரமாக ஆடிய இவர்கள் இருவரும் சதம் கடந்தனர். நான்காவது விக்கெட்டுக்கு 252 ஓட்டங்கள் சேர்த்தபோது ஸ்டாய்னிஸ் பந்தில் டு பிளசி (125 ஓட்., 114 பந்து, 2 சிக்சர், 15 பவுண்டரி) ஆட்டமிழந்தார். அபாரமாக ஆடிய மில்லர் (139 ஓட்., 109 பந்து, 4 சிக்சர், 13 பவுண்டரி), ஹேசல்வுட் 'வேகத்தில்' வெளியேறினார்.

50 ஓவர்களில் தென்னாபிரிக்க அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 320 ஓட்டங்களைக் குவித்தது.

கிளாசன் (1), பிரிடோரியஸ் (1) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் அவுஸ்திரேலியா அணி சார்பில் ஸ்ரார்க், ஸ்டாய்னிஸ் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

**மார்ஷ் சதம்**

கடின இலக்கை விரட்டிய அவுஸ்திரேலிய அணிக்கு கிறிஸ் லின் (0) மோசமான ஆரம்பம் கொடுத்தார். அணித் தலைவர் ஆரோன் பின்ச் (11) ஏமாற்றினார். ரபாடா 'வேகத்தில்' டிராவிஸ் ஹெட் (6) ஆட்டமிழந்தார். பொறுப்பாக ஆடிய ஸ்டாய்னிஸ் (63) அரைச்சதம் கடந்தார். மறுமுனையில் அசத்திய ஷேன் மார்ஷ் (106) சதமடித்து கைகொடுத்தார்.

ஸ்ரெய்ன் 'வேகத்தில்' அலெக்ஸ் கேரி (42), மேக்ஸ்வெல் (35) வெளியேறினர். ரபாடா பந்தில் ஸ்ரார்க் (0), சாம்பா (0) ஆட்டமிழந்தனர்.

50 ஓவர்களில் அவுஸ்திரேலிய அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 280 ஓட்டங்கள் மட்டும் எடுத்து தோல்வியடைந்தது.

பந்துவீச்சில் தென்னாபிரிக்கா சார்பில் ஸ்ரெய்ன், ரபாடா ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகன், தொடர் நாயகன் விருதுகளை தென்னாபிரிக்காவின் மில்லர் வென்றார்.

# 'கஜா' சூறாவளி...

தொலைவில் வடகிழக்கு திசையில் நிலைகொண்டுள்ளது.

"கஜா" என பெயரிடப்பட்டுள்ள இச்சூறாவளி மேற்கில் வலுவடைந்து வடமேல் திசையில் பயணிக்கும் என காலநிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளையில் கடற்பகுதிகளில் காற்றின் வேகம் 70 முதல் 80 கிலோ மீற்றர் வரை சிலவேளை 100 கிலோமீற்றர் வரை அதிகரித்து வீசக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகம் மற்றும் வட இலங்கையை நோக்கி வரும் கஜா புயல் மிகக் கடுமையான புயலாக இருக்கும். வரும் 15ஆம் திகதி கடலூர், புதுச்சேரி பகுதியில் கரையைக் கடக்கும்போது காற்றுடன் மிகக் கனமழை பெய்யக்கூடும்.

இதனால் வங்காள விரிகுடா கடற்பகுதிகளில் எதிர்வரும் 16ஆம் திகதி வரை மீன்பிடி மற்றும் கடற்படை நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் என காலநிலை அவதான நிலையம் கேட்டுக்கொண்டுள்ளது. (மு)

# ஜனாதிபதியை...

தாக தகவல்கள் வெளியாகியுள்ளன. கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு நாடாளுமன்றத்தை கலைத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் தலதா மாளிகைக்கு சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார்.

இதன் பின்னர் அஸ்கிரிய மற்றும் மல்வத்த பீடங்களின் மகாநாயக்க தேரர்களை சந்திக்க திட்டமிட்டிருந்தார். இதற்கமைய மகாநாயக்க தேரர்களை சந்திக்க வரவுள்ளதாக தூது அனுப்பியுள்ளார். நாட்டில் தற்போதுள்ள நிலையில், ஜனாதிபதி சந்திப்பது பொருத்தமற்றது எனவும் சந்திக்க முடியாது எனவும் மகாநாயக்க தேரர்கள் கூறியுள்ளனர்.

இதனை அடுத்து மகாநாயக்க தேரர்கள் இருக்கும் மஹா விகாரைக்கு செல்வதை தவிர்த்துள்ள ஜனாதிபதி உடனடியாக கொழும்பு திரும்பியதாக கூறப்படுகிறது.

இலங்கை வரலாற்றில் முதல் முறையாக நாட்டின் மிகப்பெரிய பௌத்த பீடங்களின் மாநாயக்க தேரர்கள் ஜனாதிபதி ஒருவரை சந்திக்க மறுத்துள்ள சம்பவம் நடந்துள்ளதாக அரசியல் தரப்பில் பேசப்படுகிறது. இதற்கு முன்னர் தம்மை சந்திக்க வந்த எந்த அரச தலைவர்களையும் மாநாயக்க தேரர்கள் திருப்பி அனுப்பியதில்லை என அஸ்கிரிய மற்றும் மல்வத்து பௌத்த பீடங்களின் தகவல்கள் தெரிவிக்கின்றன. (மு)

# ஜனநாயகத்தை...

தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, நாடாளுமன்றம் கலைக்கப்பட்டமைக்கு எதிராக நீதிமன்றம் செல்லவிருப்பதாக ஜேவிபியும் தெரிவித்துள்ளது. நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட ,அந்தக் கட்சியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க இதனைக் கூறியுள்ளார்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதற்கு எதிராக இன்று உயர் நீதிமன்றத்தை நாடவுள்ளோம் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

இந்நிலையில், பலவந்தமாக பறித்தெடுக்கப்பட்ட ஆட்சியை மீண்டும் அவர்களிடமே ஒப்படைப்பதற்கு நாங்கள் தயாரில்லை. ஜனாதிபதிக்கு பிடிக்காவிட்டால் தொடர்ந்து பிரதமரை மாற்றிக்கொண்டே இருப்பார் என்றும் கூறினார்.

மக்காவிற்கான வழிபாட்டு பயணத்தை நிறைவுசெய்து கொண்டு நேற்று (ஞாயிற்றுக்கிழமை) நாடு திரும்பிய நிலையில், கட்டுநாயக்கவில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவுப் ஹக்கீம் இதனை தெரிவித்தார். தேர்தல் தொடர்பில் அச்சமடையப்போவதில்லை என்ற போதிலும், பாராளுமன்றம் கலைக்கப்பட்டமை தொடர்பில் நீதிமன்ற நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியும் மக்கள் விடுதலை முன்னணியும் அறிவித்துள்ளன. அரசியலமைப்பை காலால் உதைத்து, பாராளுமன்றத் தேர்தலை நடத்தவுள்ளமையை தாம் எதிர்ப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவிததிருந்தார். (மு)

# தேசிய ஐக்கியம் இல்லாததே பிரச்சினைகளுக்கு காரணம்

## டியூ.குணசேகர சுட்டிக்காட்டு



(கொழும்பு)

நாட்டில் நிலவும் பிரச்சினைகளுக்கு நாட்டுக்குள் தேசிய ஐக்கியமின்மையே அடிப்படை காரணம் என இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் டியூ. குணசேகர தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் நேற்று முன்தினம் நடைபெற்ற இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 75 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கை சுதந்திரமடைந்து 70 ஆண்டுகள் கடந்துள்ள போதிலும் இலங்கையர்கள் என்ற வகையில் அனைவருக்கும் ஒன்றிணைய முடியாது போயுள்ளது எனவும் அவர் இதன் போது சுட்டிக்காட்டியுள்ளார்.

முன்னாள் பிரதமர் டி.எம். ஜெயரத்ன, அமைச்சர்கள் சமல் ராஜபக்ஷ, தினேஷ் குணவர்த்தன ஆகியோரும் இந்த விழாவில் கலந்து கொண்டனர். (இ-7)

# ரக்பி போட்டியில் யோஷித அணி தோல்வி

## மைதானத்தில் கவலையுடன் ஷிராந்தி





(கொழும்பு)

நாடு அரசியல் ரீதியான பெரும் நெருக்கடியை எதிர் நோக்கியுள்ள நிலையில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் பாரியார் ஷிராந்தி ராஜபக்ஷ தனது இரண்டு மகன்கள் விளையாடும் ரக்பி போட்டியை காண நேற்று முன்தினம் மைதானத்திற்கு சென்றிருந்திருந்தார்.

முன்னாள் ஜனாதிபதியும், தற்போதைய பிரதமருமான மகிந்த ராஜபக்ஷ போட்டியை காண வந்திருக்கவில்லை. ராஜபக்ஷ தம்பதியின் மகன்களான யோஷித மற்றும் ரோஹித ஆகியோர் சீ.எச். ரக்பி அணியில் விளையாடி வருகின்றனர்.

யோஷித ராஜபக்ஷ அணியின் தலைவர். நாமல் ராஜபக்ஷ அணியின் பயிற்சியாளர் இல்லை என்ற போதிலும் அணியினருக்கு பயிற்சியளிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த ரக்பி போட்டியில் சீ.ஆர். அணி சீ.எச் அணியை 24 - 23 என்ற புள்ளிகள் அடிப்படையில் தோற்கடித்தது குறிப்பிடத்தக்கது. (இ-7)

### வடக்கு பாடசாலைகளிலுள்ள

# ஆசிரியர்கள் கைவிரல் அடையாளமிடும் இயந்திரத்தை உடன் அகற்ற வேண்டும்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்திலுள்ள பாடசாலைகளில்நடைமுறையிலுள்ள ஆசிரியர்கள் கைவிரல் அடையாளம் இடும் இயந்திரத்தினை அகற்ற வேண்டும் என்ற கோரிக்கை இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கத்தின் வடமாகாண மாநாட்டில் முன்மொழியப்பட்டுள்ளது.

இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கத்தின் ஏற்பாட்டில், வடமாகாண பேராளர் மாநாடு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் கடந்த 9 ஆம் திகதி மாலை இடம் பெற்றது. இதன் போதே மேற்படி தீர்மானம் முன்மொழியப்பட்டது.

வடமாகாணத்திலும் ஆசிரியர்கள் போக்குவரத்து சிரமங்கள் உள்ளிட்ட பல சிரமங்களுக்கு மத்தியில் சேவையாற்றி வருகின்றனர். இவ்வாறு சேவையாற்றும் அவர்களுக்கான பிரச்சினைகளும் தீர்க்கப்படாமல் உள்ளது.

இதனால் அவர்களின் அனைத்து பிரச் சினைகளும் தீர்க்கப்படும் வரையில், அவர்களை கஷ்டத்துக்குள்ளாக்கும் கை விரல் அடையாளம் இடும் இயந்திரத்தை பாடசாலை களில் அகற்ற வேண்டும்.

கொள்ளையடிக்கப்பட்ட மற்றும் வழங்கப்படாத ஆசிரியர்களின் சம்பள நிலுவைகள் வழங்கப்படுதல், சம்பள அதிகரிப்பு, ஆசிரியர்களுக்கான சுதந்திரம் ஏற்படுத்தல், ஆசிரியர்களின் எழுத்து வேலைகளைக் குறைத்தல், சீரான இடமாற்றத்தை ஏற்படுத்தல், பதவி உயர்வுகளை வழங்குதல், ஆசிரியர்களின் விடுதிகளில் வசதிகள் ஏற்படுத்தல் மற்றும் மேம்படுத்தல் உள்ளிட்ட பல முன்மொழிவுகள் இதன் போது முன்மொழியப்பட்டன.

இவை ஜனாதிபதிக்கும் மற்றும் கல்வி அமைச்சருக்கும் தெரியப்படுத்தி உடன் நடவடிக்கை எடுக்க வலியுறுத்துவதுடன், இவற்றை நடைமுறைப்படுத்த தொடர் போராட்டங்களும் முன்னெடுக்கப்படும் எனவும் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுனில் ஹந்துன்நெத்தி, இராமலிங்கம் சந்திரசேகர், இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கச் செயலாளர் மகிந்த ஜெயசிங்க, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் பொன் பாலசுந்தரம்பிள்ளை உள்ளிட்ட பலர் இதில் கலந்துகொண்டனர். (இ-26)

# மக்கள் விரும்பும் வகையில் தேர்தலை எதிர்கொள்வோம்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலை மக்கள் விரும்பும் வகையில் நாம் எதிர்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும் என மீள்குடியேற்றம், புனரமைப்பு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்துமத அலுவல்கள் விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று நாடாளுமன்ற தேர்தல் மற்றும் சமகால அரசியல் தொடர்பாக வடக்கு - கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த கட்சியின் முக்கியஸ்தர்களுடனான பொதுச்சபைக் கூட்டம் நடைபெற்றது. இதில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போது நாட்டில் ஏற்பட்ட அரசியல் சூழ்நிலை மாற்றத்தால் நாடாளுமன்ற தேர்தல் ஒன்றை நாம் எதிர்கொள்ளவேண்டியுள்ளது. இது எம்மைப் பொறுத்தளவில் வரவேற்கத்தக்க ஒரு விடயமாகவே காணப்படுகின்றது.

கடந்த மூன்றரை ஆண்டுகளாக நாட்டில் நல்லாட்சி என்று கூறி ஆட்சி செய்தவர்கள் மக்களையும் நாட்டின் அபிவிருத்தியையும் முன்னேறவிடாது தடுத்துவந்தார்கள். இதற்கு முண்டு கொடுத்த தமிழ்த் தரப்பினர் தமது தனிப்பட்ட சுகபோகங்களை மட்டும் பெற்று தமிழ் மக்களை வீதிக்கு இறங்கிப் போராடும் நிலைக்கு தள்ளியிருந்தார்கள்.

இதனால் ஆட்சியாளர்கள் மீது மக்கள் மத்தியில் பெரும் அவநம்பிக்கை உருவாகியிருந்தது. அதன் விளைவாக புதிய அரசு ஒன்று உருவாக்கப்பட்டது. இதில் எமக்கு பொறுப்பு மிக்க அமைச்சு பொறுப்பொன்று வழங்கப்பட்டது.

ஆனாலும் அரசியல் குழப்பங்களால் ஜனாதிபதியின் அதிகாரத்தை கொண்டு நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தல் ஒன்றுக்கான அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது. இருந்தும் எமது அமைச்சின் அதிகாரம் தொடர்ந்தும் இருக்கும்.

அமைச்சினூடாக புதிய செயற்றிட்டங்களை உருவாக்க முடியாது. ஆனாலும் கடந்த காலங்களில் முன்மொழியப்பட்ட திட்டங்களை மக்கள் நலன்சார்ந்து மக்களது நலனுக்காக பயன்படுத்த முடியும்.

அந்தவகையில் தமது எதிர்கால நலன்கருதியதாக எதிர்கொள்வார்கள் என்று நம்பிக்கை எம்மிடம் உள்ளது. எனவே வரவுள்ள நாடாளுமன்ற தேர்தலை மக்களின் விருப்புக்கேற்ப அவர்களது நலன்களில் இருந்து எதிர்கொள்ள நாம் தயாராவோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பாராளுமன்றம் கலைந்தாலும் புதிய அமைச்சரவை கலையாது

## சுசில் பிரேமஜெயந்த கூறுகிறார்



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாராளுமன்றத்தை கலைத்திருந்த போதிலும், புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டதன் பின்னர் நியமிக்கப்பட்ட அமைச்சரவை அமைச்சர்கள் எதிர்வரும் ஜனவரி 5 ஆம் திகதி வரை இடைக்கால அரசாங்கத்தின் அமைச்சர்களாக செயற்படுவார்கள் என பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள் மற்றும் நீதித்துறை அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த தெரிவித்தார்.

பிரதம அமைச்சர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். (இ-7)

# இராசி பலன்

12.11.2018

ஐப்பசி 26, திங்கட்கிழமை

சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு

பஞ்சமி பின்னிரவு 2.28 மணிவரை

பூராடம் பின்னிரவு 3.42 மணிவரை

சுபநேரம் 12.06-1.36 மணிவரை

இராகுகாலம் 7.36-9.06 மணிவரை

ஸ்கந்த பஞ்சமி

வளவன்

கிரகநிலை: செவ் | ராகு | கேது | சனி சந் | குரு. புதன் | சூரி. சுக்

சந்திராஷ்டமம்: மிருகசீரிடம்

**மீனம்** — பெரிய மனிதர்களின் தொடர்புகள் அனுகூலம் தரும், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள் குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள், போசன சுகமுண்டு.

**மேடம்** — குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், பூர்வீகச் சொத்துக்களால் கணிசமான ஆதாயமுண்டு, ஆன்றோர்களின் சந்திப்புண்டு, மறைமுகப் போட்டிகளைச் சமாளிப்பீர்கள்.

**இடபம்** — மனக்குழப்பம் அகல கந்தனை வழிபட வேண்டிய நாள்; கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, அடுத்தவர் விவகாரங்களி தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது

**மிதுனம்** — பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து இணையலாம்.

**கும்பம்** — உன்னதமான வாழ்வுக்கு அத்திபாரம் அமைத்துக் கொள்வீர்கள், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், பொதுவாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள்.

**கடகம்** — மறைமுக எதிர்ப்புகள் மாறும், தொலைபேசி வழியில் பொன்னான தகவல்கள் வந்து சேரலாம், வழிபாடு மகத்துவம் தரும், உடல் நலன் சீராகி உற்சாகப்படுத்தும்.

**மகரம்** — வீட்டை அழகுபடுத்துவதில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், மனச் சிக்கல்கள் சற்று அதிகரிக்கும்.

**சிம்மம்** — உள்ளம் மகிழும் சம்பவம் இல்லத்தில் நடைபெற லாம், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், பணத் தேவைகள் பூர்த்தியாகும், வாய்ப்புண்டு, தொழில் நன்மையுண்டு.

**தனுசு** — மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை, செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்** — தனவரவு திருப்திதரும் வகையில் அமையும், தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, சுப செய்திகள் வந்து சேரலாம், ரோக பயமுண்டு.


**துலாம்** — சுறுசுறுப்பாக செயற்படுவீர்கள், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், எடுத்த காரியத்தை முடிக்க சகோதர வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**கன்னி** — பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறுவீர்கள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், பெற்றோரின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

# 'ஆளுக்கொரு மரம் நடுவோம் நாளுக்கொரு வரம் பெறுவோம்' நல்லூரில் மலர்க்கண்காட்சி







(யாழ்ப்பாணம்)

வடமாகாண மர நடுகை மாதத்தை முன்னிட்டு "ஆளுக்கொரு மரம் நடுவோம் நாளுக்கொரு வரம் பெறுவோம்" என்ற தொனிப்பொருளில் மரநடுகையும் மலர்க்கண்காட்சியும் நேற்று முன்தினம் நல்லூர் சங்கிலியன் பூங்காவில் இடம்பெற்றது.

தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந் நிகழ்வில் கலை நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து சிறப்புரைகள் இடம்பெற்றதுடன், சிறப்பு விருந்தினர் தொல். திருமாவளவனின் ஏற்பாட்டில் தாய் மண் அறக்கட்டளையின் சார்பில் யாழ்ப்பாணத்தில் தெரிவு செய்யப்பட்ட 100 மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகளும் மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினராக இந்தியாவில் இருந்து வருகை தந்த விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் முனைவர் தொல்.திருமாவளவன், தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன், அரசியல் ஆய்வாளர் நிலாந்தன், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்த மலர்க் கண்காட்சியை எதிர்வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை வரை தினமும் காலை 9 மணி முதல் இரவு 8 மணி வரை பொதுமக்கள் பார்வையிட முடியும்.

பூ மரங்கள், பழ மரங்களின் விற்பனையும் இடம்பெறும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ-9)

## மாட்டிறைச்சிக்கடையை நடத்துவதில் சாவகச்சேரி நகர சபையினர் உறுதி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர சபையின் மாட்டிறைச்சிக் கடையை 2019 ஆம் ஆண்டு உரிமம் பெறுபவர்களுக்கு மாட்டிறைச்சிக்கடை மற்றும் கொல்களம் தொடர்பான உபவிதிகளைச் சேர்த்து மாட்டிறைச்சிக்கடையை தொடர்ந்து நடத்த அனுமதி வழங்குவதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் நகர சபையின் 13 உறுப்பினர்கள் கையொப்பமிட்டு நகர சபையின் மாட்டிறைச்சிக் கடை மூடப்பட வேண்டும் எனவும், 2019 ஆம் ஆண்டு மாட்டிறைச்சிக்கடை கேள்வி கோரப்படக்கூடாது எனத் தெரிவித்து நகரசபை செயலாளரிடம் கடிதம் ஒன்றைக் கையளித்திருந்தனர்.இவ் விடயம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நகரசபையின் அமர்வின் போது பேசப்பட்டு சபையில் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டது.

இதன் போது 7 உறுப்பினர்கள் மாட்டிறைச்சிக் கடையை மூட வேண்டும் எனவும், தவிசாளர் உட்பட எட்டு உறுப்பினர்கள் மாட்டிறைச்சிக்கடையை பூட்டாமல் உப விதிகளை சட்டத்தில் சேர்த்து தவறுகள் இடம்பெறாமல் தடுப்பது எனவும், மூவர் நடுநிலையும் வகித்தனர். இதனால் பெரும்பான்மை அடிப்படையில் உப விதிகளைச் சேர்த்து மாட்டிறைச்சிக் கடை மற்றும் கொல்கள விடயத்தில் எந்தத் தவறுகளும் இடம்பெறாத வகையில் தொடர்ந்து மாட்டிறைச்சிக்கடை நடத்துவதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இது தொடர்பாக தவிசாளர் தெரிவிக்கையில்,

மாட்டிறைச்சிக்கடையை மூடுவதனால் நகர சபையின் வருமானம் பாதிக்கப்படும்.ஒவ்வொரு வருமானத்தையும் இல்லாமல் செய்துவிட்டு நகரில் அபிவிருத்தியை மேற்கொள்ள வேண்டும் என்றால் எவ்வாறு அபிவிருத்தியை மேற்கொள்வது?ஆகவே நாம் ஒன்றை மூடி வருமானத்தை முடக்காமல் அதில் உள்ள குறைபாடுகளை நீக்கி அதனை திறம்பட தொடர்ந்து மேற்கொண்டு வருவதே சிறந்தது. மாட்டிறைச்சிக் கடை விடயத்தில் எந்தத் தவறுகளும் இடம்பெறாத வகையில் உபவிதிகளை நாம் சேர்த்துக் கொள்வதே சிறந்த வழி என அவர் மேலும் தெரிவித்தார். (இ-30)

## 'ஒருநாள் கழிந்தது' குறுநாடகத்திற்கு 6 தேசிய விருதுகள்





கலாசார அமைச்சின் அரச ஊழியர்களுக்கிடையிலான ஆக்கத்திறன் போட்டியில் ஒருநாள் கழிந்தது என்ற குறுநாடகத்தை மேடையேற்றி சிறந்த இயக்குநர், சிறந்த ஒ ளி அமைப்பு ,சிறந்த மேடை நிர்வாகம், சிறந்த நடன வடிவமைப்பு, சிறந்த நாடகம், சிறந்த கையெழுத்து பிரதி (3 ஆம் இடம்) ஆகிய ஆறு தேசிய விருதுகளை 5 முதலிடமும் ஒரு மூன்றாம் இடமும் வென்ற யாழ். பிரதேச கலாசார அதிகார சபையின் பொருளாளரும் கிராம உத்தியோகத்தருமான சா.வி.ஜோண் கலிஸ்ரஸ் இவ் விருதுகளை பெற்றுக் கொண்டார். (இ-107)

## நகர சபையின் விதிமுறைகள் சட்டங்கள் அடங்கிய கையேடு அனைவருக்கும் வழங்கப்படும்

### சாவகச்சேரியில் தீர்மானம் நிறைவேற்றம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட 11 வட்டாரங்களிலும் உள்ள சகல குடும்பங்களிற்கும் நகர சபையின் விதிமுறைகள் மற்றும் சட்டங்கள் அடங்கிய கையேடு வழங்கப்பட வேண்டும் என சாவகச்சேரி நகரசபையின் உப தவிசாளர் பாலமயூரன் பிரேரணை ஒன்றினை முன்வைத்துள்ளார்.கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சபை அமர்வின் போதே அவர் இந்தப் பிரேரணையை முன்வைத்தார்.

மக்கள் நகரசபையினரை சரியான முறையில் புரிந்து கொள்ளாமைக்கும், நகர சபையினருடன் முரண்படவும் முக்கிய காரணம் நகரசபை தொடர்பான சட்ட விதிமுறைகளை அவர்கள் அறியாமையே.ஆகவே நகர சபையினராகிய எமது கடமை மக்களுக்கு தெளிவூட்டி புரிய வைப்பது. மக்களைத் தெளிவுபடுத்தும் பட்சத்தில் அவர்கள் நகரசபை சட்டத்திற்கு முரணான காரியங்களில் ஈடுபடமாட்டார்கள். அத்துடன் நகரசபையின் செயற்பாடுகளுக்கும் இடையூறு ஏற்படுத்த மாட்டார்கள். ஆகவே சுகாதார விதிமுறைகள்,புதிய கட்டடம் கட்டுவதற்கான விதிமுறைகள், முத்திரை தீர்வைகள் தொடர்பான தெளிவு படுத்தல்கள் அடங்கிய நகர சபையின் சகல விதிமுறைகளும் உள்ளடக்கப்பட்ட கையேடு நகரசபை எல்லைக்குட்பட்ட ஒவ்வொரு வீட்டிற்கும் வழங்கப்பட வேண்டும். இதன் மூலம் மக்களுக்கும் நகர சபையினருக்கும் பிரச்சினைகள் அற்றுப் போய் புரிந்துணர்வு ஏற்படும் என அவர் மேலும் தெரிவித்தார். குறித்த பிரேரணை சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானமாக்கப்பட்டது (இ-30)

## சைவப்புலவர் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தினால் நடத்தப்படும் 2019 ஆம் ஆண்டுக்கான இளஞ்சைவப்புலவர் மற்றும் சைவப்புலவர் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இளஞ்சைவப்புலவர் பரீட்சைக்குத் தோற்றுபவர்கள் பின்வரும் தகுதிகளில் ஒன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும். சைவபரிபாலன சபையால் நடத்தப்படும் சைவசித்தாந்த பிரவேச பால பண்டிதர் பரீட்சையில் சித்தி அல்லது கல்விப்பொதுத்தராதர உயர்தரப்பரீட்சை (இந்து சமயம் அல்லது இந்துநாகரீகம் உட்பட) சித்தி அல்லது சைவசமய அறிவு அனுட்டானங்களை அனுட்டித்து வரும் 40 வயதிற்கு மேற் பட்டோர் விண்ணப்பிக்க முடியும்.

சைவப்புலவர் பரீட்சைக்குத் தோற்றுபவர்கள் கீழ் வரும் தகுதிகளில் ஒன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டம் அல்லது இளஞ்சைவப்புலவர் தேர்வு அல்லது சித்தாந்த பண்டிதர் தேர்வு (சைவ பரிபாலனசபை) அல்லது பண்டிதர் தேர்வு (ஆரிய திராவிடபாசா விருத்திச் சங்கம்) சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்க விரும்புவர்கள் 100 ரூபா செலுத்தி விதிகள் பாடத்திட்டத்துடன் விண்ணப்பப்படிவத்தினை பெற்று பரீட்சை கட்டணமாக 500 ரூபாவினை கொக்குவில் தபாற்கந்தோரில் பெறத்தக்கதாக காசுக் கட்டளையை தலைவர் அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் என்னும் பெயருக்கு எடுத்து எதிர்வரும் 31.12. 2018 இற்கு முன்பாக சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை தலைவர், அகில இலங்கை சைவப்புலவர் சங்கம், இல 153, கே.கே. எஸ்.வீதி, கொக்குவில் என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். பிந்திய விண்ணப்பங்கள் மேலதிக அறவீட்டுக்கட்டணம் 100 ரூபாவுடன் 31.01.2019 வரை ஏற்றுக் கொள்ளப்படும். அதற்குப்பிந்திய விண்ணப்பங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

பரீட்சைகள் சித்திரை மாதம் இறுதி வாரத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெறும். பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் சித்திரை மாதம் முதல் வாரத்தில் விண்ணப்பதாரிகளின் தனிப்பட்ட முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும்.

இப் பரீட்சைகள் தொடர்பான மேலதிக விடயங்களை 021 222 3458. 077 613 2176 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும் என அகில இலங்கை சைவப்புலவர் சங்கச் செயலாளர் சைவப்புலவர் எஸ்.ரி.குமரன் அறிவித்துள்ளார். (இ-7)

## வலி.மேற்கில் கசிப்பு விற்பனையால் சீவல் தொழிலாளர் பெரும் பாதிப்பு

### சங்கானை ப.தெ.அ.கூ.சங்கம் கவலை

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்கில் சில இடங்களில் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை அதிகரித்துள்ளதால் சீவல் தொழிலாளர்கள் பெரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர் என சங்கானை பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் கவலை வெளியிட்டுள்ளது.

கசிப்பு விற்பனை செய்பவர்களால் சமூகத்தில் பல்வேறு சீர்கேடுகள் ஏற்பட்டுள்ளதுடன் சீவல் தொழிலாளர்கள் குடும்பங்கள் வாழ்வாதார ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

நீண்ட காலமாக இடம்பெற்றுவரும் இச்சட்ட விரோத செயற்பாட்டை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும் என மேற்படி சங்கத் தலைவர் எஸ்.காந்தன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தில் வலி. மேற்கு பிரதேச செயலகம், மதுவரித் திணைக்களம் மற்றும் வட்டுக்கோட்டைப் பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.


இதேவேளை, வலி.மேற்கில், சுழிபுரம் மற்றும் அதை அண்டிய சில பிரதேசங்களில் நீண்ட காலமாக இடம்பெற்றுவரும் கசிப்பு உற்பத்தியைக் கட்டுப்படுத்துவதில் வட்டுக்கோட்டைப் பொலிஸார் காத்திரமான நடவடிக்கை எடுக்கவில்லை என வலி.மேற்கு பிரதேச சபையின் கடந்த அமர்விலும் கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-9)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## மு/ புதுக்குடியிருப்பு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை- தரம்- 05 புலமைப்பரிசில் பரீட்சை- 2018


தனேஸ்வரன் சாருஜன் - 191



செல்வகுமார் நேருஜன் - 189


செல்வி.நீரஜா லிங்கேஸ்வரன் - 188


செல்வி.ஷாமிரா சதீஸ்குமார் - 186


சுதசீலன் யுசாந் - 185


சுதாகரன் சொலமன் - 185


செல்வி.டதுர்சிகா லட்சுமிகாந்தன் - 184


செல்வி.கதிர்விழி குணாகரன் - 181



செல்வி.சுடர்ணா சசிகரன் - 180



செல்வி.ஆரணி நிரஞ்சன் - 178



செல்வி.தமிழிசை ஜெயக்குமார் - 178


செல்வி.அக்சயா ஜீவராசா - 178


சந்திரகுமார் கோவர்த்தனன் - 176


ஜெயக்குமார் கிங்ஸ்ரொயிட் - 176



செபஸ்தியாம்பிள்ளை ரொக்ஷன் - 176


செல்வி.சிவாருகா குலதீபன் - 174


நவநீதன் கேதுசன் - 172


செல்வி.சவினா விஜிதரன் - 172


செல்வி.எழினிகா ஜெயசுதன் - 172


ஜீவாகரன் சுகிர்தன் - 171


செல்வி.ஆராதனா நிக்ஷன் - 170


செல்வி.தமிழ்நிலா சிவகுமார் - 170


செல்வி.நிவிதா அமீஸ்ரன் - 169


செல்வி.பகீரதி சசிக்குமார் - 168



சுபாங்கன் அனுராகவன் - 168


செல்வி.கர்னி இதயாதன் - 168


ஜெயசீலன் கலையகன் - 167


மோகானந்தசிவம் பவிர்சன் - 166


இராசகுமார் பவானந்தன் - 166


சுரேந்திரன் நிலவன் - 165


துஷ்யந்தன் சாருஜன் - 164


செல்வி.கிரோமி றதீபன் - 164


செல்வி.உஷாந்தினி உதயசீலன் - 163

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




## செல்வி
## சிவாகரன் அபிவர்சி

எமது பாடசாலை மாணவி
செல்வி சிவாகரன் அபிவர்சி
அவர்கள் 2018 ஆம் ஆண்டு நடைபெற்ற அகில இலங்கைத் தமிழ் மொழித்தினப் போட்டியில் பிரிவு I இல் பாவோதல் நிகழ்வில் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றமைக்காக கடந்த 2018.10.27 ஆம் திகதி மாத்தளை இந்துக் கல்லூரியில் கௌரவ கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஸ்ணனிடமிருந்து தங்க விருதினைப் பெற்றுக்கொண்டார். இவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு எதிர்காலத்திலும் பல சாதனைகள் படைத்து சிறப்புடன் வாழ மனம் நிறைந்து வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
பாடசாலைச் சமூகம்,
மு/ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை.

(6970)

# அடிப்படை வசதிகள் எதுவும் அற்ற நிலையில் காஞ்சிராமோட்டையில் மீள்குடியேறிய மக்கள்



(குருமன்காடு)

வவுனியா வடக்கு, காஞ்சிராமோட்டை மக்கள் மீள்குடியேறிய போதும் அடிப்படை வசதிகள் இன்றி பல்வேறு சிரமங்களை.அனுபவித்து வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

வவுனியா வடக்கு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட காஞ்சிராமோட்டை மற்றும் அதனை அண்டிய காட்டு பூவரசங்குளம், நாவலர் பண்ணை போன்ற கிராமங்களில் 1977 ஆம் ஆண்டு முதல் 300 குடும்பங்கள் வரை வாழ்ந்து வந்தன.

2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்த பின்னர் முதல் கட்டமாக 9 குடும்பங்கள் குடியேறின. அதில் 6 குடும்பங்கள் அடிப்படை வசதிகள் இல்லாமையால் மீண்டும் இடம்பெயர்ந்து சென்ற நிலையில் 3 குடும்பங்கள் தொடர்ந்தும் வசித்து வந்தன. நல்லாட்சி அரசாங்கத்தின் கோரிக்கைக்கு அமைவாக இந்தியாவிலிருந்து வருகை தந்திருந்த 38 குடும்பங்கள் காஞ்சிராமோட்டை மற்றும் அதன் அயல் கிராமங்களில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டன.

தற்போது மின்சார வசதிகள் அற்ற நிலையிலும் காட்டு மிருகங்களின் அச்சுறுத்தலுக்கு மத்தியிலும், இம் மக்கள் போக்குவரத்து வசதிகள், குடிநீர் வசதிகள் என எந்தவித அடிப்படை வசதிகளும் அற்ற நிலையில் காட்டு விலங்களின் அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் வாழ்ந்து வருகின்றனர்.

அத்துடன், நீண்டகாலமாக அம் மக்கள் இக் காணிகளில் வசிக்காமையால் அவை மரங்களாலும், புதர்களாலும் நிறைந்து காடுகள் போல் காட்சியளிக்கின்றது. அவற்றை துப்புரவு செய்து அக் காணிகளில் மக்கள் குடியேறுகின்ற போது வன இலாகா திணைக்களம் அம்மக்களின் காணிகளை வன இலாகாவிற்கு சொந்தமானது என தெரிவித்து அவர்கள் குடியேறுவதற்கான அனுமதியை வழங்க மறுத்து வருகிறார்கள். அம் மக்கள் வாழ்ந்தமைக்கான தடயங்கள் பல இருந்தும் வன இலாகா அதிகாரிகள் அம் மக்களின் மீள்குடியேற்றத்திற்கு தடை ஏற்படுத்துவதாக மக்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

இம் மக்களுக்கான தற்காலிக வீடுகள் வழங்கப்பட்டு தற்போது தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் 5 இலட்சம் பெறுமதியான வீட்டுத் திட்டங்கள் வழங்கப்பட்ட போதும் அந்த வீட்டினை கட்டி முடிக்க முடியாத வகையில் வன இலாகாவினர் செயற்படுகின்றனர்.

இதனால் எந்தவித அடிப்படை வசதிகளும் அற்ற நிலையில் பாடசாலை செல்லும் சிறுவர்கள், கைக்குழந்தைகளுடன் கொட்டும் மழைக்கு மத்தியில் இம் மக்கள் தற்காலிக குடிசைகளில் கண்ணீருடன் வாழ்ந்து வருகின்றனர்.

இதேவேளை, இம்மக்களினுடைய மீள்குடியேற்றப் பிரச்சினை தொடர்பில் மாவட்ட மற்றும் பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டங்களில் ஆராயப்பட்டதுடன், பல்வேறு அரசியல்வாதிகளும் குறித்த பகுதிக்கு சென்று மக்களினுடைய பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடிய போதும் எந்தவித முன்னேற்றமும் ஏற்படாமை குறிப்பிடத்தக்கது. (2-250)




# வவுனியாவில் கடும் பனிமூட்டம்



(குருமன்காடு)

நாட்டில் நிலவுகின்ற சீரற்ற காலநிலை காரணமாக வவுனியாவில் கடும் பனிமூட்டம் காரணமாக வாகன சாரதிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துள்ளதுடன், மக்களது இயல்பு வாழ்க்கையும் பாதிப்படைந்துள்ளது.

நேற்று அதிகா லையில் இருந்து காலை 8 மணி வரை வவு னியாவில் கடும் பனிப்பொழிவு ஏற்பட்டது.

கடந்த சில நாட்களாக வவுனியாவில் கடும் மழை பெய்து வந்த நிலையில் தற்போது பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது.

இதன்காரணமாக ஏ-9 வீதியும் பனிமூட்டமாக காட்சியளித்தது. பனிமூட்டத்தால் காலையில் இவ்வீதி வழியாக பயணங்களை மேற்கொண்ட வாகனங்களின் சாரதிகள் அசௌகரியங்களை எதிர்நோக்கியிருந்தனர். (2-250)

# கட்டாக்காலி நாய்களின் தொல்லை வீதிகள், பாடசாலை வளாகங்களில் அதிகரிப்பு



(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதுடன், அதிகளவானோர் நாய்க்கடிகளுக்கு இலக்காகி வருவதுடன் விபத்துக்களும் இடம்பெற்று வருகின்றன.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் தற்போது கட்டாக்காலி நாய்க்ள் பெருமளவில் அதிகரித்துக் காணப்படுகின்றன.

குறிப்பாக, பிரதான வீதி மற்றும் நகரின் வர்த்தக நிலையங்களை அண்மித்த பகுதிகளில் இவ்வாறு கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகளவிலேயே காணப்படுவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு நாய்களின் தொல்லைகளால் அதிகளவான விபத்துக்கள் இடம்பெற்று வருவதுடன், பலர் நாய் கடிகளுக்கும் இலக்காகி வருவதாகவும் வர்த்தகர்கள் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக, புதுக்குடியிருப்பு பகுதியில் உள்ள பாடசாலைச்சூழல்களிலும் இவ்வாறான கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதாகவும் பொதுமக்கள், ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர். (2-315)

# தூக்கில் தொங்கிய நிலையில் முதியவர் சடலமாக மீட்பு

(பனிக்கன்குளம்)

வவுனியாவில் முதியவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

வவுனியா இறம்பைக்குளத்தில் 82 வயதுடைய முதியவரொருவர் தூக்கில் தொங்கிய நிலையில் நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்க்கப்பட்டவர் செல்வாதேவி (வயது 82) என ஆரம்ப கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸாருடன் இணைந்து தடயவியல் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-281)

# பழுதடைந்த குழாய்க்கிணறு திருத்தி அமைப்பு



(பனிக்கன்குளம்)

வவுனியா வைரவப்புளியங்குளம் சந்தியிலுள்ள பொது குழாய்க்கிணறு ஒன்று சேதமடைந்த நிலையில் நீண்டகாலமாக காணப்பட்டுள்ளது இதையடுத்து நகரசபை உபதவிசாளர் சு.குமாரசுவாமியால் திருத்தி அமைக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு அண்மையில் கையளிக்கப்பட்டுள்ளது.

வவுனியா நகரசபை உபதவிசாளர் சு. குமாரசுவாமியின் கவனத்திற்கு இவ்விடயம் அப்பகுதி மக்களினால் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இந்நிலையில் அக்குழாய்க்கிணறு உபதவிசாளரின் நேரடித்தலையீட்டில் திருத்தி அமைக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கையளிக்கப்பட்டுள்ளது. (2-281)

# தனியாரின் காணியில் ராணுவம் விவசாய செய்கை

(பனிக்கன்குளம்)

வவுனியா இறம்பைக்குளம் பகுதியில் தனியார் ஒருவரின் காணியில் இராணுவத்தினர் விவசாயம் செய்து வருவதாக வவுனியா நகரசபை மற்றும் வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை தலைவர்களிடம் காணி உரிமையாளர் முறையிட்டதையடுத்து குறித்த காணியை அவர்கள் பார்வையிட்டனர்.

யுத்த காலத்தில் 5 ஏக்கர் வயல் காணியை பாதுகாப்புக்காரணங்களுக்காக தமது கட்டுப்பாட்டில் எடுப்பதாகவும் அதற்காக 25000 ரூபா தருவதாகவும் தெரிவித்து உரிமையாளரிடம் இருந்து குறித்த காணியை இராணுவம் அபகரித்ததாக தெரிவித்த நகரசபை தலைவர் தற்போது அக் காணியில் இராணுவத்தினர் நெல் விதைப்பில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இந் நிலையில் குறித்த காணி தொடர்பாக அரசியல் மேல் மட்டங்களுக்கு கொண்டு செல்லவுள்ளதாகவும் இதற்கு தீர்வினை பெற்று கொடுக்க அனைவரும் கரிசனை கொள்ள வேண்டும் எனவும் வவுனியா நகர சபை மற்றும் பிரதேசசபை தலைவர்கள் தெரிவித்தனர். (2-281)

# ஹெரோயினுடன் ஒருவர் கைது

(பனிக்கன்குளம்)

வவுனியாவில் தேக்கவத்தைப்பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் 3மணியளவில் ஹெரோயின் தூளை தமது உடைமையில் விற்பனைக்காக மறைத்து வைத்திருந்தவரை கைது செய்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர். இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது.

தேக்கவத்தைப்பகுதியில் சந்தேகத்தின் அடிப்படையில் பிரஸ்தாப நபரிடமிருந்து 520 மில்லி கிராம் ஹெரோயின் தூள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். 35வயதுடைய சத்தியவான் போல்ராஜ் பாரதிபுரம் பகுதியைச் சேர்ந்தவரையே கைது செய்துள்ளதாகவும் மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (2-281)

# முல்லைத்தீவில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட ஒருதொகுதி மக்களுக்கு நிவாரணப் பொருட்கள்



(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்பட்ட மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட ஒரு தொகுதி மக்களுக்கு நிவாரண பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

கடந்த மூன்று நாட்களுக்கு முன்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்பட்ட அடைமழை காரணமாக 247 குடும்பங்களை சேர்ந்த 759 மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் எஸ்.லிங்கேஸ்வரகுமார் தெரிவித்துள்ளார்.

வெலிஓயா பிரதேசத்தில் மழை வெள்ளம் காரணமாக வீடுகள் ஊற்றெடுத்து உடைந்து வீழ்ந்த நிலையில் சிறுவர்கள், கர்ப்பிணி பெண்கள் உள்ளிட்ட பத்து குடும்பங்களை சேர்ந்த 32 பேர் இடைத் தங்கல் முகாமில தங்கவைக்கப்பட்டுள்ளார்கள்.




இவர்களுக்கான ஒருதொகுதி நிவாரணப் பொருட்களை இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் முல்லைத்தீவு மாவட்ட கிளையினர் அனர்த்த முகாமைத்துவ நிலையத்துடன் இணைந்து வழங்கியுள்ளார்கள்.

தலா முப்பது ஆயிரம் ரூபா பெறுமதியான பொதிகள் பத்து குடும்பங்களுக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இதன்போது முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப்பணிப்பாளர் எஸ்.லிங்கேஸ்வரகுமார் மற்றும் இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் முல்லைத்தீவு மாவட்ட கிளை இணைப்பாளர் க.நிதர்சன் ஆகியோருடன் வெலிஓயா பிரதேச சபை உத்தியோகத்தர்,கிராம அலுவலகர் ஆகியோர் கலந்துகொண்டு பொருட்களை வழங்கிவைத்துள்ளதுடன் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்விடங்களையும் பார்வையிட்டுள்ளார்கள். (2-315)

# துயிலுமில்ல துப்புரவுப்பணி ஆரம்பம்



(பரந்தன்)

கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலுமில்லத்தில் நேற்றுக்காலை சிரமதானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இச் சிரமதானப் பணியில் மாவீரர்களது பெற்றோர், உறவுகள், பொது மக்கள், மாவீரர் துயிலுமில்ல செயற்பாட்டு குழுவினர், அரசியல் கட்சிகள் எனப் பலரும் கலந்துகொண்டுள்ளனர்

கடந்தாண்டு மாவீரர் நாளுக்கான ஏற்பாடுகள் குறுகிய காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டன. இதனால் இம்முறை முன்னதாகவே மாவீரர் நாளுக்கான ஏற்பாடுகளை செய்யும் பொருட்டு துயிலுமில்ல சிரமதானப்பணி முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-312)

# பாடசாலை மாணவர்களுக்கு உதவுதொகை, கற்றல் கருவிகள்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில்-பாடசாலை மாணவர்களுக்கு, மாதாந்தம் சிறிய அளவிலான உதவு தொகை மற்றும் கற்றல் கருவிகள் என்பவற்றை புலம்பெயர் தேசத்தில் வாழும் திருவிணையர் வாகீசன் சுகந்தினி வழங்கிவருகின்றனர்.

குறித்த உதவியானது முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரனினூடாக வழங்கப்பட்டுவருகின்றது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கற்றல் ஊக்குவிப்பினை முன்னிறுத்தியதாக, உதவி கோரி ரவிகரன் மக்கள் தொடர்பகத்தில் விண்ணப்பித்தோரில் தெரிவுசெய்யப்பட்ட மாணவர் ஐவர்க்கு ஓராண்டுக்கான ஊக்குவிப்பு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தெரிவுசெய்யப்பட்ட ஐந்து மாணவர்க்கும் ஒவ்வொருமாதமும் தலா 2ஆயிரம் ரூபா பெறுமதியிலான கற்றல் துணைக்கருவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்வாண்டில் மே மாதத்திலிருந்து ஒக்டோபர் மாதம் வரையான ஆறு மாதங்களுக்குமான 60 ஆயிரம் ரூபா பெறுமதியில் உதவு தொகை மற்றும் கற்றல் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

செப்டெம்பர் மற்றும் ஒக்டோபர் மாதங்களுக்கான உதவுதொகை மற்றும் கற்றல் கருவிகள் நேற்று முன்தினம் ரவிகரனால் அவரது மக்கள் தொடர்பகத்தில் வைத்து வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)




# புகையிரத திணைக்களத்தின் அனுமதியின்றி பாதுகாப்பற்ற பாதையை புனரமைக்க முடியாது



(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் பொன்னகர் மத்தி பகுதியில் புகையிரத திணைக்களத்திற்கு சொந்தமான பகுதியில் அமைந்துள்ள பாதுகாப்பற்ற பாதையை பிரதேச சபை புனரமைக்கவோ அல்லது மாற்றங்களைச் செய்ய முடியாது என்று புகையிரதத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த 2013ஆம் ஆண்டுக்கு பின்னர் புகையிரத வீதிபுனரமைக்கப்பட்டு புகையிரத சேவைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இந்த நிலையில் ஏ-9 பிரதான வீதியில் இருந்து பொன்னகர் மத்தி கிராமத்திற்கு செல்லும் 1985ம் ஆண்டுக்குப் பின்னர் அமைக்கப்பட்ட பாதுகாப்பற்ற வீதிளை புகையிரத விபத்துக்களை தடுக்கும் நோக்கில் புகையிரத திணைக்களம் மூடியுள்ளது.

பொன்னகர் மத்திய பகுதியில் புகையிரத வீதிக்குசமாந்தரமான பாதுகாப்பற்ற நடைபாதைகள் ஊடாகவும் பாதுகாப்பற்ற புகையிரக்கடவைகளையும் பொது மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் கடந்த சில நாட்களாக பெய்த மழை வெள்ளம் காரணமாக பொன்னகர் மத்திய பகுதியில் புகையிரதத்திற்கு அண்மித்த பகுதிகளில் வெள்ளப்பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து ஏ-9 வீதியிலிருந்து பொன்னகர் மத்திக்குச்செல்லும் பாதுகாப்பற்ற பாதை ஒன்றிற்கு நபர் ஒருவர்,

இது பிரதேச சபைக்குச்சொந்தமான வீதியெனத்தெரிவித்து, அப்பிரதேசத்தில் குறிப்பிட்ட சிலரை அழைத்து வீதிக்குக் குறுக்காக வெட்டி தண்ணீர் வெளியேறக்கூடிய வகையில் நீர்ப்போக்கி ஒன்றை வைத்து புனரமைத்துள்ளதுடன், குறித்த வீதிக்கு ஜனவரி மாதத்தில் பெரியபாலம் ஒன்றை அமைத்து புனரமைத்துத் தருவதாகவும் தமக்கு பிரதேச சபை உறுப்பினர் வாக்குறுதி வழங்கியுள்ளதாகவும் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதன் போது அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் சிலருக்கும் புனரமைப்பில் ஈடுபட்டவர்களுக்கும் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன.

இந்நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில்புகையிரதத் திணைக்களத்திடம் தொடர்புகொண்டு கேட்ட போது, பொன்னகர் மத்தி கிராமத்திற்கான பிரதான வீதி திருமுறிகண்டி அக்கராயன் பிரதான வீதியின் புகையிரதக்கடவைக்கு அப்பால்உள்ளது. அதனூடாகவே பொன்னகர் மத்திக்கான பிரதான வீதி அக்கராயன் வீதியில் இருந்து ஆரம்பமாகி பொன்னகர் மத்தி அறிவியல் நகர் ஊடாக செல்கின்றது.

இவ்வாறு புரனமைக்கப்பட்ட பாதை அல்லது புகையிரத வீதிக்கு அருகாகச்செல்கின்ற வீதிகள் பாதுகாப்பற்ற வீதிகளாக காணப்படுகின்றன. இவ்வாறான வீதிகளால் சில புகையிரத விபத்துக்கள் இடம் பெறுகின்றன.

புகையிரதத்திணைக்களத்திற்குச் சொந்தமான பகுதிகளை வீதிகளாக பயன்படுத்துதல்அல்லது அவற்றை திணைக்களங்கள் புகையிரதத்திணைக்களத்தின் அனுமதியின்றி புனரமைக்க முடியாது என்று புகையிரதத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (2-315)

# முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வெள்ளப் பாதிப்புக்களை பார்வையிட்டார்

(கண்டாவளை)

கிளிநொச்சி ஆனந்தபுரம் பகுதியில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனுடன் கிராம அலுவலர் நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள் அடங்கிய குழுவினர் பார்வையிட்டதுடன் எதிர்காலத்தில் இவ்வாறான பாதிப்புக்கள் ஏற்படாது தவிர்ப்பது தொடர்பாகவும் ஆராய்ந்தனர். (2-315)



# பாராளுமன்றக் கலைப்புக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முடிவு

## -மக்கள் காங்கிரஸ் தலைவர் றிசாத்-



(கொழும்பு)
நாட்டின் அரசியலமைப்பை மீறி பாராளுமன்றத்தை உரிய காலத்துக்கு முன்பு ஜனாதிபதி கலைத்துள்ளமைக்கு எதிராக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய முடிவு செய்துள்ளது.

கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐவரும் புனித மக்காவிலிருந்து நாடு திரும்பியவுடன் இந்த வழக்குத்தாக்கல் செய்யப்படுமெனவும் கட்சியின் பாராளுமன்றக்குழு புனித மக்காவில் கூடி இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டிருப்பதாகவும் மக்கள் காங்கிரஸ் தலைவர் றிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

"அரசியலமைப்பை தமக்கேற்றாற் போன்று ஜனாதிபதி கையிலெடுத்து சட்டத்துக்கு முரணான முறையில், தாம் விரும்பியவாறு பாராளுமன்றத்தை கலைத்திருப்பதை எமது கட்சி வன்மையாகக் கண்டிக்கின்றது.

மேலும் நாட்டின் மீயுயர் சட்டமான அரசியலமைப்பில் நடைமுறையில் இருக்கும் பாராளுமன்றம் 4 1/2 வருடங்களுக்கு முன்னதாக கலைக்கப்படக் கூடாதென தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கு மாற்றமாக ஜனாதிபதியின் செயற்பாடு அமைந்திருப்பது ஜனநாயகத்தை கேள்விக்குறியாக்கியுள்ளதுடன் அரசியலமைப்புச் சட்டத்தை கேலிக்குரியதாகவும் மாற்றியுள்ளது" என்றும் மக்கள் காங்கிரஸ் தலைவர் றிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

"எந்தத் தேர்தல்களுக்கும் முகங்கொடுக்க எமது கட்சி தயாராகவே உள்ளது. தேர்தலுக்கு அஞ்சி நாம் நீதிமன்றம் செல்லவுமில்லை.

இவ்வாறான ஜனநாயக விரோத நடவடிக்கைகளை நாங்கள் அனுமதித்தோமேயானால் எதிர்காலத்திலும் ஜனாதிபதி பாராளுமன்றத்தை தனது விருப்பத்திற்கேற்ப எந்த வேளையிலும் கலைக்க முடியும் என்ற நிலை வந்து விடும்.

எனவே இவ்வாறான செயற்பாடுகள் எதிர்காலத்திலும் இடம்பெறாமல் இருப்பதற்காகவே நாங்கள் நீதிமன்றத்தை நாடவுள்ளோம்.

அத்துடன் நாங்கள் நீதிமன்றம் செல்வது மட்டுமன்றி இவ்வாறான தொடர்ச்சியான ஜனநாயக விரோதச் செயற்பாடுகளை மக்களுக்குத் தெளிவுபடுத்தும் செயற்பாடுகளையும் முன்னெடுக்கவுள்ளோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## "நீதிமன்றத்தை நாடுங்கள்"

# வெளிநாட்டு தூதரகங்களில் யாரும் மண்டியிட வேண்டாம்!

## அமைச்சர் வீரவன்ச அறிவுரை

(கொழும்பு)
நாட்டின் தற்போதைய அரசியல் மாற்றங்களில் பிரச்சினை காணப்பட்டால் நீதிமன்றத்தை நாடுமாறும், மாறாக வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு முன் சென்று மண்டியிட வேண்டாம் என்றும் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.



பிரதமர் செயலகத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த சில வாரங்களாக ஐ.தே.க. மற்றும் அவர்களுக்கு சார்பானவர்கள் ஜனநாயக விரோதச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். அரசியல் சர்ச்சையை ஏற்படுத்த சர்வதேசத்துக்கு, முன்னாள் பிரதமர் பிழையான முன்னுதாரணங்களைக் காட்டி வருகின்றார். அலரி மாளிகையில் முகாமிட்டு மத்திய கிழக்கில் ஏற்பட்ட புரட்சியை போல புரட்சியை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர்.

அவர்கள் எப்படி முயற்சித்தாலும் பெரும்பான்மையை நிரூபிக்க முடியாது. நாம் செய்வது பிழை என்றால் உச்ச நீதிமன்றத்திற்குச் செல்லலாம்.

முன்னாள் பிரதமரின் பேச்சை கேட்டு சர்வதேசமும் ஆடுகிறது. ஜனாதிபதி நினைத்திருந்தால் அலரி மாளிகையை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்திருக்கலாம். தன்னைக் கொலை செய்ய எத்தனித்த சூத்திரதாரியையும் அலரி மாளிகையில் விட்டுவைத்து விட்டு ஜனாதிபதி இருக்கின்றார்.

113 பெரும்பான்மையை பெறுவது எமக்கு பெரிய வேலை இல்லை. ஆனால், அதற்கான பதிலை வழங்குமாறு மக்களிடம் பொறுப்பை ஒப்படைத்துவிட்டோம்.

அதற்காகவே நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது. மக்கள் அதற்கு பதிலளிப்பார்கள்.

பிரதமராக மகிந்தவை ஏற்க சபாநாயகர் கரு ஜெயசூரிய மறுத்துவிட்டார். அதற்கு அவருக்கு அதிகாரம் இல்லை. ஜனநாயகத்தின் உயரிய செயற்பாட்டையே தற்போது மேற்கொண்டுள்ளோம். அதற்கெதிராக வேண்டுமென்றால் நீதிமன்றத்திற்கு செல்லலாம். அதனை விடுத்து தூதுவராலயங்களுக்கு முன் சென்று மண்டியிட வேண்டாம்என கேட்டுக் கொள்கின்றோம்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஜனாதிபதியின் தீர்மானம் தவறு என்றால் மக்கள் சரியான பதிலை வழங்குவார்கள்

## அமைச்சர் கம்மன்பில தெரிவிப்பு



(கொழும்பு)
ஜனாதிபதி மேற்கொண்ட தீர்மானம் தவறு என்றால் அதற்கு பொது மக்கள் சரியான பதிலை வழங்குவார்கள் என அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"அதேபோன்று முன்னைய அரசாங்கத்தின் செயற்பாடு தவறு என்றால் பொதுமக்கள் அவர்களுக்குத் தண்டனை வழங்குவார்கள்" எனவும் கம்மன்பில தெரிவித்துள்ளார்.(இ-7)

# மியன்மாரிலும் சீனா ஆதிக்கம் இந்தியாவுக்கு மேலும் நெருக்கடி

(கொழும்பு)
இலங்கை உட்பட இந்தியாவின் அண்டை நாடுகளில் சீனா மேற்கொண்டு வரும் அபிவிருத்தித்திட்டங்களால் இந்தியாவுக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தி வருவதாக இராஜதந்திர தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் அம்பாந்தோட்டையில் துறைமுகத்தை நிர்மாணித்த சீனா, அதனை 99 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு பெற்றுள்ளது. பாகிஸ்தானின் குவாதர் நகரில் சீனா துறைமுகத்தை நிர்மாணித்து வருகிறது.

அத்துடன் பாகிஸ்தான் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் திட்டங்களில் சீனா பெருமளவில் பங்களிப்பு செய்து வருகிறது.

இதனைப்போலவே பங்களாதேஷின் சிட்டகொங்க நகரில் நிர்மாணிக்கப்பட்டு வரும் துறைமுகத்திற்கு சீன அரசு பெருமளவில் நிதியுதவி வழங்கியுள்ளது.

இந்த நிலையில், மியன்மார் நாட்டின் க்யாக்பியூ நகரில் துறைமுகத்தை நிர்மாணிக்கும் பணியில் சீனா ஈடுபட்டு வருகிறது. இது தொடர்பான ஒப்பந்தங்கள் கடந்த வியாழக்கிழமை கைச்சாத்திடப்பட்டுள்ளன.

இவ்வாறு இந்தியாவை சுற்றியுள்ள நாடுகளில், அதிக முனைப்புடன் முதலீடு மற்றும் உட்கட்டமைப்பு பணிகளில், ஈடுபடும் சீனா தற்போது மியன்மாரிலும் துறைமுகத்தை நிர்மாணிக்கும் பணிகளை ஆரம்பித்துள்ளமை இந்தியாவுக்கு பிராந்திய பாதுகாப்பு ரீதியான அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளதாக கூறப்படுகிறது.

இந்தியாவின் அயல் நாடுகளான இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ், மியன்மார் ஆகிய நாடுகளில் துறைமுகம் அமைக்கும் பணியில் சீனா மும்முரம் காட்டி வருவது, இந்தியாவுக்கு நெருக்கடிகளை ஏற்படுத்தும் செயலாக கருதப்படுகிறது.

இதனால், மியன்மாரில் அண்மைக் காலமாக ஏற்பட்டு வரும் முன்னேற்றங்களை இந்தியா தீவிரமாகக் கண்காணித்து வருகின்றது என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (இ-7)

# பெண்களை ஏமாற்றி தங்க நகைகளை கொள்ளையடித்த இராணுவச் சிப்பாய்

(கொழும்பு)
இராணுவச் சிப்பாயாக இருந்து கடமையின் போது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானதால் பணிக்கு சமுகமளிக்காதிருந்த சிலாபம் - மாதம்பை பிரதேசத்தில் வசிக்கும் 45 வயதான குறித்த நபரே பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளதாக சிலாபம் பொலிஸார் தெரிவித்தனர்.

பல பெண்களை ஆலயங்கள் உட்பட பல வழிபாட்டுத் தலங்களிற்கு அழைத்துச் சென்று பரிகார பூஜைகள் செய்விப்பதை வழக்கமாக கொண்டிருந்த, குறித்த நபர், அப் பெண்களை மயக்கி அவர்களிடமுள்ள தங்க நகைகளை கொள்ளையடித்து வந்துள்ளார்.

பாதிக்கப்பட்ட ஒரு பெண் செய்த முறைப்பாட்டின் பேரிலேயே குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது நீர் கொழும்பு பகுதியில் தனியார் நகைக்கடை ஒன்றில் இருந்து குறித்த நபர் விற்கப்பட்ட 3 தங்கச் சங்கிலிகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. (இ-7)

# 19வது அரசியலமைப்பில் நிறைவேற்று அதிகாரம் குறைக்கப்படவில்லை

## அமைச்சர் விஜயதாஸ விளக்கம்

(கொழும்பு)
நடைமுறையிலுள்ள பாராளுமன்றத்துடன் நாட்டின் செயற்பாடுகளை தொடர்ந்தும் முன்னெடுக்க முடியாது என ஜனாதிபதி கருதுவாராக இருந்தால் தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி பாராளுமன்றத்தைக் கலைக்க முடியும் என தெரிவித்த அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாஸ ராஜபக்ஷ, 19 ஆவது அரசியலமைப்பில் எந்தவொரு இடத்திலும் நிறைவேற்று அதிகாரம் குறைக்கப்படவில்லை எனவும் தெரிவித்தார்.



அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். (இ-7)

# ஆட்சிக் கலைப்பு

## அச்சத்தில் தமிழ் மக்கள்



கொழும்பு - பம்பலப்பிட்டியில் அமைந்துள்ள கதிரேசன் ஆலய வீதிக்குள் உள்நுழையும் போது வாசனை நிரம்பிய நறுமணத்தை உணர முடிவதுடன் மெல்லிசையையும் கேட்க முடியும். இந்திய மாக்கடலை அண்டிய காலி வீதியில் அமைந்துள்ள முருகன் ஆலயமான கதிரேசன் ஆலயமானது கொழும்பில் வாழும் தமிழ் மக்களால் வழிபடப்படும் ஒரு வணக்கத் தலமாகக் காணப்படுகிறது.

இந்நிலையில் அண்மையில் இலங்கை அரசியலில் ஏற்பட்ட சடுதியான மாற்றமானது இங்கு வாழும் மக்களை பெரிதும் அச்சத்திற்குள்ளாக்கியுள்ளது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதமராக அறிவிக்கப்பட்ட மகிந்த ராஜபக்ஷ, தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்தை நடத்தியிருந்தார் என்பதால் இவர் தொடர்பில் கொழும்பில் வாழும் தமிழ் மக்கள் பெரிதும் அச்சப்படுகின்றனர்.

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தமானது 2009இல் இறுதிக்கட்டத்தை அடைந்த போது இலங்கை ஜனாதிபதியாக இருந்த மகிந்த ராஜபக்ஷவிற்கு அவரது சகோதரரும் அப்போதைய பாதுகாப்பு அமை ச்சருமான கோத்தபாய ராஜபக்ஷ உதவி புரிந்திருந்தார்.

உள்நாட்டு யுத்தம் இறுதிக் கட்டத்தை அடைந்த போது பல ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டமை, காயமுற்றமை மற்றும் காணாமல் போனமையை ஐக்கிய நாடுகள் சபை உறுதிப்படுத்தியிருந்தது.

நாட்டில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம் முடிவுற்ற பின்னர், மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான இராணுவத்தினர் தமிழ் மக்களின் பாரம்பரிய வாழ்விடங்களான வடக்கு- கிழக்கை தம் வசப்படுத்தியிருந்தனர். இதன் மூலம் இராணுவ அதிகாரிகள் தமது சொந்த நலன்களை அடைந்து கொண்டதுடன் வடக்கு-கிழக்கில் பல்வேறு விடுதிகள், வர்த்தக நிலையங்கள் மற்றும் தொழில் மையங்களை உருவாக்கினர்.

2015இல் இடம் பெற்ற ஜனாதிபதித் தேர்தல் மூலம் மகிந்த ராஜபக்ஷ தோற்கடிக்கப்பட்டு, மைத்திரிபால சிறிசேன நாட்டின் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். இதன் பின்னர் தற்போது பிரதமராக மகிந்த ராஜபக்ஷவைத் தெரிவு செய்வதாக மைத்திரிபால சிறிசேன திடீரென அறிவித்தமையானது நாட்டில் அரசியல் சர்ச்சையை உருவாக்கியது. இந்நிலையில் நாட்டின் ஸ்திரமற்ற அரசியற் சூழலும் மகிந்த ராஜபக்ஷ பிரதமராக அறிவிக்கப்பட்டமையும் இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

கொழும்பு பம்பலப்பிட்டிய கதிரேசன் ஆலயத்தின் நுழைவாயிலில் பூமாலைகளை விற்கும் 62 வயதான நவரட்ணத்திடம் பிரதமராக மகிந்த ராஜபக்ஷவை அறிவித்தமை தொடர்பாக வினவியபோது, அவருக்கு அருகில் சிங்கள இனத்தைச் சேர்ந்த அவரது நண்பர் நின்றதால் 'தற்போதைய சூழல் முன்னரை விட நன்றாக உள்ளதாக' கூறினார்.

ஆனால் அவரது சிங்கள நண்பன் அப்பால் சென்றவுடன் 'இவர்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் மக்கள் அடக்கப்படுவார்கள். நிலைப்பாடு எவ்வாறு மாற்றமடையும் என்பதை எதிர்வுகூற முடியாது' என நவரட்ணம் தனது கருத்தைத் தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்ஷ பிரமதமராக அறிவிக்கப்பட்ட பின்னர் கதிரேசன் ஆலயத்திற்கு வருகை தந்ததாகவும் அவர் உச்ச பாதுகாப்புடன் வருகை தந்ததுடன் அவர் அங்கு நின்றபோது கடை உரிமையாளர்களை அங்கிருந்து வெளியேறுமாறு பணிக்கப்பட்டதாகவும், ஆனால் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு நடந்து கொள்வதில்லை எனவும் நவரட்ணம் தெரிவித்தார்.

1983இல் யுத்தம் ஆரம்பித்த பின்னர் ஒரு மில்லியனுக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் நாட்டை விட்டு வெளியேறியிருந்தனர். தற்போது 2.2 மில்லியன் தமிழ் மக்கள் வாழ்வதாகவும் இவர்கள் மொத்த சனத்தொகையில் 13 சதவீதமாக உள்ளனர் எனவும் கணக்கிடப்பட்டுள்ளது.

நாட்டில் வாழும் பெரும்பாலான தமிழ் மக்கள் தமது கருத்துக்களை வெளிப்படுத்த விரும்புவதில்லை.

மகிந்த ராஜபக்ஷ பிரதமராக அறிவிக்கப்பட்ட போது தமிழ் சமூகம் கவலையடைந்ததுடன் எச்சரிக்கையுடன் வாழ்வதாகவும் பம்பலப்பிட்டியவில் உள்ள வர்த்தக உரிமையாளர் ஒருவர் தெரிவித்தார். மகிந்த ராஜபக்ஷ 2015 ஜனாதிபதித் தேர்தலில் சிறுபான்மை இனத்தவர்களின் வாக்குகளை பெறத் தவறியதால் தேர்தலில்தோல்வியடைந்தார் என்பதால் இவர் அதிகாரத்துவத்தைப் பெற வேண்டும் என்கின்ற வெறியில் இருப்பதாலும் பழிக்குப்பழி தீர்ப்பதற்கான வாய்ப்புக்கள் காணப்படுவதாகவும்கூறப்படுகின்றது.

வடக்கில் வாழும் தமிழ் மக்கள் தாம் கண்காணிக்கப்படுவோம் என்கின்ற அச்சத்தால் தொடர்பாடல்களைத் துண்டித்திருப்பதாகவும், இவர்கள் 'வட்ஸ்அப்பை' விட பாதுகாப்புக் கூடிய 'ரெலிகிராம் மற்றும் சிக்னல்' போன்ற தொடர்பாடல் சேவைகளைப் பயன்படுத்துவதாகவும் லண்டனைத் தளமாகக் கொண்டியங்கும் செய்தி இணையத்தளமான 'தமிழ் காடியன்' ஆசிரியர் சுதர்சன் சுகுமாரன் தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்க நாட்டின் பிரதமராக பதவி வகித்த போது தமிழ் மக்களின் வாழ்க்கை முன்னேற்றமடைந்திருந்தது. இவர்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதற்கும் யுத்தத்தின் போது படுகொலை செய்யப்பட்ட தமது உறவுகளை இராணுவக் கண்காணிப்புக்களின் மத்தியிலும் நினைவுகூருவதற்கும் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

ஆனால் மகிந்த ராஜபக்ஷ மீண்டும் பதவியில் நிலைத்தால் தாம் குறிவைக்கப்படுவோம் என தமிழ் மக்கள் அச்சமுறுகின்றனர்.

தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்த மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் பலர் படுகொலை செய்யப்பட்டமை, சித்திரவதைகளுக்கு உள்ளானமை மற்றும் அச்சுறுத்தப்பட்டமை போன்றன தமிழ் மக்களை தொடர்ந்தும் அச்சத்திற்கு உள்ளாக்கியுள்ளதாகவும் இவ்வாறான வன்முறைகள் மீண்டும் நினைத்துப் பார்க்க முடியாத அளவிற்கு மோசமானவை எனவும் வோஷிங்டனைத் தளமாகக் கொண்டியங்கும் 'இலங்கையர்களுக்கு சமத்துவம் மற்றும் நிவாரணம்' என்கின்ற அமைப்பின் இயக்குநர் மேரியோ அருள்தாஸ் தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்கவின் அமைச்சரவையில் அமைச்சராக இருந்தவரும் வடக்கு- கிழக்கு பிராந்தியங்களுக்கு வெளியே வாழும் 1.5 மில்லியன் தமிழ் மக்களைப் பிர்திநிதித்துவப்படுத்தும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோகணேசன், மகிந்த ராஜபக்ஷ நாட்டின் ஜனாதிபதியாக பதவி வகித்த 2006இல் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொலை மற்றும் காணாமற் போனமை தொடர்பான குற்றச்சாட்டுக்களை மையப்படுத்தி ஆணைக்குழு ஒன்றை உருவாக்கினார்.

இந்த ஆணைக்குழு உருவாக்கப்பட்ட அதே ஆண்டு- அதாவது 2006இல் இதன் இணை தாபகரான நடராஜா ரவிராஜ் தனது பணிக்காகச் சென்று கொண்டிருக்கும் போது படுகொலை செய்யப்பட்டார். இதற்கு அடுத்த ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் சுதந்திரப் பாதுகாவலன் என்கின்ற விருதை மனோ கணேசன் பெற்றுக்கொண்டார்.

'நீதியை நிலைநாட்டுதல், காணாமற்போனவர்களைக் கண்டறிதல், ஆட்கடத்தல்களில் ஈடுபட்டவர்களைக் கண்டறிதல் போன்ற செயற்பாடுகள் தற்போதைய ஆட்சியில் சிறிதளவு முன்னேற்றத்தை எட்டியது. ஆனால் மகிந்த ராஜபக்ஷ பிரதமராகப்பதவியேற்றால்இவை அனைத்தும் பயனற்றதாகிவிடும்' என மனோ கணேசன் தெரிவித்தார்.

இலங்கையில் ஆட்சி முறுகல் நிலையை எட்டிய அதேவேளையில், இறுதி யுத்தத்தின் போது 11 பேர் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்ட இராணுவத்தின் உயர் அதிகாரியான அட்மிரல் ரவீந்திர விஜேகுணரட்னவை கைதுசெய்யுமாறு கடந்த வெள்ளி நீதிமன்றம் கட்டளையிட்டது.




இந்த இராணுவ அதிகாரியைக் கைது செய்யுமாறு வழங்கப்பட்ட கட்டளையை உயர்மட்ட பொலிஸ் புலனாய்வு அதிகாரிகள் செய்யத் தவறியதாகவும் நீதிபதி குற்றம் சுமத்தியிருந்தார். குற்றம் சுமத்தப்பட்ட இராணுவ அதிகாரி தடுத்து வைக்கப்படுவாரா என்பதும் ஐயப்பாடானதாகும்.

போர் தவிர்ப்பு வலயங்கள் மீது கண்மூடித்தனமான தாக்குதல்களை மேற்கொண்டு பல்லாயிரக்கணக்கான பொது மக்களைப் படுகொலை செய்தமை, சரணடைந்த விடுதலைப்புலி உறுப்பினர்கள் பலரை இராணுவத்தினர் படுகொலை செய்தமை உட்பட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின்கீழ்செயற்பட்ட இராணுவத்தினர் மீது சுமத்தப்பட்டிருந்தது.

இவ்வாறான யுத்த மீறல் குற்றச்சாட்டுக்களை மகிந்த ராஜபக்ஷ மறுத்ததுடன் 2014 ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்கவும் மறுத்திருந்தார்.

தமிழ் செயற்பாட்டாளர்களைக் கண்காணிப்பதும் கைதுசெய்யும் அரச வலைப்பின்னலானது மகிந்த பதவியிலிருந்து விலகிய பின்னரும் தொடர்வதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ள நிலையில் இவர் மீண்டும் பதவியில் தொடர் ந்தால் தமிழ் மக்களுக்கு அச்சுறு த்தலாக இருக்கும் எனவும் கூறப் படுகிறது.



தமிழர் பிரதேசங்களில் மீண்டும் இராணுவமயமாக்கல் தீவிரமடையும் எனவும் தமிழ் மக்கள் அச்சமுறுகின்றனர். போர்க்காலஙங்களில் இராணுவத்தால் கையப்படுத்தப்பட்டு உயர்பாதுகாப்பு வலயங்கள் என்கின்ற பெயரில் பொது மக்கள் பயன்படுத்துவதற்கு தடைவிதிக்கப்பட்ட காணிகள் தொடர்ந்தும் மக்களிடம் கையளிக்கப்படாத நிலை உருவாகும்.

மகிந்த ஆட்சிக்கு வந்தால் நாட்டில் மீண்டும் யுத்தம் ஒன்று ஏற்படும் எனவும் மியன்மார் இராணுவம் ரோஹிஞ்யா இனத்தவர்களை பல ஆயிரக்கணக்கில் படுகொலை செய்து அவர்களை இடம்பெயரச் செய்வது போன்ற நிலை இலங்கையிலும் ஏற்படும் என ஆசிரியர் சுகுமாரன் குறிப்பிட்டுள்ளார்.

அரசியலமைப்பில் இராணுவ வீரர்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தவில்லை எனவும் இவர் சுட்டிக்காட்டினார். 'மியன்மாரில் சமாதானத்திற்கான நோபல் பரிசைப் பெற்ற தலைவரால் கூட அந்த நாட்டில் இடம்பெறும் இனப்படுகொலையை நிறுத்தி நாட்டில் ஜனநாயகத்தை மீளநிலை நிறுத்த முடியாத நிலை காணப்படும் நிலையில் இலங்கையின் வடக்கு-கிழக்கில் தொடரும் இராணுவ மயமாக்கலை முடிவிற்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்காவிட்டால் மியன்மார் போன்ற மிகவும் மோசமான நிலை இலங்கையிலும் ஏற்படும்' என தமிழ் கார்டியன் ஆசிரியர் சுகுமாரன் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மக்களுக்கு எதிராக மகிந்த அரசாங்கத்தால் இழைக்கப்பட்ட குற்றங்கள் தொடர்பில் பொறுப்புக்கூறுவேன் என வாக்குறுதி அளித்தே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தேர்தலில் வெற்றிபெற்றார். இந்நிலையில் இலங்கையில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள் தொடர்பிலும் மனித உரிமை மீறல்கள் தொடர்பிலும் மகிந்த ராஜபக்ஷ பொறுப்புக்கூற வேண்டும் என அனைத்துலக சமூகம் வலியுறுத்தி வந்த நிலையில் இவ்வாறான குற்றங்களை இழைத்த மகிந்த ராஜபக்ஷவிற்கு மைத்திரிபால சிறிசேன சிவப்புக் கம்பள வரவேற்பு வழங்கியுள்ளார்.

'யுத்தக் குற்றங்கள் தொடர்பாக மைத்திரிபால சிறிசேன எவ்வித பதிலையும் வழங்கவில்லை. மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு மைத்திரிபால சிறிசேன எவ்வகையிலும் நீதியைப் பெற்றுக் கொடுக்கவில்லை. இந்நிலையில் மைத்திரிபால சிறிசேன மீண்டும் மகிந்தவுடன் இணையும் போது இவர்களின் ஆட்சியால் தமக்கு நீதி கிடைக்கும் என் தமிழ் மக்கள் எதிர்பார்க்க மாட்டார்கள்' என அனைத்துலக மன்னிப்புச் சபையின் தென்னாசியாவிற்கான ஆய்வாளர் தியாகி றுவான்பத்திரன தெரிவித்தார்.

ஆங்கிலத்தில்:-Jack Moore
வழிமூலம்:-The National
மொழியாக்கம்:-நித்தியபாரதி




# ஏழு தமிழர்கள் விடுதலை தமிழக அரசின் சிபாரிசை மத்திய உள்துறை நிராகரிப்பு



(சென்னை)

ராஜீவ்காந்தி கொலைக் குற்றவாளிகளுக்கு மன்னிப்பு வழங்கும்படி கோரிய தமிழக அரசின் சிபாரிசை மத்திய உள்துறை, ஜனாதிபதி பரிசீலனைக்கு அனுப்ப மறுத்துள்ள சம்பவம் தற்போது வெளியாகியுள்ளது.

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் முருகன், சாந்தன், பேரறிவாளன், நளினி, ஜெயக்குமார், ராபர்ட் பயாஸ், ரவிச்சந்திரன் ஆகியோர் ஆயுள் தண்டனை பெற்று 27 ஆண்டுகளாக சிறையில் உள்ளார்கள். நீண்டகாலமாக சிறையில் இருப்பதால் அவர்களைவிடுவிக்க வேண்டும்என பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழக அரசும் அவர்களை விடுவிப்பதற்கு சம்மதம் தெரிவித்து மத்திய அரசிடம் இது தொடர்பில் சிபர்சு செய்தது.

ஏற்கனவே குற்றவாளிகள் 7 பேருக்கும் மன்னிப்பு அளித்து அவர்களை விடுவிக்க வேண்டும் என்று தமிழக அரசு ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பியது.

இந்த கடிதம் 2.3.2016 அன்று மத்திய உள்துறை மூலமாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டது. ஆனால், இந்த கடிதம் தொடர்பாக மத்திய உள்துறை கடந்த ஏப்ரல் 18 ஆம் திகதி ஒரு தகவலை தமிழக அரசுக்கு அனுப்பியது.

அதில், இந்த வழக்கை விசாரித்த சி.பி.ஐ. குற்றவாளிகளை விடுவிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் மோசமானஒருகொலை குற்றத்தை செய்திருக்கிறார்கள். அவர்கள் முன்னாள் பிரதமருடன் சேர்த்து 15 பேரை கொலை செய்துள்ளனர்.

அதில் பலர் பொலிஸ் அதிகாரிகள். கொலையாளிகளில் 4 பேர் வெளிநாட்டினர். அவர்கள் 3 இந்தியர்களுடன் சேர்ந்து கொலை செய்திருக்கிறார்கள். எனவே, அவர்களை விடுவிக்க சி.பி.ஐ. எதிர்ப்பு தெரிவிக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் கொலையாளிகளில் ஒருவரான பேரறிவாளன் ஜனாதிபதி மாளிகைக்கு தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் ஒரு கடிதம் எழுதி, தமிழக அரசின் சிபாரிசு கடிதம் என்ன ஆனது? என்று கேட்டிருந்தார்.

புழல் சிறையில் உள்ள அவருக்கு தற்போது தகவல் அறியும் ஆணையத்தில் இருந்து பதில்கடிதம்வந்துள்ளது.


அதில், தமிழக அரசு சிபாரிசு செய்த கடிதம் எதுவும் இதுவரை எங்களுக்கு (ஜனாதிபதி அலுவலகம்) வரவில்லை என்று கூறப்பட்டுள்ளது.

அதாவது தமிழக அரசு சிபாரிசு கடிதத்தை மத்திய உள்துறை மேற்கொண்டு நடவடிக்கை எடுத்து ஜனாதிபதிக்கு அனுப்ப மறுத்துள்ளது இதன் மூலம் தெரிய வந்துள்ளது.

மத்திய உள்துறையின் உயர்மட்ட அதிகாரிகளே இதுபற்றி முடிவு எடுத்து கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பாமல் நிறுத்தி விட்டதாக உள்துறை வட்டாரங்கள் தெரிவித்தன. (7)

# சோமாலியாவில் தொ… பலி எண்ணிக்கை…

## 60 பேர் படுகாயம்



(மொகாடிஷு)

சோமாலியாவில் நடைபெற்ற குண்டுவெடிப்பில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 50 ஆக அதிகரித்துள்ளது.

சோமாலியா தலைநகர் மொகாடிஷுவில் உள்ள பிரபல உணவகமான சஹாபி அருகே நேற்று முன்தினம் அடுத்தடுத்து குண்டுகள் வெடித்தன. 3 கார்களில் வைக்கப்பட்டிருந்த குண்டுகள் வெடித்து சிதறியது.

இந்த தாக்குதலில் அப்பாவி பொதுமக்கள்,

# கஷோக்கி கொலையுடன் தொடர்புபட்ட ஒலி நாடாக்கள் சவுதி, அமெரிக்காவிடம்

## துருக்கி ஜனாதிபதி தெரிவிப்பு




(இஸ்தான்புல்)

ஊடகவியலாளர் ஜமால் கஷோக்கி கொல்லப்பட்ட போது பதிவானதாகக் கருதப்படும் குரல் பதிவுகள் அடங்கிய ஒலி நாடாக்களை அமெரிக்கா, சவுதி அரேபியா உள்ளிட்ட பல நாடுகளுக்குப் பகிர்ந்துள்ளதாக துருக்கி ஜனாதிபதி ரெசெப் தயிப் எர்டோகன் தெரிவித்துள்ளார்.

சவுதி இளவரசரை விமர்சித்து வந்த வோஷிங்டன் போஸ்ட் ஊடகவியலாளர் ஜமால் கஷோக்கி, துருக்கி தூதரகத்தில் வைத்து கொல்லப்பட்டார்.

இந்நிலையில், பிரான்ஸில் நடைபெறும் முதலாம் உலகப் போரின் 100ஆம் ஆண்டு நிகழ்ச்சியில் பங்கேற்கச் செல்லும் முன் செய்தியாளர்களைச் சந்தித்த துருக்கி ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

கஷோக்கி கொல் லப்பட்டபோது பதிவு செய் யப்பட்ட ஒலி நாடாக்கள் ஏற்கனவே அமெரிக்கா, சவுதி அரேபியா, ஜேர்மனி, பிரான்ஸ், பிரித்தானியா உள்ளிட்ட நாடுகளுடன் பகிர்ந்துள்ளதாக தெரிவித்தார்.

மேலும் இந்த விடயம் தொடர்பாக பிரான்ஸில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புடனான சந்திப்பின் போது பேச விருப்பதாகவும் தெரிவித்துள்ளார். (7)

# ஐரோப்பிய கூட்டமைப்பில் இருந்து விலகும் முடிபுக்கு எதிர்ப்பு தெரிவித்து

## பிரிட்டன் இராஜாங்க அமைச்சர் ராஜினாமா

(லண்டன்)

ஐரோப்பிய கூட்டமைப்பில் இருந்து விலகும் முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்து பிரிட்டன் போக்குவரத்துத்துறை ராஜாங்க அமைச்சர் ஜோ ஜான்சன் பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

ஐரோப்பிய கூட்டமைப்பில்இருந்து விலகும் முடிவை பிரிட்டன் எடுத்துள்ளது. 2016 ஆம் ஆண்டு பொது வாக்கெடுப்பு நடத்தி இந்த முடிவு எடுக்கப்பட்டது.

அதைத்தொடர்ந்து ஐரோப்பிய கூட்டமைப்பில் இருந்து விலகுவதற்கான முறையான நடவடிக்கையை பிரதமர் தெரசா மே எடுத்து வருகிறார்.

ஐரோப்பிய கூட்டமைப்பில் இருந்து விலகும் முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்து பிரிட்டன் போக்குவரத்து துறை ராஜாங்க அமைச்சர் ஜோ ஜான்சன் பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

ஏற்கனவே இந்த விவகாரத்தில் பதவி விலகிய வெளியுறவு அமைச்சர் போரீஸ் ஜான்சனின் சகோதரர்தான் இந்த ஜோ ஜான்சன் என்பது குறிப்பிடத்தக்கது. தனது சகோதரர் பதவி விலகி இருப்பதை போரீஸ் ஜான்சன் வரவேற்றுள்ளார்.

ஜோ ஜான்சன் பதவி விலகி இருப்பது பிரதமர் தெரசா மேயுக்கு பின்னடைவாக கருதப்படுகிறது. (7)

# சோமாலிய… உறுதுணை…

## ஐ.நா.செயலாளர் குற்…

வெடிகுண்டு தாக்குதலுக்கு ஆளான சோமாலியா மக்களுக்கு தேவைப்படும் உதவிகள் வழங்கப்படுவதுடன், அவர்களுக்கு உறுதுணையாக இருப்போம் என ஐ.நா. பொதுச்செயலாளர் அன்டோனியோ குற்றேரஸ் தெரிவித்துள்ளார்.

சோமாலியா தலைநகர் மொகாடிஷுவில் உள்ள பிரபல உணவகமான சஹாபி அருகே நேற்று முன்தினம் அடுத்தடுத்து குண்டுகள் வெடித்தன. 3 கார்களில் வைக்கப்பட்டிருந்த குண்டுகள் வெடித்து சிதறியதால் அப்பாவி பொதுமக்கள், பாதுகாப்புப் பணியில் இருந்த பொலிஸார் என மொத்தம் 50 பேர் உடல் சிதறி பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் 58 பேர் படுகாயம் அடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# பிரேசிலில் பாரிய நிலச்சரிவு குழந்தை உட்பட 11 பேர் பலி!



(பிரேசிலியா)

பிரேசிலில் ஏற்பட்ட பாரிய நிலச்சரிவு காரணமாக 11 பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.


பிரேசிலின் தலைநகர் ரியோ டி ஜெனிரோ நகரில் நேற்று முன்தினம் சனிக்கிழமை ஏற்பட்ட குறித்த அனர்த்தத்தில் ஒரு குழந்தை உட்பட 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

குறித்த அனர்த்தத்தில் மேலும் நால்வரைக் காணவில்லை எனவும், தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வரும் மீட்புப் பணிகளின் போது மேலும் சடலங்கள் மீட்கப்படலாம் என மீட்புப் பணியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்நிலையில் குறித்த நிலச்சரிவில் 9 வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளதுடன், பல வணிக நிறுவனங்களும் கடும் சேதத்திற்குள்ளாகியுள்ளன.

பெரும்பாலும் அப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள வீடுகள் அனுமதி பெறப்படாமல் அமைக்கப்பட்டவை என நகர அபிவிருத்தி அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

# உலகப் போரில் உயிர்நீத்த வீரர்களின் நினைவிடத்தில் அவுஸ்.பிரதமர் அஞ்சலி



முதலாம் உலகப் போரில் உயிர்நீத்த இராணுவ வீரர்களின் நினைவிடத்தில் அவுஸ்திரேலியப் பிரதமர் ஸ்கொட் மொரீசன் அஞ்சலி செலுத்தியுள்ளார்.

கான்பெராவில் அமைந்துள்ள இராணுவ வீரர்களின் நினைவிடத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை குறித்த நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அவுஸ்திரேலிய கடற்படையினரால் அணிவகுப்பு மரியாதை நிகழ்த்தப்பட்டதுடன், பிரதமர் மொரீசன் மற்றும் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் மைக்கேல் நோவோன் ஆகியோர் குறித்த நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

இதன்போது கடற்படையினர், பிரதமர் மொரீசன் மற்றும் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் மைக்கேல் நோவோன் ஆகியோர் நினைவிடத்தில் வீரமுழக்கங்களை எழுப்பி உயிரிழந்த வீரர்களுக்கு தமது ம… யாதை வணக்கங்களைச் செலுத்தியிருந்தனர்.

முதலாம் உலகப் போரின் முடிவில் போர் நி…த்த ஒப்பந்தம் கையெழுத்திட்டதிலிருந்து, மே…கத்திய முன்னணி நாடுகளின் துப்பாக்கிக… 11 ஆம் திகதி நவம்பர் 1918 அன்றுடன் நான்… ஆண்டுகளுக்கு மேலாக போரின் பின்ன… மௌனிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (7)



# வெளிநாடு



# தொடர்குண்டுவெடிப்பு கை 50 ஆக உயர்வு!

பம்






டிஷ்"வில் பி அருகே நண்டுகள் பட்டிருந்த துமக்கள்,

பாதுகாப்புப் பணியில் இருந்த பொலிஸார் என மொத்தம் 20 பேர் உடல் சிதறி பரிதாபமாக உயிரிழந்தனர் என முதல்கட்டமாக தகவல் வெளியானது. மேலும் பலர் படுகாயம் அடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த தாக்குதலுக்கு அல் ஷபாப் பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

இந்நிலையில், சோமாலியாவின் மொகாடிஷு நகரில் நடைபெற்ற குண்டு வெடிப்பில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 50 ஆக அதிகரித்துள்ளது. மேலும் 60 பேர் படுகாயம் அடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (7)

# ஏமனில் தொடரும் மோதல்; 110 கிளர்ச்சியாளர்கள் அழிப்பு



மேற்கு ஏமனில் அரச படைகளுக்கும் ஹவுத்தி கிளர்ச்சியாளர்களுக்கும் இடையில் இடம்பெற்று வரும் மோதல்களில் இதுவரை 110 ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

மேற்கு ஏமனில் உள்ள ஹோடா நகரில் இடம்பெற்ற போரில் நேற்று 110 ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன், அரச படையில் 11 பேரும் உயிரிழந்துள்ளனர்.

ஏமன் நாட்டில் சன்னி பிரிவைச் சேர்ந்த ஜனாதிபதி மன்சூர் ஹைதிக்கும் ஷியா பிரிவைச் சேர்ந்த ஹவுத்தி கிளர்ச்சிப் படைக்கும் இடையே கடந்த 2015 முதல் உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது.

ஜனாதிபதி மன்சூர்ஹைதிக்கு சவுதி அரேபியாவும் ஹவுத்தி கிளர்ச்சிப் படைக்கு ஈரானும் ஆதரவு அளிக்கின்றன.

துறைமுக நகர் ஒன்றில் நடந்த மோதலில் கொல்லப்பட்ட 55 ஹவுத்தி கிளர்ச்சியாளர்களின் உடல்கள் கிளர்ச்சியாளர் வசம் உள்ள தலைநகர்சனாவுக்கு கொண்டு செல்லப்பட்டதாக மீட்புப் பணியாளர் ஒருவர் தகவல் வெளியிட்டுள்ளார். (7)

# லியா மக்களுக்கு நாம் ணையாக இருப்போம்

## ர் குற்றேரஸ் ஆறுதல்

ன சோமா உதவிகள் றுதுணை ச்செயலா ரிவித்துள்

டிஷ"வில் பி அருகே ண்டுகள் பட்டிருந்த அப்பாவி இருந்த ர் உடல் மலும் 58 ச பெற்று

இந்நிலையில், வெடிகுண்டு தாக்குதலுக்கு ஆளான சோமாலியா மக்களுக்கு தேவைப்படும் உதவிகள் வழங்கப்படுவதுடன், அவர்களுக்கு உறுதுணையாக இருப்போம்என ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குற்றேரஸ் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், சோமாலியா நாட்டில் நடைபெற்ற வெடிகுண்டு தாக்குதலில் பலியானோர் குடும்பத்துக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்.



இதுபோன்ற தாக்குதலால் சோமாலியா மக்களை அச்சுறுத்தி விடமுடியாது. வெடிகுண்டு தாக்குதலால் அவதிப்பட்டு வரும் அந்நாட்டு அரசுக்கும், அந்நாட்டு மக்களுக்கும் ஐக்கிய நாடுகள் சபை என்றும் உறுதுணையாக நிற்கும். மேலும் அவர்களுக்கு தேவையான உதவிகளையும் அளிக்கும் என மேலும் தெரிவித்துள்ளார். (7)

# கலிபோர்னியாவில் காட்டுத் தீ! 23 பேர் உடல் கருகி உயிரிழப்பு



அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் ஏற்பட்ட காட்டுத் தீ காரணமாக இதுவரை 23 பேர் உயிரிழந்துள்ளதாக அந் நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

கலிபோர்னியாவில்மொத்தம் 16 இடங்களில் காட்டுத் தீ பிடித்து பரவி வருகிறது. இதில் இரண்டு இடங்களில் மட்டும் காற்றின் வேகம் காரணமாக தீ வேகமாக பற்றி எரிவதுடன், பல ஏக்கர் நிலப்பரப்பிற்கும் வேகமாக பரவி வருகிறது.

தற்போது மணிக்கு 35 கிலோமீற்றர் வேகத்தில் தீ பரவி வருவதால் எங்கு திரும்பினாலும் தீப்பிழம்பாக காட்சி அளிக்கிறது. தீப்பிடித்த பகுதிகள் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் வசித்த சுமார் 1.5 லட்சம் மக்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டுள்ளனர். உலங்கு வானூர்தி மூலம் தீயினை கட்டுப்படுத்தும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில், இந்த விபத்தில் சிக்கி இதுவரை 9 பேர் உயிரிழந்திருப்பதுடன் இதில் 14 பேரின் உடல்களை மீட்பு படையினர் மீட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தொடர்ந்தும் மீட்பு பணி நடவடிக்கை இடம்பெற்று வருவதுடன், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்ககூடும் எனவும் அஞ்சப்படுகிறது. (7)

ின் லி



தமது ம ந்தனர் பார் நி து. மே ாக்கிக நான் பின்ன து. (7

# அமெரிக்காவிற்குள் சட்ட விரோதமாக நுழைந்தால் தஞ்சம் கோர முடியாது

## ட்ரம்ப் நிர்வாகம் அதிரடி அறிவிப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்க நாட்டுக்குள் சட்டவிரோதமாக நுழைகிறவர்கள், தஞ்சம் கோர முடியாது என்று ட்ரம்ப் நிர்வாகம் அதிரடி அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவில் உலக நாடுகள் பலவற்றில் இருந்தும் மக்கள் குடியேறுவதில் ஆர்வம் காட்டுகின்றனர். குறிப்பாக மத்திய அமெரிக்க நாட்டினர், அமெரிக்கா வந்து தஞ்சம் அடைவதில் ஆர்வம் காட்டி வந்தனர்.

இது ட்ரம்புக்கு எரிச்சலை ஏற்படுத்தியது. அவர்கள் 'கேரவன்' வாகனங்களில் வருவதை 'படையெடுப்பு' என்று ட்ரம்ப் விமர்சித்து வந்தார்.

நடந்து முடிந்த இடைக்கால தேர்தல் பிரசாரத்தின்போதும், மத்திய அமெரிக்க நாட்டினர் வருகைக்கு எதிரான கருத்துக்களை ட்ரம்ப் வெளியிட்டார். அது மட்டுமன்றி மெக்சிகோ எல்லை வழியாக அமெரிக்கா வர முயற்சிக்கிறவர்களை தடுத்து நிறுத்தும் நோக்கத்தில் எல்லையில் அவர் பல்லாயிரக்கணக்கில் படை வீரர்களை குவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமையன்று வோஷிங்டன்வெள்ளை மாளிகையில் நடந்த பத்திரிகையாளர் சந்திப் பின போது, சி.என்.என். நிருபர் அகோஸ்டா இந்தப் பிரச்சினையை எழுப்பிய போது தான் ட்ரம்புடன் மோதல் ஏற்பட்டது.

இந்த நிலையில் அதிரடியாக அமெரிக்காவிற்குள் சட்டவிரோதமாக நுழைகிறவர்கள் தஞ்சம் கோர முடியாது என கூறும் புதிய விதியை ட்ரம்ப் நிர்வாகம் கொண்டு வந்துள்ளது.

இது தொடர்பாக ட்ரம்ப் நிர்வாகத்தில் அட்டர்னி ஜெனரல் பொறுப்பு வகிக்கும் மேத்யூ விட்டேகரும், உள்நாட்டு பாதுகாப்பு வல்லுநர் கிர்ஸ்ட்ஜென் நீல்சனும் இடைக்கால இறுதி விதி என்ற பெயரில் ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

இதுதொடர்பாக அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

நாட்டின் குடியேற்றம் மற்றும் தேசிய பாதுகாப்பு சட்டப்படி, அமெரிக்க நலன்களுக்கு எதிரானவர்கள் என்கிற பட்சத்தில், நாட்டுக்குள் சட்டவிரோதமாக நுழைகிற வெளிநாட்டினரை தடுத்து நிறுத்துகிற அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. அவர்கள் மீது சரியானது என கருதப்படுகிற எந்தவொரு கட்டுப்பாட்டையும் அவரால் விதிக்கவும் முடியும்.

இப்படியான ஜனாதிபதியின் தடை உத்தரவை மீறுவோரையும், அகதிகளுக்கான தகுதியில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டவர்களையும் தடை செய்வதற்கு நாடாளுமன்றம் வழங்கியுள்ள அதிகாரத்தை நாங்கள் பயன்படுத்துகிறோம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இதன்படி அமெரிக்காவின் தெற்கு எல்லை வழியாகவும் யாரும் சட்டவிரோதமாக நுழைந்து தஞ்சம் கோர முடியாது என கூறப்பட்டுள்ளது. ட்ரம்ப் நிர்வாகத்தின் இந்த நடவடிக்கைக்கு எதிராக கண்டனங்கள் குவிகின்றன.

இதுபற்றி அமெரிக்க மனித உரிமைகள் அமைப்பு கருத்து தெரிவிக்கையில், "அகதிகள் தஞ்சம் கோர முடியாது என ட்ரம்ப் நிர்வாகம் கொண்டு வந்துள்ள விதி, சட்ட விரோதமானது" என கூறியது.

ஆம்னஸ்டி இன்டர் நஷனல் அமைப்பின் பொதுச் செயலாளர் குமி நாய்டூ வெளியிட்டுள்ள அறிக்கையில், " இந்த கொள்கை முடிவானது. ஆயிரக்கணக்கான அகதிகளின் வாழ்க்கையை அபாயத்தில்கொண்டு போய் விட்டுள்ளது" என கூறப்பட்டுள்ளது. (7)

# நிதி ஒதுக்கீடு அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு

## நீதியமைச்சர் சுசில் தெரிவிப்பு

(கொழும்பு)

வரவு- செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படாத நிலையில் நாட்டின் நிர்வாக செலவுக்கான இந்த வருடத்திற்கான நிதி ஏற்கனவே வரவு-செலவுத்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிதி எதிர்வரும் டிசெம்பர் மாதம் வரையில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக நீதியமைச்சர் சுசில் பிரேமஜெயந்த தெரிவித்தார்.



நேற்று முன்தினம் பிரதமர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அரசியல் யாப்பு தொடர்பில் ஜனாதிபதி மேற்கொண்ட சட்ட ரீதியான நடவடிக்கைகள் குறித்து அமைச்சர் விளக்கமளித்தார்.

இதன்போது நாட்டின் நிர்வாக செயற்பாடுகளுக்கான செலவுக்கான நிதி குறித்து விளக்கம் அளிக்கையில், ஜனவரி மாதத்திற்கான தேவையான நிதியை ஜனாதிபதி ஒதுக்கீடு செய்வார்.

கையிருப்பிலுள்ள நிதியில் இருந்து இந்த நிதியை பெற்றுக்கொள்வதற்காக ஜனாதிபதிக்கு உள்ள யாப்பு ரீதியாக உள்ள அதிகாரத்தை பயன்படுத்தி, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நிதி ஒதுக்கீட்டுக்கான நடவடிக்கையை மேற்கொள்வார்.

அரசியல் யாப்பில் ஜனாதிபதிக்கு உள்ள அதிகாரத்திற்கு அமைவாக மூன்று மாதங்களுக்கு பாராளுமன்றத்தின் அனுமதி இன்றி இருப்பிலுள்ள நிதியை ஒதுக்கீடு செய்ய முடியும் என்று அமைச்சர் விளக்கமளித்தார்.(இ-7)

# காபந்து அரசு மூலம் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

(கொழும்பு)

பாராளுமன்றம் கலைக்கப்பட்டு காபந்து அரசாங்கம் செயற்படுகின்ற போதிலும் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப்பிரச்சினைக்கு விரைவாக தீர்வு காணப்படும் என்று நீதியமைச்சர் சுசில் பிரேமஜெயந்த தெரிவித்தார்.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டதையடுத்து பிரதமர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் செய்தியாளர் சந்திப்பு நடைபெற்றது.

இதனைத்தொடர்ந்து நீண்ட நாட்களாக தீர்வு காணப்படாத நிலையிலுள்ள தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினைக்கு இன்றைய சூழ்நிலையில் தீர்வு காணப்படுமா என்று கேட்ட போதே அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினை தோட்டங்களை நிர்வகிக்கும் தோட்ட கம்பனிகளின் தோட்ட முதலாளிமார் சம்மேளனத்திற்கு உட்பட்டது.

இருந்த-போதிலும் இதற்கு தீர்வு காண்பதற்கான பங்களிப்பை அரசாங்கம் வழங்கியுள்ளது. தற்போது இதுதொடர்பான பேச்சுவார்தை நடைபெற்றுவருகிறது.

விரைவில் தீர்வு காணப்படும் என்று அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த நம்பிக்கை வெளியிட்டார். (இ-7)

# புலமைப்பரிசில் பரீட்சைப்பெறுபேற்றின் மீள் பரிசீலனைக்கு 35 ஆயிரம் விண்ணப்பங்கள்

(கொழும்பு)

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேற்றின் மீள் பரிசீலனைக்காக, 35.ஆயிரத்திற்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன என, பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த மீள்பரிசீலனை விண்ணப்பங்கள் தொடர்பில் அடுத்த வாரம் முதல் ஆராயவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பீ பூஜித் தெரிவித்தார்.

அதற்கமைய, ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சைக்கான மீள்திருத்தப் பெறுபேறுகளை இம்மாத இறுதியில் வெளியிடத் தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி புலமைப்பரிசில் பரீட்சை நடத்தப்பட்டதுடன், அதில் பரீட்சைக்கு 3 இலட்சத்து 55 ஆயிரத்து 326 பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சிறைச்சாலை அதிகாரிகள் ஆறு பேருக்கு இடமாற்றம்

(கொழும்பு)

அங்குனுகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் சேவையாற்றிய ஆறு சிறைச்சாலை அதிகாரிகள் உடனடியாக அமுலாகும் வகையில் இடம் மாற்றப்பட்டு உள்ளனர்.

சிறைச்சாலை அதிகாரிகள் சம்பந்தமாக சிறைச்சாலை புலனாய்வு அதிகாரிகள் நடத்திய விசாரணைகளின் பின்னர் குறித்த ஆறு பேரும் இடமாற்றம் செய்யப்பட்டதாக சிறைச்சாலைகள் திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

அந்த ஆறு பேரில் சிறைச்சாலை காவலர்கள் மூன்று பேரும் இரண்டு பெண் அதிகாரிகளும் அடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அங்குனுகொலபெலஸ்ஸ சிறைச்சாலை அதிகாரிகளின் நடத்தை சம்பந்தமாக கிடைத்த தகவலுக்கமைய சிறைச்சாலை புலனாய்வு பிரிவினால் விசாரணை செய்யப்பட்டது.

சிறைச்சாலை அதிகாரிகளின் நடத்தை சம்பந்தமாக நடத்தப்படுகின்ற புலனாய்வு விசாரணை மேலும் சில சிறைச்சாலைகளில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களத்தின் பேச்சாளர் தெரிவித்தார். (இ-7)

# இ.போ.ச. ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க துறைசார் அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கை போக்குவரத்துச் சபையின் ஊழியர்கள் அனைவரினதும் சம்பளத்தை அதிகரிக்க போக்குவரத்து அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

சாரதி, நடத்துநர், தொழில்நுட்பவியலாளர், தொழிலாளர்கள் மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அனைவரினதும் அடிப்படை சம்பளம் அதிகரிக்கப்பட உள்ளதாக அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

14 ஆயிரத்து 250 ரூபாவான அடிப்படை சம்பளம் 25 ஆயிரத்து 550 ரூபா வரை அதிகரிக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் நாட்களில் நிறைவேற்று உத்தியோகத்தர்களின் சம்பளமும் இது போன்று அதிகரிக்கப்பட உள்ளதாக அந்த அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

புதிய சம்பள முறை வெளியிடும் நிகழ்வு போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையில்நேற்று முன்தினம் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## தனிநபர் சுதந்திரம்

ஒரு பழமொழி சொல்லுவாங்க!

மூடனுக்கு கோபம் மூக்கு மேலேன்னு ! அப்படின்னா மற்றவங்களுக்கெலாம் கோபம் காது மேலேயான்னு கேக்காதீங்க!

"அப்படி இல்லை"

இப்ப நீங்க நேரா நிமிர்ந்து நில்லுங்க!உங்க உடம்பிலே முன்னாடி இருக்கிறது எது?மூக்கு!

"இல்லையே வயிறு தானே முன்னாலே இருக்கு" ன்னு சொல்லாதீங்க

அது ஆண்டவனா வடிவமைச்சது கிடையாது அது நீங்களா வடிவமைச்சிக்கிட்டது! அதுக்காக கவலைப் பட்டுக்கிட்டிருக்காதீங்க!

தினமும் இது மாதிரி நேரத்துல கொஞ்சம் உடற் பயிற்சி செய்யுங்க! சரியாப் போயிடும்!

மூக்கு முன்னாடி இருக்கிறதுனாலே முன் கோபத்தையும் மூக்கு மேலே கோபம்ன்னு சொன்னாங்க போல இருக்கு!

முன்கோபம்ன்னா என்ன?

எல்லாத்தையும் பின்னுக்குத் தள்ளிட்டு அது முந்திக்கிட்டு வந்திடுது! அதனாலே தான் அது முன் கோபம்!

அப்படி மூடனுக்குத்தான் வரும்! என்பது பழமொழி. அதுதான் மூடனுக்குக் கோபம் மூக்கு மேலே! அது மட்டுமில்லை சில பேருக்கு மூக்கிலே எதுவும் பட்டா உடனே கோபம் வந்துடும்!

ஒரு பெரியவர் வோக்கிங் போயிட்டு இருந்தார்.

அவருக்கு முன்னாடி இன்னொருத்தர் வோக்கிங் போய்க்கிட்டிருந்தார் .

முன்னாடி போய்க்கிட்டிருந்தவர் கையிலே ஒரு நீளமான வோக்கிங் ஸ்டிக் !

அந்த வோக்கிங் ஸ்டிக்கை வேகமா முன்னாடியும் பின்னாடியுமாக வீசிக்கிட்டே அவர் நடந்து போய்க் கிட்டிருக்கார்.

அதுலே என்ன ஆச்சுன்னா அந்த குச்சி வேகமா ஆடும் போது பின்னாடி வந்துகிட்டிருந்தவருக்கு கஷ்டமாப் போச்சி!அதுவும் எந்த அளவுக்கு?

பின்னாடி வந்துக்கிட்டிருந்தவரு முகத்துலே போயி இடிக்கிற அளவுக்கு ஆயிட்டுது!அவ்வளவு வேகமா வீசிக்கிட்டுப் போனாரு அவரு!

பின்னாடி வந்தவரும் கொஞ்சம் பொறுமையாத் தான் வந்துக்கிட்டிருந்தார்.இருந்தாலும் அந்த குச்சி இவரு மூக்குலே வந்து இடிக்க ஆரம்பிச்சதும் இவராலே பொறுத்துக்க முடியலே! முன்னாடி போறவரை பார்த்து சொன்னாரு!

இதோ பாருங்க! வோக்கிங் ஸ்டிக்கை இவ்வளவு வேகமா வீசாதீங்க ... அது என் மூக்குல வந்து இடிக்குது! என்றார்.

இதுக்கு அவர்:

அப்படியெல்லாம் சொல்லாதீங்க! வீசறது என்னோட உரிமை! சுதந்திரம்! Personal Liberty!

இப்படி தனி மனித சுதந்திரத்திலே நீங்க தலையிடறது நியாயமில்லே!-அப்படின்னாரு!

இதைக்கேட்டதும் பின்னாடி வந்தவர் சொன்னார்.

நீங்க சொல்றது சரிதாங்க.... இருந்தாலும் Your Pesonal Liberty ends where my nose starts!

உங்க தனி மனித சுதந்திரம் என் மூக்கு ஆரம்பிக்கிற இடத்தோட முடிஞ்சி போவுது அப்படின்னாரு!

அவ்வளவு தான்!

முன்னாடி போனவர் சிரிச்சிக்கிட்டே கொஞ்சம் வேகமா நடைபோட ஆரம்பிச்சார்!

மூக்கு மேலே கைத்தடி பட்டாக்கூட அவருக்கு ஏன் மூக்கு மேலே கோபம் வரல்லே! அவரு பெரியவர்!

அதனாலே தான் கோவப்படாமே பக்குவமா இப்படி சொன்னார்!

வேறே சாதாரண மனுஷனா இருந்தா இவன் பதிலுக்கு ஒரு குச்சியை எடுத்துக்கிட்டு அவரு மூக்குலே இடிச்சிருப்பான்! விவகாரம் முத்தி போயிருக்கும்!

அப்புறம் ரெண்டு பேருமே மூக்கிலே பேண்டேஜ் உடன் வோக்கிங் போகிறபோல ஆயிடும்!

அப்புறம் அரசாங்கம் வோக்கிங் ஸ்டிக் வச்சிருக்கிறவங்கள்லாம் லைசன்ஸ் வாங்கணும்ன்னு சொன்னாலும் சொல்லும்!

துப்பாக்கி- கத்தி- சைக்கிள் செயின் இந்த லிஸ்ட்லே வோக்கிங் ஸ்டிக்கும் சேர்ந்திடும்! ஏன் சேர்?

Personal Liberty ன்னு பேசறாமே.... தனி மனித சுதந்திரம் தேவை தான்.... வேண்டாம்ன்னு சொல்லலே! ஆனா அதுக்காக அடுத்தவங்க மூக்கை உடைக்கற அளவுக்குப் போனா அது நியாயமா?

# ஜனநாயகம் பற்றிய தத்துவம்

## ஒரு நோக்கு

ஜனநாயகம் என்பது தத்துவார்த்தமாக, வரலாற்று ரீதியாக நோக்கப்படவேண்டிய ஒன்றாகும். தமிழ் மொழியில் சனநாயகம் என்பது சனங்கள் அல்லது மக்களின் ஆட்சியைக் குறிக்கும். ஜனநாயகம் என்பது ஆங்கில மொழியில் Democracy என்பதாகும்.

இச் சொல் அடிப்படையில் கிரேக்க மொழியிலிருந்து வந்ததாகும். Demos என்பது மக்களையும் Cratos என்பது ஆட்சியையும் குறிக்கும். எனவே Democracy என்பது மக்கள் ஆட்சியை குறிக்கும். கி.மு.5 ஆம் நூற்றாண்டிலே கிரேக்க நாட்டில் எதென்ஸ் (Ethens), ஸ்பாட்டா (Sparta) போன்ற நகரங்களில் கூட்டங்கள், கலந்துரையாடல்கள் மூலம் நேரடி ஜனநாயக ஆட்சி நிலவியது.


இதற்கு பின்புலமாக மனித சிந்தனை எழுச்சியும் அதன்பால் மேல் எழுந்த "ஞானத்தை நாடல்" எனும் தத்துவ ஞானப்போக்கும் தொன்மையான நகரவாக்கங்களும் காரணமாகலாம். அன்றைய கிரேக்க தத்துவ ஞானி பிளேட்டோ குடியரசு (Republic) என்னும் ஆட்சி பற்றிய நூலையே எழுதினார். அடுத்து ரோமில் சட்டம் இராணுவம் என்பவற்றைக் கொண்ட அரசாங்க கட்டமைப்பு முதன் முதலில் தோற்றம் பெற்றதாக வரலாற்று ஆய்வாளர் குறிப்பிடுகின்றார்கள். இருப்பினும் இக் காலகட்டங்களில் ஆண்டான் அடிமைச் சமுதாய முறை நிலவியதால் பெண்கள் மற்றும் அடிமைகளுக்கு ஆட்சி உரிமைகள் மறுக்கப்பட்டன.

கி.பி. 5 ஆம் நூற்றாண்டு தொடக்கம் 15 ஆம் நூற்றாண்டு வரை உலகில் நிலப்பிரபுத்துவ அல்லது மானிய முறை சமுதாயமே நிலவியது. 15 ஆம் நூற்றாண்டின் பின்னர் வர்த்தக முதலாளித்துவம் வளர்ச்சியடையத் தொடங்கியது. அவ்வேளை இத்தாலியைச் சேர்ந்த மாக்கியவல்லி, இங்கிலாந்தைச் சேர்ந்த ஜோன் லொக் (John Locke), தோமஸ் ஹோப்ஸ் (Thomas Hobbes), பிரான்ஸ்சை சேர்ந்த ரூஸோ, எமான்ரஸ்கியூ போன்றவர்களால் அரசன் (Prince) மனித புரிந்துணர்வு, சமூக ஒப்பந்தம், சட்டம் எனும் நூல்கள் எழுதப்பட்டன. இவ்வாறான ஓர் சமூக அறிவு, எழுச்சி, விஞ்ஞான மறுமலர்ச்சி, புரட்டஸ்தாந்து மத சீர்திருத்த இயக்கம் என்பன சமூக மறுமலர்ச்சிக்கும் தேசிய அரசுகளின் தோற்றத்திற்கும் வித்திட்டன. இங்கு அரசு என்பது நான்கு விடயங்களைக் கொண்டிருந்தது.

01.இனம்/மக்கள் கூட்டத்திற்குரியது.

02.நிலம் மக்கள் தொகை, அரசாங்கம், இறைமை.

03.உயர் வகுப்பினரால் / தேர்ச்சியுடையோரால் ஆளப்படுவது.



04.உள்வெளி இறைமை

அரசாங்கம் மூன்று தறைகளைக் கொண்டிருக்கும்.

01.சட்டவாக்கத் துறை

02.நிறைவேற்றுத் துறை

03.நீதித்துறை என்பனவாகும்.

முதலாவதாக இங்கிலாந்தில் 1688 இல் ஏற்பட்ட அமைதிப்புரட்சியின் மூலம் ஐக்கிய இராச்சியம் (United Kingdom) உருவானதோடு West minister பாராளுமன்ற முறை நடைமுறைக்கு வந்தது. இங்கு பெயரளவில் முடியாட்சியும் நடைமுறையில் பாராளுமன்ற ஜனநாயக ஒற்றையாட்சி முறையும் நிலவுகின்றது. பாராளுமன்ற ஜனநாயகத்தில் பழைமை பேண்கட்சி, தொழிற்கட்சி என்பனவே மாறி மாறி அரசாங்கத்தை அமைத்து வருகின்றன. இதனால் ஐக்கிய இராச்சியம் இரு கட்சி ஆட்சி முறையுள்ள நாடு என அழைக்கப்படுகின்றது. இப்பொழுது மூன்றாவது பலம் வாய்ந்த கட்சியாக லிபரல் கட்சி விளங்குகின்றது. 1492 இல் கொலம்பஸ் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட அமெரிக்காவில் 1776 இல் அமெரிக்க சுதந்திரப் பிரகடனம் வெளியிடப்பட்டது. 1787 இல் 14 பக்கங்களைக் கொண்ட அரசியல் யாப்பின் மூலம் கூட்டாட்சி முறையில் 13 மாநிலங்களைக் கொண்ட ஐக்கிய அமெரிக்க குடியரசு உதயமானது. இன்று 51 மாநிலங்களைக் கொண்ட மிகப் பெரிய கூட்டாட்சி நாடாக வல்லரசாக அமெரிக்கா திகழ்கின்றது. இந்த அமெரிக்க யாப்பை வரைந்த ஜோர்ஜ் வோஷிங்டன், தோமஸ் ஸ்பெயின், பெஞ்சமின் பிராங்ளின் போன்றோர் வெளிவிவகாரம், நிதி, பாதுகாப்பு அதிகாரங்கள் மத்தியில் இருக்க ஏனைய அதிகாரங்கள் அனைத்தும் மாநிலங்களுக்கு உரித்தாக்கப்பட்டன. இவ்வாறாக கூட்டாட்சி முறையால் முதலாளித்துவ ஜனநாயகம் விரிவாக்கம் அடைவதைக் காணலாம்.

அடுத்து பிரான்சிஸ் 1784-1789 காலப் பகுதியில் நடைபெற்ற வன்முறைப் புரட்சி முடியாட்சி நிலமாகிய சமுதாய வீழ்ச்சிக்கு காரணமானதோடு 1789 இல் மனிதன் மற்றும் பிரஜைகள் உரிமைகள் பட்டயம் வெளியிடப்பட்டது. அப்பட்டயம் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் எனும் தத்துவத்தைப் போதித்தது. பிரான்சியப் புரட்சியின் விளைவு நெப்போலியனின் சர்வாதிகார ஆட்சியும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட முதலாளித்துவ ஜனநாயக ஆட்சி முறையுமாகும். சுவிட்சர்லாந்து கூட்டாட்சி முறைக்கு முன்னுதாரணமான நாடாகும். இற்றைக்கு 150 ஆண்டுகளுக்கு முன்னர் கூட்டாட்சி முறை அங்கு உருவானது. அந்நாடு இத்தாலி, ஜேர்மன், பிரான்ஸ், ஒஸ்ரியா போன்ற நாடுகளால் சூழப்பட்டுள்ளது. அந்நாட்டின் தரைத்தோற்றம், இயற்கை அமைவிடம் பல்லினங்கள் கத்தோலிக்க-புரட்டஸ்தாந்து மத மோதல்கள் போன்ற காரணங்களால் தேசிய சபை, அரச சபை, சமஷ்டிப் பேரவை போன்ற அமைப்புக்கள் மூலம் கூட்டாட்சி நடைமுறையில் உள்ளது. ஜேர்மன், பிரான்ஸ், இத்தாலி, உரோமானியம் ஆகிய மொழிகள் அரச கரும மொழிகளாக சம அந்தஸ்துடன் இருப்பது குறிப்பிடத்தக்கது. 1999 ஆம் ஆண்டு யாப்புத் திருத்தத்தின் மூலம் 25 கண்ரன்கள் உள்ளன. மத்திய, மாநிலம் என இரு மைய அரசுகள் இருப்பதோடு அவற்றுக்கு இடையே ஏற்படும் முரண்பாடுகளைத் தீர்க்க சமஷ்டிப் பேரவை உள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஐரோப்பாவில் வர்த்தக முதலாளித்துவத்தைத் தொடர்ந்து கைத்தொழில் புரட்சி இங்கிலாந்தில் 1760-1830 காலப்பகுதியில் ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து ஜேர்மனியிலும் ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் ஏற்பட்டது. இந்த வளர்ச்சியடைந்த கைத்தொழில் முதலாளித்துவ நாடுகள் போட்டி போட்டு ஆசிய ஆபிரிக்க லத்தீன் அமெரிக்க நாடுகளைப் பலாத்காரமாக கைப்பற்றி தமது ஆட்சிக் கட்டமைப்புக்களை உருவாக்கியதோடு தமக்கு தேவையான பொருட்களை உற்பத்தி செய்ததோடு கைத்தொழில் உற்பத்திக்கான மூலவளங்களை சுரண்டி தம் நாடுகளுக்கு கொண்டு சென்றார்கள். கைத்தொழில் புரட்சியால் ஏற்பட்ட உச்சகட்ட முதலாளித்துவ நாடுகளில் உருவான பாட்டாளி வர்க்கமும் அவர்கள் மீதான அடக்குமுறையும் சுரண்டலும் முதலாளித்துவ ஜனநாயகத்தையே கேள்விக்குறியாக்கி அதற்கு எதிரான போராட்டங்கள் புரட்சிகள் வெடித்தன. 1860 இல் அமெரிக்காவின் ஜனாதிபதியான ஆபிரகாம் லிங்கன் கறுப்பின மக்களுக்கான அடிமை ஒழிப்பு சட்டத்தில் 1863 இல் கையொப்பம் இட்டதோடு அமெரிக்க உள்நாட்டு யுத்தத்தில் மரணப்படுக்கை எனப்பட்ட ஹட்ஸ்பேர்க் இடத்தில் அவர் ஆற்றிய சொற்பொழிவு உலகப்பிரசித்தி பெற்றது. அதில் "மக்களால் மக்களுக்காக நடத்தப்படுகின்ற மக்களுடைய ஆட்சிமுறையே ஜனநாயகம்" எனக் குறிப்பிட்டார். மேலும் முதலாளித்துவத்தின் உச்சகட்ட வளர்ச்சியால் உருவான இவ் ஏகாதிபத்திய நாடுகள் தம் காலனித்துவ நாடுகள் மீது மேற்கொண்ட கொடுமைகள், நிறபேதங்கள், மதபேதங்கள், பொருளாதாரச் சுரண்டல், ஆட்சி முறைத் திணிப்புகள் போன்றவற்றால் அந்நாடுகளிலும் முதலாளித்துவ ஏகாதிபத்திய ஜனநாயகத்திற்கு எதிரான போராட்டங்கள், புரட்சிகள் ஏற்பட்டன.

இந்த வகையில் ஏகாதிபத்தியப் போட்டியால் வெடித்த முதலாம் உலகப் போரின் காலகட்டத்தில் ரஷ்யாவில் ஜேர்மனியனின் கொடுங்கோல் ஆட்சிக்கு எதிராக தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் புத்திஜீவிகள் இணைந்து 1917 ஒக்டோபர் புரட்சி மூலம் சமதர்ம ஆட்சியை V.I. லெனின் தலைமையில் உருவாக்கினார்கள். இவ் ஆட்சிக்கட்டமைப்பு முதலாளித்துவ ஏகாதிபத்திய ஆட்சிக் கட்டமைப்புக்கு எதிரானது. இங்கு உற்பத்தி சக்திகள் யாவும் பொதுவுடைமையாக்கப்பட்டதன் மூலம் உழைப்புச் சுரண்டலுக்கு முடிவுகட்டப்பட்டது. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் மூலம் பெரும்பான்மையோர் ஆட்சி உறுதி செய்யப்பட்டது. "மக்களுக்காகவே யாவும் மக்களின் நல்வாழ்வுக்காகவே" என்ற சுலோகத்துடன் தேசிய இனங்களின் சமத்துவம் ஆண்-பெண் இனங்களின் சமத்துவம் என்றவாறு சோசலிஸ ஜனநாயகம் மலர்ந்தது. இங்கு பொதுவுடைமைக் கட்சியின் கீழ் ஒரு கட்சி ஆட்சி முறை நடைமுறைக்கு வந்தது. இதுவரை ரஷ்யா என அழைக்கப்பட்ட நாடு புரட்சியின் பின்னர் "சோவியத் சோசலிஸக் குடியரசுகளின் ஒன்றியம்" என அழைக்கப்பட்டது. பொதுவுடைமைக் கட்சிக் கட்டமைப்புக்கும் சோவியத்திலிருந்து சுப்ரீம் சோவியத் வரையான பாராளுமன்றக் கட்டமைப்புக்கும் இடையே மக்களாட்சித் தத்துவம் கடைப் பிடிக்கப்பட்டது. சோசலிஸ ஜனநாயகம், சுய விமர்சனம், ஜனநாயகம், ஜனநாயக மத்தியத்துவம் என்றவாறு விரிவடைகின்றது. உள்ளூரில் வெண்படை எதிர்ப்பையும் வெளிப்புறமாக முதலாளித்துவ நாடுகளின் அச்சுறுத்தலையும் லெனின் போர்க் காலப் பொதுவுடைமை மூலம் எதிர்கொண்டு சோசலிஸ அரசியல் யாப்பு, தேசிய இனங்களின் சுயநிர் ணயம், புதிய பொருளாதாரத் திட்டம் என்பன மூலம் மக்களின் சுதந்திரம், ஜனநாயகம், சமத்துவம் என்பனவற்றை நிலைநாட்டுவதில் உறுதியாக இருந்தார். லெனின் மரணத்தின் பின்னர் நாட்டின் அகநிலை, புறநிலை சூழ்நிலைகளினால் அவரின் எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை.

முதலாளித்துவ ஜனநாயகத்தின் சீர்கேடுகளே சோசலிஸ ஆட்சிக்கும் சர்வாதிகார ஆட்சிக்கும் வித்திடுகின்றது எனலாம். ஜேர்மனியில் 1929 இல் ஏற்பட்ட பணவீக்கம் பொருளாதார மந்தம் காரணமாக அராஜக செயற்பாடுகள் ஆரம்பமாகின. அதனை தொடர்ந்து 1936 இல் ஹிட்லரின் தேசிய சோசலிஸக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றியது.

ஜேர்மனிய இனமே தூய்மையானது. அதுவே உலகை ஆளப்பிறந்தது எனும் இனவாதக் கொள்கையின் மூலம் ஜேர்மனில் பொருளாதாரம், கல்வி, தத்துவம், விஞ்ஞானம் என்பவற்றில் சிறந்து விளங்கிய யூதர்களை அடியோடு அழிக்கும் நடவடிக்கையாக 60 இலட்சம் யூதர்களை சித்திரவதை செய்து கொன்றொழித்தார். அத்துடன் 1939 இல் ஹிட்லரின் நாஸிப் படைகள் இத்தாலிய சர்வாதிகாரி முசோலினியின் பாசிசப்படைகளுடன் சேர்ந்து ஒஸ்ரியா, சோவியத் ஒன்றியம், பிரித்தானியா போன்ற ஐரோப்பிய நாடுகள் மீது தாக்குதலை மேற்கொண்டு இரண்டாம் உலகப் போரை ஆரம்பித்து வைத்ததும் இவ் வாறாக சர்வாதிகார ஆட்சி கள் மூலம் ஜனநாயகம் குழி தோண்டிப் புதைக்கப்பட்டது.

(தொடரும்...)

பி.முத்துலிங்கம்
ஓய்வு நிலை பிரதிக்கல்வி பணிப்பாளர்,
தென்மராட்சி.

# அரச ஊடகங்கள் தயாசிறி வசம் ரம்புக்வெலவிடமிருந்து பறிப்பு




(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ அணியைச் சேர்ந்த அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் வசம் இருந்த அரச ஊடகங்கள் மற்றும் நிறுவனங்கள் அனைத்தும், மைத்திரிபால சிறிசேனவுக்கு நெருக்கமான 'அமைச்சர் தயாசிறி ஜெயசேகரவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அரச ஊடகங்கள் அனைத்தும், திறன் விருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சின் கீழ் கொண்டு வரும், சிறப்பு அரசிதழ் அறிவிப்பு நேற்று முன்தினம் மாலை ஜனாதிபதியால் வெளியிடப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றம் கலைக்கப்படும் வரையில், மகிந்த அணியைச் சேர்ந்தவரான, ஊடகத்துறை இராஜாங்க அமைச்சரான கெஹலிய ரம்புக்வெலவின் கட்டுப்பாட்டிலேயே இருந்தன.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதையடுத்து. இராஜாங்க மற்றும் பிரதி அமைச்சர்கள் அனைவரும் பதவி யிழந்துள்ளனர்.


இதனால் கெஹலிய ரம்புக்வெல அரச ஊடகங்களைக் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இது ஒரு தொழில்நுட்பச் சிக்கல் என்று கூறிய கெஹலிய ரம்புக்வெல, அதுபற்றி விளக்கமளிக்கவில்லை.

அதேவேளை, அரச தொலைக்காட்சி, வானொலி உள்ளிட்ட அனைத்து அரசாங்க ஊடக நிறுவனங்களும், அமைச்சர் தயாசிறி ஜெயசேகரவின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களப் பணிப்பாளர் நாலக கலுவேவ தெரிவித்துள்ளார். (இ-7)

# ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கே பாராளுமன்றம் கலைக்கப்பட்டது

## அமைச்சர் தினேஷ் புதுவிளக்கம்




(கொழும்பு)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி நிலைமைக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும், முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரியவுமே பொறுப்புக் கூற வேண்டும் என அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார். அரசியலமைப்பிற்கு ஏற்ப ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமித்து அமைத்த புதிய அரசாங்கத்தைத் தோற்கடிப்பதற்காக ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே.க உறுப்பினர்கள் பாரிய முயற்சிகளை மேற்கொண்டனர்.

அவற்றைத் தகர்த்து ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்காகவும் மக்கள் இந்த புதிய அரசாங்கத்தை ஏற்றுக்கொண்டுள்ளனர் என்பதை மேற்குலக நாடுகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினருக்கும் நிரூபிப்பதற்காகவுமே பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

பிரதமர் காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்

## பிறப்பு எண் 9 விதி எண் 7

செவ்வாய், கேது ஆதிக்கத்தில் பிறந்த இவர்கள் எப்போதும் அறவழியிலே நடந்து கொள்வார்கள். அன்பானவர்கள். ஆடம்பரத்தை ஒருபோதும் விரும்ப மாட்டார்கள். ஆன்மீக ஞானம் உடையவர்கள். ஞானத்தின் பேரொளியாய்த் திகழ்வார்கள். புதுப் புதுக் கருத்துக்களை மக்களிடம் பரப்பிய வண்ணம் இருப்பார்கள். சமயத்தின் மீது பற்று கொண்ட இவர்கள் மந்திரம், சித்து, மனோவசியம், மாந்திரிகம் போன்ற கலைகளைக் கற்றுத் தேர்ந்தவர்கள்.

தைரியமான இவர்களுக்குச் சிலநேரங்களில் மன பயம் அதிகரிக்கும். கற்பனை சக்தி மிக்கவர்கள். இவர்கள் கதை, கட்டுரை, காவியம், ஓவியம் போன்றவற்றில் சிறப் படைவார்கள். தனது சொந்தப் பிரச்சினைகள் எதையும் வெளிக்காட்டிக் கொள்ள மாட்டார்கள். ஆன்மீக வாழ்க்கையில் அதிக நாட்டமுடையவர்கள். கலைஞர்கள். நியாயத்தைத் தட்டிக் கேட்பார்கள். நீதிக்குப் புறம்பாக யார் நடந்தாலும் கோபம் வந்துவிடும். இரசாயன ஆராய்ச்சி செய்வார்கள். தனிமையில் வாடுவார்கள்.

யாரையும் உடனே தூக்கி யெறிந்து பேசி விடுவார்கள். அதனால் பெரிய இழப்புகள் வந்தாலும் கவலைப்பட மாட்டார்கள். கடுமையாக உழைத்துப் பின்னர் வெற்றி பெறுவார்கள். மனிதர்களை விடவும் தெய்வ சக்தியை அதிகம் நம்புவார்கள். அன்புக்கும் பாசத்திற்கும் கட்டுப்பட்டவர்கள். தற்புகழ்ச்சிக்கு மயங்கி விடுவார்கள். எத்துறையிலும் நன்குபிரகாசிப்பார்கள். விஞ்ஞான ஆராய்ச்சி உடையவர்கள்.

வாழ்க்கையில் படிப்படியாக முன்னேறுவார்கள். எக்காரியத்திலும் துணிச்சலுடன் முன்னேறி வெற்றி பெறுவார்கள். உடல்பலம் இருக்கும். இவர்களுக்கு இளமை, முதுமை இரண்டும் ஒரே போலத்தான் இருக்கும்.

நன்கு சுறுசுறுப்புடன் உழைப்பார்கள். செய்தொழிலில் முழுநேரமும் அக்கறையுடன் இருப்பார்கள். சிறிய திட்டங்கள் உதவாது, பெரிய திட்டங்கள் வெற்றியைத் தரும். புதுமை இவர்களைப் பெரிதும் கவரும். திடீரென உணர்ச்சிவசப்படுவார்கள்.

நிதானத்தை இழந்து சிலநேரங்களில் செயற்படுவார்கள். குடும்பப் பிரிவினை வாட்டும். முதுமை நெருங்க நெருங்க வாழ்க்கை சோம்பலாகிவிட்டதே என்று வருந்துவார்கள்.

சாதிக்கும் எண்ணமுடையவர்கள். பிறரை மிரட்டுவதிலேயே காலங்கழிப்பார்கள். அடிக்கடி வெளியூர் பயணம் செய்வார்கள். இன்ப சுகங்கள் மனதைக் கொள்ளை கொள்ளும். காடு, மலை, சிகரங்கள், அருவிகள் மனதைக் கவரும். புதுமையான வண்ண வண்ண மலர்களைக் கண்டு லயித்துப் போவார்கள். இவர்கள் தைரியசாலிகள். பிறருக்கு யோசனைகள் சொல்வார்கள். தூய்மையை பெரிதும் விரும்புவார்கள். புத்தகப் பிரியர்கள். பலவற்றைப் பற்றிய ஆராய்ச்சியிலும் மூழ்கியிருப்பார்கள்.

சுதந்திரமான நடவடிக்கை உடையவர்கள். கடினமான உழைப்பிருக்கும். தவறு




செய்த மனிதர்களை மன்னிக்கும் குணமிருக்கும். துன்பத்தில் இருப்பவர்களுக்கு உதவுவார்கள். மனம் எந்நேரமும் சிந்தனை வயப்படும். மனம் அமைதியை விரும்பும் குழப்பங்கள் மனதை வாட்டியெடுக்கும்.

தியானம் செய்வது நல்லது. சில நேரங்களில் முடிவெடுக்க முடியாமல் திணறுவார்கள். எதிர்பாலினத்தவரால் பாதிக்கப்படுவார்கள். உலக இன்பங்கள் அனைத்தையும் வெறுப்பார்கள். குழந்தைகள் மீது அதிக பாசமிருக்கும். தான தர்மங்கள் அதிகமாகச் செய்வார்கள். குருபக்தி உடையவர்கள்.

அடிக்கடி மனம் மாறக்கூடியவர்கள். சட்டம், அரசியல், மருத்துவம், ஆன்மீகம், பேச்சு, எழுத்துத் துறைகளில் சிறப்படைவார்கள். இரகசியம் காப்பதில் வல்லவர்கள். ஜோதிட ஆராய்ச்சிகள் செய்வார்கள்.

தான் செல்லும் வழியில் மற்றவர்களைக் கூட்டிச் செல்வார்கள். தன்னுடைய முன்கோபத்தால் பலவற்றை இழப்பார்கள். யாரையும் எளிதில் எடுத்தெறிந்து பேசிவிடுவார்கள். பிறருடைய கோபத்திற்கும், பகைக்கும் ஆளாவார்கள். முதுமையில் தனிமையை அனுபவித்து மிகவும் கவலையில் மூழ்கி விடுவார்கள். ஓய்வெடுக்கும் நேரத்தில் உழைக்க முயல்வார்கள்.

சம்பாதிக்கும் எண்ணம் இருந்து கொண்டேயிருக்கும். புத்திரபாக்கியங்களுக்கு உதவ முன்வருவார்கள். ஆன்மீக விடயத்தில் மிகவும் ஈடுபாட்டுடன் நடந்து கொள்வார்கள்.

பிறருக்குத் தன்னுடைய தியானத்தின் மூலம், அதீத காந்தசக்தியின் மூலம் அருள்வாக்கு சொல்லி மற்றவர்கள் பிரச்சினைக்குத் தீர்வு சொல்வார்கள். நிலையான புத்தி இல்லாத இவர்கள் மன நிம்மதி வேண்டி பல இடங்களுக்குச் சென்று வருவார்கள்.

அதிர்ஷ்டக் குறிப்புகளை முறையாகக் கையாண்டு வந்தால் அதிர்ஷ்டமான வாழ்க்கை நிச்சயம் சித்திக்கும்.

அதிர்ஷ்ட திகதிகள்
6,15,24,5,14,23,1,10,19,28

துரதிர்ஷ்ட திகதிகள்
8,17,26,2,11,20,29

அதிர்ஷ்ட நிறங்கள்
வெளிர்நீலம், மஞ்சள், சிவப்பு, பொன்னிறம்.

துரதிர்ஷ்ட நிறங்கள்
கறுப்பு, இருண்ட நிறங்கள்

அதிர்ஷ்ட இரத்தினங்கள்
ஜேட், வைடூரியம், சந்திரகாந்தக்கல், டெரிடாட், பவளம், ஓபல், ப்ளட்ஸ்டோன்.


(தொடரும்....)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

93



அதனால் அவர்கள் 1640 களில் மேற்படி இரு துறைமுகங்களையும் கண்டி மன்னன் இரர்சிங்கனிடம் கையளித்தனர். இந்நிகழ்வு அவர்களின் அடிப்படை நோக்கத்திற்கு எதிர்மறையானதாக இருந்தும் இராசசிங்கனின் எதிர்ப்பைப் பெற விரும்பாத காரணத்தினால் ஏற்பட்டதாகவே கொள்ளவேண்டும்.

அத்தோடு மேற்படி பிராந்தியங்களில் கறுவா, ஏலம், கராம்பு போன்ற வாசனைத் திரவியங்கள் விளைவதில்லை. இதன் காரணமாகவும் டச்சுக்காரர் கிழக்குத் துறைமுகங்களில் தமது கவனத்தை ஆரம்ப காலகட்டங்களில் செலுத்தவில்லை என்று கொள்வதிலும் தவறு இருக்க முடியாது.

ஆனால் கண்டி மன்னன் இராசசிங்கனுடனான அரசியல், வர்த்தக உறவுகள் பாதிப்படைந்து கொண்டு போன வேளையில் டச்சுக்காரரின் கவனம் கிழக்குத் துறைமுகங்களில் குவிந்தது.

இதன் விளைவாக மேற்படி துறைமுகங்களில் இராசசிங்கனுடைய வர்த்தக நடவடிக்கைகளுக்குத் தடைபோடுவதற்கு டச்சுக்காரர் திட்டமிட்டனர்.

இவ்வாறான நடவடிக்கைக்கு பற்றேவியா (Bativia) அரசும் டச்சு அரசும் அனுமதி வழங்கின. இதன் எதிர் விளைவாக இராசசிங்கனின் எதிர்ப்பு அதிகரித்தது.

இந்நிலைமை கிழக்குத் துறைமுகங்களைக் கைப்பற்றும் டச்சுக்காரரின் ஆர்வத்தை மேலும் தூண்டவும் தவறவில்லை.

1659 களில் தமக்கும் இராசசிங்கனுக்கும் இடையிலான உறவில் அதிகளவு விரிசலும் நெருக்குவாரங்களும் ஏற்பட்ட நிலையில் டச்சுக்காரர் மேற்படி நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை. காரணம் டச்சுக்காரரிடம் போதிய படைபலம் இல்லாமையேயாகும்.

அத்தோடு மேற்படி துறைமுகங்களைக் கைப்பற்றினால் அவற்றைப் பாதுகாப்பதற்கு அதிகளவு செலவாகும் என்பது டச்சுக்காரருக்குத் தெரிந்த விடயமாகும்.

அதேநேரம் ஆங்கிலேய வர்த்தகர்கள் மேற்படி துறைமுகங்களுக்கு வருவதும் இராசசிங்கனுடன் தொடர்புகளை வைத்திருப்பதும் டச்சுக்காரருக்குத் தெரியவந்தது.

இந்நிகழ்வுகள் மீண்டும் டச்சுக்காரரின் கவனத்தை இத்துறைமுகங்களின் பக்கம் திருப்பின. ஆங்கிலேய வர்த்தக கப்பல்கள் மேற்படி துறைமுகங்களுக்கு வந்து துணிகளை விற்றுவிட்டு இந்தியத் துறைகளில் விற்பதற்காகப் பாக்கு ஏற்றிச் செல்ல இராசசிங்கன் ஏற்கனவே அனுமதியளித்திருந் தான் என அறியமுடிகிறது.

> “ஆங்கிலேய வர்த்தகர்கள் மேற்படி துறைமுகங்களுக்கு வருவதும் இராசசிங்கனுடன் தொடர்புகளை வைத்திருப்பதும் டச்சுக்காரருக்குத் தெரியவந்தது. இந்நிகழ்வுகள் மீண்டும் டச்சுக்காரரின் கவனத்தை இத்துறைமுகங்களின் பக்கம் திருப்பின. ஆங்கிலேய வர்த்தக கப்பல்கள் மேற்படி துறைமுகங்களுக்கு வந்து துணிகளை விற்றுவிட்டு இந்தியத்துறைகளில் விற்பதற்காகப் பாக்கு ஏற்றிச் செல்ல இராசசிங்கன் ஏற்கனவே அனுமதியளித்திருந்தான் என அறியமுடிகிறது”

## டச்சுக்காரர் ஆக்கிரமிப்பும் தமிழர் பிரதேசங்களை சுரண்டியமையும் (கி.பி. 1658-கி.பி. 1796)

இதன் பிரகாரம் றொபேட் நொக்ஸ் என்ற ஆங்கிலேய வர்த்தகரின் ஆன் (Anne) என்னும் கப்பல் துணிகளை விற்கும் பொருட்டு கொட்டியாரக்குடா துறைமுகத்தில் 1659 இல் நங்கூரமிட்டிருந்தது.

டச்சுக்காரருக்கு மேற்படி நங்கூரமிட்டிருக்கும் செய்தி 1660 இன் ஆரம்பப் பகுதியில் தெரியவந்தது.

இதனால் டச்சுக்காரர் உடனடியாக ஆங்கிலேயருடன் முரண்பட விரும்பவில்லை. ஆனால் ஆங்கிலேய வர்த்தகர்களின் வர்த்தக நடவடிக்கைகள் திருகோணமலைத் துறைமுகத்தில் அதிகரிக்கத் தொடங்கின.

டச்சுத்தளபதி வான்கோன்ஸ் மேற்படி நடவடிக்கைகளை உடன் தடுத்து நிறுத்தவேண்டும் என ஜூலை 1660 இல் முடிவு செய்தான்.

இராசசிங்கனோடு தொடர்பு கொண்டு இவ்விடயம் பற்றிக் கேட்டபோது சகல வியாபாரிகளும் தமது பொருட்களைக் கொண்டு வந்து விற்பதற்கு எதுவிதத் தடையும் கிடையாதென அவன் பதிலளித்தான்.

ஆனால் டச்சுக்காரர் எதுவித எதிர்ப்புக்களையும் தொடங்கவில்லை. எனினும் இராசசிங்கனுடைய பதில் வான் கோன்சுக்கு நிச்சயம் பெரும் அதிர்ச்சியையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்தியிருக்கும்.

இந்நிலைமையின் மத்தியில் ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பனி கறுவா வர்த்தகத்தில் ஈடுபடவும் பாக்கு, துணி முதலிய வர்த்தகத்தைத் தென்னிந்தியாவுடன் மேற்கொள்ளவும் கொட்டியாரத்தில் ஒரு வியாபார நிலையத்தை நிறுவி இராசசிங்கனின் அனுமதியைப் பெற்றது.

இதுவிடயமாகப் பேரம் பேசுவதற்கும் நேரடிப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவும் இராசசிங்கனுடன் தொடர்புகளை மேற்கொண்டனர்.

ஏற்கனவே . திருகோணமலைத் துறைமுகத்தில் நங்கூரமிட்டிருந்த றொபேட் நொக்ஸ் என்ற ஆங்கிலேய வர்த்தகரையும் அவனுடன் சேர்த்து 29 ஆங்கிலேயர்களையும் சந்தேகத்தின் பேரில் கைது செய்து கண்டி மன்னன் இராசசிங்கன் கண்டிச் சிறையில் அடைத்திருந்தான்.

அவர்களை விடுவிப்பதற்காகவும் ஆங்கிலேயக் கம்பனியார் இராசசிங்கனுடன் தொடர்ச்சியாகத் தொடர்புகளை மேற்கொண்ட வண்ணம் இருந்தனர். இந்நிகழ்வுகளை அவதானித்த டச்சுக்காரருக்கு ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பனியினர் திருகோணமலையில் நிலைகொள்ளப் போகின்றார்கள் என்ற அச்சம் தோன்றியது.

இதுவிடயமாக டச்சுக்காரர் இராசசிங்கனுடன் தொடர்பு கொண்டபோது அவன் மேற்படி விடயத்தில் அவர்கள் தலையிடக்கூடாது எனப் பதில் அனுப்பி வைத்தான்.

இவ்வாறான பதில் 1638 இல் இராசசிங்கனுக்கும் டச்சுக்காரருக்கும் இடையில் ஏற்பட்ட ஏகபோக வர்த்தக உரிமை உடன்பாட்டை மீறுகின்ற செயலாக காணப்பட அது டச்சுக்காரரின் ஆத்திரத்தை மேலும் கிளறியது.

இவ்வாறான தொடர்ச்சியாக முரண்பாடுகளுக்கு மத்தியில் இலங்கை நோக்கிவந்த இரண்டு ஆங்கிலேய வர்த்தகக் கப்பல்களை டச்சுக்காரர் பறிமுதல் செய்தனர்.

இக்கால கட்டங்களில் கிழக்குக் கரையோரம் தவிர்ந்த ஏனைய கரையோரப் பிரதேசங்கள் யாவும் டச்சுக் காரரின் இறுக்கமான கடற் பாதுகாப்பு வலயங்களாக மாற்றப்பட்டிருந்தன.

(தொடரும்)

# ஜனநாயகத்தை குழிதோண்டி புதைத்துவிட்டார் ஜனாதிபதி

## இராதாகிருஸ்ணன் காட்டம்

(கொழும்பு)

ஜனநாயகத்தை பாதுகாப்பதற்காக ஆட்சிபீடம் ஏற்றப்பட்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று ஜனநாய கத்தை குழி தோண்டிப் புதைத்துவிட்டதாக தமிழ் முற்போக்குக் கூட்டணியின் இணைத் தலைவரான முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுச்சாமி இராதாகிருஸ்ணன் கடுமையாக குற்றம் சாட்டியுள்ளார்.



கண்டி புஸ்ஸல்லாவ ஸ்ரீ கல்கி மாணவ சேவா சமித்தியின் ஏற்பாட்டில் இம்முறை தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த புள்ளிகளை பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று றம்பொடை தொண்டமான் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கு பதக்கம், சான்றிதழ் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டதுடன், இந்த பெறுபேறுகளுக்கு காரணமாக இருந்த அதிபர் ஆசிரியர்களும் நினைவுச் சின்னம் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர், நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமைகள் தொடர்பில் அங்கு கூடியிருந்த மாணவர்கள்,ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு தெளிவுபடுத்தியதுடன், ஜனாதிபதியின் நடவடிக்கைகளையும் கடுமையாக விமர்சித்தார். (இ-7)

## சு.க.வா? பெரமுனவா?

# தேர்தல் விடயத்தில் பசில் விடாப்பிடி கண்டியிலேயே தங்கிவிட்ட மைத்திரி



(கொழும்பு)

நாடாளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன தனது மொட்டு சின்னத்திலேயே போட்டியிட வேண்டும் என்று அதன் நிறுவுனரான பசில் ராஜபக்ஷ உறுதியான நிலைப்பாட்டில் இருந்து வருவதால், மைத்திரி- மகிந்த கூட்டணி இடையே முரண்பாடுகள் நீடிப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்வது குறித்து, மைத்திரிபால சிறிசேன மற்றும் மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் தமது ஆலோசகர்கள் மற்றும் தமது கட்சிகளின் மூத்த தலைவர்களுடன் இணைந்து கடந்த வெள்ளிக்கிழமை ஆலோசனை நடத்தினர்.

இதன்போது ஏனைய பங்காளிக் கட்சிகளுடன் இணைந்து, பரந்துபட்ட கூட்டணியை அமைத்துப் போட்டியிடுவதென முடிவு செய்யப்பட்டது.

எனினும், இன்னமும் மாற்றுக்கருத்துக்கள் நீடித்து வருகின்றன. தாமரை மொட்டு சின்னத்தில் தமது வேட்பாளர்களை நிறுத்த வேண்டும் என்று பசில் ராஜபக்ஷ விரும்புகிறார்.

அதேவேளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தமது அடையாளம்பாதுகாக்கப்பட வேண்டும் என்றும்,சின்னம் தொடர்ந்தும்பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தி வருகிறது.

இந்த நிலையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் கண்டியிலேயே தங்கியிருந்தார். (இ-7)

# உலக முடிவில் விழுந்து பெண் மாயம்

(ஹற்றன்)

பட்டிபொல பொலிஸ்பிரிவுக்குட்பட்ட ஹோட்டன் சமவெளிப் பகுதியிலுள்ள உலக முடிவைக் காணச் சென்ற வெளிநாட்டுப் பெண்ணொருவர், உலக முடிவின் பள்ளத்தில் விழுந்து காணாமல் போயுள்ளார் என, பட்டி பொல பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று காலை 7.30 மணியளவில், உலக முடிவுக்குச் சென்ற, ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த ஹோட்ரா என்ற 35 வயதுடைய பெண்ணே, இவ்வாறு காணாமல் போயுள்ளார் என, விசாரணையின் மூலம் தெரிய வந்துள்ளது.

இவர், கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னர், உல்லாசப் பயணத்துக்காக, நுவரெலியாவுக்கு வருகை தந்து, விடுதியொன்றில் தங்கியிருந்துள்ளார். காணாமல் போன பெண்ணைத் தேடும் பணிகளை, இராணுவத்தினரும்நுவரெலியா பொலிஸாரும் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர்.(இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1555

Search for people, places and things

### போஸ்




### சேத்தன்




### ராஜ்குமார்




### திருமுருகன்




### சஞ்சீவ்




### அருண்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# நாடாளுமன்றைக் கலைத்து ஜனநாயகத்தை படுகொலை செய்தார் ஜனாதிபதி மைத்திரி

## தமிழக முதல்வர் பழனிச்சாமி குற்றச்சாட்டு

(சென்னை)

பெரும்பான்மையை நிரூபிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டவுடன், இலங்கை நாடாளுமன்றத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலைத்தமையானது ஜனநாயகப் படுகொலையென தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி குற்றம்சாட்டியுள்ளார்.



சென்னையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்த போதே எடப்பாடி பழனிசாமி இதனைத்தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் ஈழத் தமிழ் மக்கள் உயிருக்கும் உடைமைக்கும் உத்தரவாதமின்றி வாழ்ந்ததுடன் அதில் பலர் கொல்லப் பட்டனர்.

இதனால் முன்னாள் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா, போர் குற்றவாளியாக மகிந்த அறிவிக்கப்பட வேண்டுமென குரல் கொடுத்தார்.

ஆனால், நேற்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, திட்டமிட்டு பெரும்பான்மை நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவை பெற்ற ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை, பிரதமர் பதவியிலிருந்து நீக்கி விட்டு மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமித்து ஜனநாயகத்தை படுகொலை செய்துள்ளார்.

மேலும் நாளை மறுதினம் 14 ஆம் திகதி நாடாளுமன்றத்தை கூட்டி மகிந்த சார்பில் பெரும்பான்மையை நிரூபிக்க தயாரென கூறிய ஜனாதிபதி, அப்பெரும்பான்மையை நிரூபிக்க முடியாத நிலைமை உருவாகியவுடன் நாடாளுமன்றத்தை கலைத்து பொதுத் தேர்தலை அறிவித்துள்ளார். குறித்த ஜனாதிபதி மைத்திரியின் செயற்பாடு ஜனநாயகத்துக்கு முரணானது.

ஆகையால் இவ்விடயத்தில் இந்திய மத்திய அரசாங்கம் உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும்" என எடப்பாடி பழனிச்சாமி வலியுறுத்தியுள்ளார். (இ-7)

# பாராளுமன்றத்தைக் கலைத்தமை அரசியலமைப்புக்கு முற்றிலும் முரண்

## ஹமீட் விளக்கம்

(கொழும்பு)

பாராளுமன்றத்தை ஜனாதிபதி கலைத்தமை அரசியலமைப்புக்கு முற்றிலும் முரணானது என அரசியல் விமர்சகரும் சட்ட முதுமாணியுமான வை. எல்.எஸ்.ஹமீட் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நாட்டு மக்களிடையே தற்பொழுது எழுகின்ற கேள்விகளுக்கு அவர் இவ்வாறு விளக்கமளித்துள்ளார்.

19 ஆவது திருத்தத்திற்குமுன் பொதுத்தேர்தல் நடைபெற்று முதல் ஒரு வருடத்திற்குள் ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைக்க முடியாது. அதன்பின் வேண்டிய நேரம் கலைக்கலாம். இந்த அடிப்படையில்தான் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அவரது ஆட்சியில் இரு தடவைகள் பாராளுமன்றத்தைக் கலைத்தார்.

19 ஆவது திருத்தத்தின் பின் முதல் 4 1/2 வருடங்களுக்குள் பாராளுமன்ற உறுப்பினர்கள் 2/3 பெரும்பான்மையால் பாராளுமன்றில் பிரேரணை நிறைவேற்றுவதன் மூலம் கோரிக்கை விடுத்தாலேயொழிய கலைக்க முடியாது.

இதன் சட்டத்தன்மையும் வாதப்பிரதிவாதங்களும் ! அரசியலமைப்பின் சரத்து 33 ஜனாதிபதியின் கடமை, அதிகாரம் மற்றும் தொழிற்பாடு தொடர்பாக குறிப்பிடுகின்றது. இதில் சரத்து 33(2)(c) ஜனாதிபதிக்கு பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்கு, ஒத்திவைப்பதற்கு, கலைப்பதற்கு அதிகாரம் இருக்கின்றது என்று கூறுகின்றது.

சரத்து 70 (1) " ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கூட்டலாம், ஒத்திவைக்கலாம், கலைக்கலாம் என்று கூறிவிட்டு அதற்கு ஒரு கட்டுப்பாட்டை விதிக்கிறது. அதுதான் முதல் 4 1/2 வருடங்களுக்கு பாராளுமன்றத்தைக் கலைக்கக் கூடாது என்பதாகும்.

இங்கு புரிந்துகொள்ள வேண்டியது 33(2)(c) ஜனாதிபதிக்கு பாராளுமன்றத்தைக் கலைக்கின்ற அதிகாரம் இருக்கின்றது என்பதை அடையாளப்படுத்துகின்றது.

70(1) ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைக்கலாம் ஆனால் முதல் 4 1/2 வருடங்களுக்கு இந்த அதிகாரத்தைப் பாவிக்கக்கூடாது என்று கட்டுப்படுத்துகிறது.

அதாவது உங்களுக்கு அதிகாரம் இருக்கின்றது ஆனால் முதல் 4 1/2 வருடம் பாவிக்க முடியாது என்று கட்டுப்பாடு இடுகின்றது. இங்கு பாவிக்கப்படுகின்ற சொல் "shall not" அதாவது கலைக்கவே கூடாது என்பதாகும்.

இந்தக் கட்டுப்பாட்டை மீறி எவ்வாறு ஜனாதிபதி கலைக்க முடியும்? ஆனால் இந்தக் கட்டுப் பாட்டிற்கு ஒரு விதிவில க்கு உண்டு: அதுதான் 2/3 பெரும்பான்மையால் வேண்டுகோள் விடுத்தால் அந்தக்கட்டுப்பாடு தளர்த்தப்படுகின்றது என்பதாகும்.

அதிகாரத்தை அடையாளப்படுத்துகின்ற 33(2)(c)அதனைக் கட்டுப்படுத்துகின்ற 70(1)ஐ எவ்வாறு மேவமுடியும். எனவே, மேவமுடியும் என்பது பிழையான வாதம்.

பிழையான ஆலோசனைகளைக் கேட்டு ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டால் என்ன செய்வது? நீதிமன்றம் செல்ல முடியுமா?

19 ஆவது திருத்தத்திற்குமுன் ஜனாதிபதிக்கெதிராக நீதிமன்றம் செல்லமுடியாது. ஆனால் ஜனாதிபதியின்கீழ் வருகின்ற அமைச்சுகளைப் பொறுத்தவரை அவர் அவற்றிற்கான அமைச்சர் என்ற வகையில் பிழைகள் நடக்கும் போது அவருக்கு எதிராக நீதிமன்றம் செல்லமுடியும். ஆனால் ஜனாதிபதிக்குப் பதிலாக சட்டமா அதிபரை பிரதிவாதியாக குறிப்பிடவேண்டும்.

19 இற்குப் பின் ஜனாதிபதிக்கெதிராக, நேரடியாக சிவில் மற்றும் குற்றவியல் வழக்குகள் தொடுக்க முடியாது. அதைத்தவிர ஜனாதிபதிக்கெதிராக அடிப்படை உரிமை மீறல் மனு கொண்டுவரலாம். அதில் பிரதிவாதியாக சட்டமா அதிபர் குறிப்பிடப்படுவார். எனவே, தாராளமாக வழக்குத் தாக்கல் செய்யமுடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 250 | 240 | 220 | 240 |
| உருளைக்கிழங்கு | 130 | 130 | 140 | 130 | 140 |
| பச்சைமிளகாய் | 150 | 160 | 140 | 110 | 160 |
| தக்காளி | 400 | 300 | 300 | 150 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 500 | 50 | 50 | 40 | 40 |
| கோவா | 180 | 140 | 180 | 150 | 200 |
| கரட் | 200 | 300 | 200 | 140 | 320 |
| பூசணி | 50 | 50 | 60 | 40 | 80 |
| புடோல் | 150 | 180 | 120 | 110 | 200 |
| வாழைக்காய் | 80 | 80 | 60 | 60 | 120 |
| சின்ன வெங்காயம் | 120 | 120 | 160 | 120 | 160 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 120 | 110 | 120 |
| பாகற்காய் | 400 | 380 | 400 | 200 | 400 |
| வெண்டிக்காய் | 200 | 180 | 160 | 100 | 200 |
| கருணைக் கிழங்கு | 60 | 70 | 60 | 60 | 80 |
| பயற்றங்காய் | 380 | 300 | 280 | 300 | 400 |
| லீக்ஸ் | 160 | 140 | 160 | 110 | 200 |
| பீற்றூட் | 40 | 120 | 160 | 60 | 160 |
| கறிமிளகாய் | 300 | 320 | 200 | 250 | 280 |
| முருங்கைக்காய் | 400 | 260 | 300 | 110 | 200 |
| போஞ்சி | 350 | 280 | 280 | 250 | 280 |
| கத்தரிதம்புள்ள | 230 | 200 | 200 | 200 | 240 |
| கீரை - 1பிடி | 80 | 70 | 40 | 30 | 60 |
| தேசிக்காய் | 500 | 400 | 450 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 55 | 60 | 45 | 30-50 |
| இராசவள்ளி | 250 | 240 | 250 | — | 240 |
| வெங்காயப்பூ | 350 | — | — | 120 | — |
| முள்ளங்கி | 80 | 120 | 120 | 30 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 50 | 20 | 50 |
| வல்லாரை | 20 | 50 | 20 | 15 | 25 |
| ஈரப்பலா | 70 | 100 | 70 | 110 | 120 |

# செய்தித்துளிகள்

## நன்னீர் மீன் உற்பத்தி விஸ்தரிப்பு

(ஹற்றன்)

மலையகப் பகுதிகளிலுள்ள நீர்த்தேக்கங்களில் நன்னீர் மீன் உற்பத்தியை விஸ்தரிப்பதற்கு தேசிய நீரியல் வள அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ், மாத்தளை, கண்டி, கேகாலை, களுத்துறை, நுவரெலியா, பதுளை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களிலுள்ள தோட்டங்களின் நீர்த்தேக்கங்களில் நன்னீர் மீன் உற்பத்தி முன்னெடுக்கப்படவுள்ளது.

இதற்காக, 11 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக தேசிய நீரியல் வள அபிவிருத்தி அதிகாரசபை சுட்டிக்காட்டியுள்ளது. (இ-7)

## கோழி, ஆட்டுப் பண்ணைகளை விஸ்தரிக்க அரசு நடவடிக்கை

(இரத்தினபுரி)

இரத்தினபுரியில் பண்ணைகளை விஸ்தரிப்பதற்குரிய நடவடிக்கைகளை சப்ரகமுவ மாகாண கால்நடை உற்பத்தி, சுகாதாரத் திணைக்களம் முன்னெடுத்துள்ளது.

திணைக்களத்தின் இரத்தினபுரி மாவட்ட பிரதிப்பணிப்பாளர் டி.பி.டி.ஜே. ஹேமச்சந்திர இதனைத் தெரிவித்தார்.

இதனூடாக கோழி, ஆட்டுப் பண்ணைகளை அபிவிருத்தி செய்தற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதன் பிரகாரம், கால்நடைகளை கொள்வனவு செய்வற்கு 50 வீத சலுகை வழங்கப்படவுள்ளதுடன், ஆரம்பக் கட்டணமாக 306 பண்ணையாளர்களுக்கு 3060 கோழிக்குஞ்சுகள் வழங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய மூவர் கைது

(கொழும்பு)

மொரட்டுவ, கடுபெத்த பகுதியில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் மூவரை கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் 24 மற்றும் 28 வயதுக்கிடைப்பட்டவர்கள் எனவும், கல்கிஸை, பிலியந்தல, மொரட்டுவ, பாணந்துறை, களுத்துறை மற்றும் அளுத்கமை போன்ற பிரதேசங்களில் இடம்பெற்ற பல்வேறு கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் எனவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது. (இ-7)

## 14 மோட்டார் சைக்கிள்களுடன் 34 பேர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

பிலியந்தல, ஜாலியகொட - கெஸ்பேவ வீதியில் ஆபத்தான முறையில் மோட்டார் சைக்கிள்களை செலுத்திய 34 பேரை கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இவர்களிடமிருந்து 14 மோட்டார் சைக்கிள்களையும் மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

## பேருந்து மீது கல் வீச்சு

(கொழும்பு)

கொழும்பிலிருந்து அநுராதபுரம் நோக்கிப் பயணித்த தனியார் துறையினருக்கு சொந்தமான பேருந்து ஒன்றின் மீது கற்களால் வீசித் தாக்குதல் நடத்தி சேதம் விளைவிக்கப்பட்டுள்ளது.

சிலாபம் - பங்கதெனியா பகுதியிலேயே குறித்த தாக்குதல் நேற்று முன்தினமிரவு 9.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

தாக்குதலுக்கிலக்கான பேருந்தின் கண்ணாடி நொறுங்கியதோடு பயணி ஒருவரும் காயங்களுக்குள்ளாகியுள்ளார். (இ-7)

## 52ஆம் ஆண்டு நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் முஸ்லிம் பகுதியில் வாழ்ந்து மறைந்த பிரபல வர்த்தகரும் கொடை வள்ளலுமாகிய யூ.எம். ஜத்துறூஸின் 52 ஆவது ஆண்டு நினைவு தினம் இன்று மாலை யாழ். பள்ளிவாசலிலும் யாழ். முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் அலுவலகத்திலும் சமய நிகழ்வும் விசேட உரையும் இடம்பெறும். (இ)




# குருடர்கள் எவ்வளவு?



ஒருநாள், மன்னர் அக்பர் ஒரு ஐயத்தை எழுப்பினார்: உலகத்தில் குருடர்கள் தொகை எவ்வளவு?" இந்த வினாவுக்குச் சபையிலிருந்தவர்களுள் பெரும் பகுதியினர், உலகத்தில் குருடர்களின் தொகை எவ்வளவு என்பதைத் துல்லியமாகக் கூறுவது கடினம். ஆனால் கண்பார்வை உள்ளவர்களைவிட கண் பார்வையற்றவர்கள் தொகை மிகமிகக் குறைவாகத்தான் இருக்கும் என்னும் கருத்தைத் தெரிவித்தனர்.

அக்பர், "பீர்பால்! உம் கருத்து என்ன?" எனக் கேட்டார்.

பீர்பால் எழுந்து, "மன்னர் பெருமானே! இப்போது இங்கு சொல்லப்பட்ட கருத்தே குருட்டுத்தனமானதாகும். உலகத்தில் கண்பார்வையற்ற குருடர்களின் தொகை தான் மிகமிக அதிகம். குறிப்பாகச் சொல்வதானால், இந்த உலகத்தில் பெரும்பகுதியினர் குருடர்கள்தான்" என்றார்.

"பீர்பால்! உமது கருத்து விநோதமாய் இருக்கிறது! உம் கருத்துப்படி இந்தச் சபையில் இருப்பவர்களுள் பெரும் பகுதியினர் குருடர்கள் தான் என்று கூறுவீர் போலிருக்கிறதே?" என்றார் அக்பர்.

"அதிலென்ன சந்தேகம்?" என்றார் பீர்பால்" அப்படியானால் நானும் ஒரு குருடனா?" என்றார் அக்பர். அதற்கு, "பொதுவாக ஒரு மனிதனை என்ன காரணத்தைக் கொண்டு குருடன் என்று கூறுகிறோம்?" என்று வினா எழுப்பினார் பீர்பால்.

"ஒரு பொருளை, அது இன்ன பொருள்தான் என்று சரியாக அடையாளம் கண்டு கொள்ள முடியாதவனைப் பொதுவாகக் குருடன் என்று கூறுகிறோம்" என அக்பர் மறுமொழி சொன்னார்.

"இப்போது ஒரு சோதனை செய்து பார்ப்போம்" என்று கூறி,

ஒரு துணியை எடுத்து, "மன்னர் அவர்களே! இது என்ன?" என்று கேட்டார். அது ஒரு துண்டுத் துணி!" என்றார் மன்னர் பீர்பால்.

அதே துணியைத் தமது தலையில் ஒழுங்காகச் சுற்றிக் கட்டிக்கொண்டு, "இது என்ன?" என்று கேட்டார்.

"அது ஒரு தலைப் பாகை!" என்றார் மன்னர்.

பீர்பால் அதே துணியைக் கழுத்தில் தொங்க விட்டுக்கொண்டு, "இப்போது இது என்ன?" என்றார்.

அது "கழுத்துக்குட்டை அல்லது சவுக்கம்" என்றார் அக்பர். பீர்பால் கழுத்துத் துணியை எடுத்து இடுப்பில் சுற்றிக் கட்டிக் கொண்டார்.

"இப்போது இது என்ன துணி" என்றார் பீர்பால்.

இப்போது அது லுங்கி அல்லது வேஷ்டி என்று கூறலாம் எனக் கூறினார்.

பீர்பால் அக்பரை நோக்கிப் பணிவான குரலில், "மன்னர் பெருமானே! என் கையில் இருக்கும் இந்தத் துண்டுத் துணியைப் பற்றி உங்களால் ஒரே மாதிரியான கருத்தைக் கூற முடியவில்லை. கண்களால் இதனை நன்றாகப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே, ஒரு பொருளைப் பற்றிப்பலவிதமான கருத்துக்களைக் கூறினீர்கள்.

ஒரு குருடனின் நிலையும் இதுதானே. தனக்கு பார்வையில்லாத காரணத்தால், ஒரு பொருளைப் பற்றித் தெளிவான கருத்தை அவனால் கூற முடியவில்லை. இப்போது தங்கள் நிலையும் அதுவாகத் தானே இருக்கிறது? பார்வையுள்ளவர்கள் என்று கர்வப்பட்டுக் கொண்டிருப்பவர்கள் என்னையும் சேர்த்துத்தான் கூறுகிறேன். கண் இருந்தும் குருடர்களாகத்தான் இருக்கிறோம்.

இந்தக் கண்ணோட்டப்படி பார்த்தால், குருடர்களைவிடக் கண் பார்வையுள்ள குருடர்களின் தொகை மிகவும் அதிகம் என்று நாம் கருதலாமல்லவா?" என்று கூறினார். ஆழ்ந்த சிந்தனை வளத்துடன் கூடிய, உண்மைகள் நிறைந்த பீர்பாலின் அந்தச் சொற்களைக் கேட்டு, மிகவும் பாராட்டினார் அக்பர்.

## விடுகதைகள்

●வெள்ளைக் குதிரையும் கறுப்புக் குதிரையும் மாறி மாறி ஓடும். யாராலும் அவற்றை நிறுத்த முடியாது. அவை என்ன?

பகலும் இரவும்

●எங்கப்பன் சொறியன், எங்கம்மா சடைச்சி, நான் சர்க்கரைக் கட்டி. அது என்ன?

பலாப்பழம்

●செங்கல் கட்டடம் அதற்குள் பொன் கட்டடம். அதற்குள் வெள்ளிக் கட்டடம். அதற்குள் திருக்குளம். அது என்ன?

தேங்காய்

●டாக்டர் வந்தாரு ஊசி போட்டாரு காசு வாங்காமல் பறந்து போனாரு. அவர் யார்?

கொசு

●தாயை அடுப்பில் வைத்துப் பிள்ளையைப் பொரித்துத் தின்றான். அது என்ன?

துவரங்குச்சி, துவரம்பருப்பு

●தொப்பையனுக்கு ஒரு வாசல் தோழனுக்கு இரண்டு வாசல். அது என்ன?

காற்சட்டை

●குண்டோதரன் வாயில் குள்ளன் நுழைந்தால்.குபேர பட்டினத்திற்கு வழி தெரியும். அது என்ன?

பூட்டு, சாவி

## ஆசிரியர்



பாடம் கற்றுத் தருவாரே
பண்பாய் வாழச் செய்தாரே

ஒழுக்கம் கற்றுத் தருவாரே
ஒழுங்காய் வாழச் செய்தாரே

அன்பு செய்ய சொன்னாரே
அழகாய் பேசச் செய்தாரே

கருணை காட்டச்சொன்னாரே
கவிதை பாடச் செய்தாரே

தப்பு செய்தால் அடிப்பாரே
திரும்பச் செய்யாமல் தடுப்பாரே

ஏணி போலே இருப்பவரே
எங்களை ஏற்றி விட்டாரே

அறிவை வளர்த்த ஆசிரியரே
ஆயிரம் நன்றி கூறுகிறோம்

## பொது அறிவு துணுக்குகள்

● "உயிரியல் கோட்பாட்டின் தந்தை" என்று அழைக்கப்படுபவர், சார்லஸ் டார்வின்.

● முதுகெலும்புடன்தோன்றிய முதல் உயிரினம், மீன்.

● பாலில் "லாக்டிக் அமிலம்" உள்ளது.

● இன்சுலின், கணையத்தில் சுரக்கிறது.

● பெரு நாட்டின் தலைநகரத்தின் பெயர், லிமா.

● முந்திரி உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் நாடு, இந்தியா.

● "பிரமிடு கோவில் நாடு" என்று அழைக்கப் படுவது, பர்மா.

● இத்தாலி நாட்டின் சர்வாதிகாரியாக இருந்தவர், முசோலினி.

● சுமாத்ரா தீவில் மலரும் ராப்லிசியா ஆர்னல்டை எனும் பூ தான், உலகிலேயே மிகப்பெரிய பூவாகும்.

● ஒவ்வொரு மனிதனுக்கும் சுமார் 1 1/2 கிலோ எடையுடைய மூளை உள்ளது.

● கல்சியம் கார்பனேட் என்ற இரசாயனப்பொடியைக் கட்டியாக்கி சோக்பீஸ் தயாரிக்கப்படுகிறது.

● நத்தை ஒரு மைல் (1.6 கிலோமீற்றர்) தூரம் செல்வதற்கு, சுமார் 17 நாட்கள் வரை ஆகும்.

ஏமாறுபவர்கள் இருக்கும்வரை ஏமாற்றுபவர்கள் ஏமாற்றிக் கொண்டே இருப்பார்கள்.

– யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தீர்வு வாங்கப் போன மக்காள் வெறுங்கையோடு திரும்பியதேனோ

தமிழ் மொழி எதனையும் உள்வாங்கி ஜீரணிக்கும் சக்தி கொண்டது.

எதையும் ஓரங்கட்டாமல் எல்லோரும் வாழுதல் என்ற அடிப்படையில் களவியல் என்பதைக்கூட ஒழுக்கமாகக் கருதுகின்ற உயர்மை தமிழுக்கன்றி உலகில் வேறு எந்த மொழிக்கும் இருக்க வாய்ப்பில்லை எனலாம்.

இவ்வாறாக தமிழ் மொழி இலக்கியச் சுவையோடு மானிடத்தின் வாழ்வை மையப்படுத்தித் தன்னைத் தந்து கொள்கிறது.

இத்தகைய உயர்மைச் சிறப்புமிக்க தமிழ் மொழிக்கு சுவையும் இனிமையும் ஊட்டுகின்ற வகிபங்கை தன்னை அறிந்தார் அனைவருக்கும் ஈகைசெய்த மொழியாகவும் தமிழ்மொழியை நாம் காணமுடியும்.

• சுருங்கக்கூறின் ஒரு கிராமத்தின் வாழ்வியலில், முதுமையின் எல்லைக்குள் இருக்கின்ற வயோதிபரும் தம் பங்களிப்பை வழங்கும் வகையில் தமிழ் மொழி தாராளத்தன்மை கொண்டது.

ஆம், தமிழ் மொழியின் இலக்கியச் சுவை சந்துபொந்தெல்லாம் செல்வதற்கு நாட்டார் இலக்கியம் பேருதவியாயிற்று.

ஊர்தோறும் கொட்டிக்குவிந்து கிடக்கும் நாட்டார் இலக்கியத்தில் தாலாட்டுப் பாடும்; பாங்கன் பாங்கி பாடல் வரும்; ஏர்ப்பாடல் கொட்டும்; கடற்றொழில் களைப்பைப் போக்கும் ஏலேலோ... கீதம் இசைக்கும்; ஒருவரின் வாழ்வு முடிந்த பின்னர் ஒப்பாரிப் பாடல் கேட்கும்.

இப்படியாக எதற்கும் இடம் தந்த நாட்டார் பாடலை எங்கள் தமிழ் அரசியல்வாதிகளின் சமகால நிலைமையைச் சித்தரிக்க நினைத்த போது,

*தீர்வுப் பொதியோடும் வந்தீரோ தம்பி*
*தீர்வு மலைநாடும் கண்டீரோ தம்பி*

*நம்புங்கள் அரசியல் அமைப்பு*
*நமக்கு கிடைக்கும் என்று சொன்னீரோ*
*ஏன்தான் வெறுங்கையோடு*
*திரும்பி வந்தீரோ மக்காள்*

*பொல்லா வினைகள் புரிந்தீர்கள்*
*எங்கள் பொன்னான முதலமைச்சருக்கு*
*செய்யாத தீங்கெல்லாம் செய்தீரோ தம்பி*

*ரணில் ஐயா இருக்கின்ற தடிப்பில்*
*கண்மண் தெரியாமல் நடந்தீரோ தம்பி*
*இப்ப எல்லாம் போச்சுதே – இனி*
*ராசாக்கள் என்ன செய்வீரோ நீங்கள்*

*சமஷ்டி எல்லாம் இருக்கு*
*இது கிடைக்கா விட்டால் – எனக்கு*
*எதற்குப் பதவி என்றீரோ தம்பி*
*இனி என்ன செய்யப் போறீரோ ரணிலை நம்பி*

*முதலமைச்சர் பதவி நீங்க*
*வடக்கை உயர்த்துவோம் என்று*
*நம்பியிருந்த உங்கள் தலையில்*
*பேரிடி விழுந்ததோ மக்காள்*

*நெஞ்சிடி வந்து இனி உங்களை*
*வாட்டுமல்லோ மக்காள்*
*செய்த வினையறுக்க எங்கள் சனாதிபதி*
*தன்னையும் அறுத்தார் – உங்கள்*
*தலையிலும் மண்ணைக் கொட்டினார்*

*இனி நாங்கள் கூடி அழுதாலும்*
*நீங்கள் செய்த கொடுமை – இந்த*
*செகத்தினில் தீராதுதானே*
*தீர்வுவாங்கப் போன எங்கள் மக்காள்*

# எம் மண்ணின் மைந்தர்கள் வளமற்றிருக்க

# மதிலேறிக் குதித்தவர்கள் எமது வளங்களை கொள்ளையடிக்கும் துர்ப்பாக்கிய நிலை

## நீதியரசர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

எம் மண்ணின் மைந்தர்கள் வளம் அற்றிருக்க, வாழ்வாதாரம் தொலைத்து நிற்க மதிலேறிக் குதித்தவர்கள் எமது வளங்களைக்கொள்ளை அடித்துச் செல்லும் துர்ப்பாக்கிய நிலை இன்று உருவாகி விட்டது என வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வட மாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் மரநடுகையும் மலர்க் கண்காட்சியும் நேற்று முன்தினம் நல்லூர் சங்கிலியன் பூங்காவில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

மரம் நட்டால் வளர்ந்து பயன் தரும். நான் ஒரு கட்சியை நட்டுள்ளேன். வருங்காலத்தில் அது வளர்ந்து மக்களுக்குப் பயன் தரும் என்று எதிர்பார்க்கின்றேன். வருங்கால இளைய தலைவர்களை அது உருவாக்கும் என்று எதிர்பார்க்கின்றேன். அக்கட்சியைப் பாதுகாத்துப் பராமரிக்க மக்களாகிய உங்கள் அனைவரதும் ஒத்துழைப்பை வேண்டி நிற்கின்றேன்.

வட மாகாண, கிழக்கு மாகாண மக்களின் அன்றைய நிலை வேறு இன்றைய நிலை வேறு. போரானது மிரட்டுவோரையும் சுரண்டுவோரையும் கரவாகக் கவர்வோரையும் வகைதொகையின்றி எம் மண்ணில் கால் பதிக்க வழி அமைத்துவிட்டது.

எம் மண்ணின் மைந்தர்கள் வளம் அற்றிருக்க, வாழ்வாதாரம் தொலைத்து நிற்க மதிலேறிக் குதித்தவர்கள் எமது வளங்களைக்கொள்ளை அடித்துச் செல்லும் துர்ப்பாக்கிய நிலை இன்று உதயமாகி விட்டது. இறாலைத் தந்து திமிங்கிலத்தை அறுவடை செய்வதே அவர்கள் குறிக்கோள்.

நாட்டில் சமாதானச் சூழல ஏற்பட்ட பின்னர் பன்னாட்டு நிறுவனங்கள் எமக்கென பல இலட்சம் செலவு செய்வதாகக் கூறி கிடைக்கும் நிதிகளிலே அவர்களின் நிறுவன நிர்வாகத்திற்கே ஐம்பது சதவிகிதத்திற்கு மேல் அடித்துக் கொண்டமை நீங்கள் அறியாத ஒன்றாக இருக்கலாம்.

ஆனால் அதற்காக பன்னாட்டுப் பணிகள் இங்கு பரவலாக வேண்டாம் என்று நான் கூறவரவில்லை. பன்னாட்டில் இருந்து பணியாற்ற வந்தோரின் பணி பற்றிப் பரிசீலிக்க எமக்குப் பலம் காணாமல் இருப்பதைக் குறிப்பிடுகின்றேன்.

எமது சூழலியல் வளங்களைப் பாதுகாக்கின்ற பணிகளை மத்திய அரசு தொடர்ந்து தன்னகத்தே வைத்துக் கொண்டிருக்கின்றது. எமது சூழல் வேறுபட்டதொன்று என்பதைத் தெரியாமலேயே, புரியாமலேயே எமது சூழலைப் பாதுகாக்கும் பொறுப்பை வேற்றான்தான் ஏற்றுக் கொண்டுள்ளான்.

எமது நில அமைப்பு, கலை, கலாசாரம், பண்பாட்டு விழுமியங்கள் ஏனைய மாகாணங்களின் நிலப்பண்புகள் பண்பாட்டு நியமங்களில் இருந்து நில அமைப்பு, வாழ்முறை, வழக்கம், விழுமிய வழிமுறைகளால் வேறுபட்டவை என்பதை அவர்கள் புரியாமலேயே இங்கு அதிகாரம் செலுத்துகின்றார்கள்.

தெற்கிலிருந்து இங்கு எம்மைப் பாதுகாக்க என்று வருபவர்களின் மனோநிலை வேறு விதமாக அமைந்திருப்பதை நான் கண்டுள்ளேன். வடக்கில் இருந்து, கிழக்கில் இருந்து எதனைச் சுருட்டிச் செல்லலாம் என்றே அவர்கள் மனோநிலை இருப்பதைக் கண்டுள்ளேன். எம்முட் சிலரும் சூழலைத் தமது சுரண்டலுக்குப் பாவிக்கவே நினைக்கின்றார்கள்.

நாம் இயற்கையின் ஒரு அங்கமே. இந்த உலகில் நாமும் ஒரு உயிர் வாழ் இனமே. நாம் எம்மைச் சுற்றியுள்ளவற்றை அழித்தால் இயற்கையின் சமநிலை பாதிக்கப்படும்.

இயற்கை உயிரியல் ரீதியாக ஒரு சமநிலையைக் கடைப்பிடித்து வந்துள்ளது. ஆனால் மனிதன் அந்த சமநிலையை மாற்றி அமைக்கப் பார்க்கின்றான்.

அண்மைக் காலங்களில் எமது பகுதிகளில் காணப்பட்ட பெரிய மரங்களும் விருட்சங்களும்வகைதொகையின்றி வெட்டி அழிக்கப்பட்டு வந்துள்ளன. அதன் காரணமாகத்தான் மழை வீழ்ச்சி சென்ற சில வருடங்களில் வெகுவாகக் குன்றிப் போய் விவசாயப் பயிர்ச்செய்கை மற்றும் உப உணவுப் பயிர்ச்செய்கை, மரக்கறி வகைகள் உற்பத்தி ஆகியன வீழ்ச்சி அடைந்தன. போரக்காலப் பசுமை அழிவு தொடர்ந்தும் நடைபெறுவதை நாம் விடலாகாது.

நவீன இலத்திரனியல் கருவிகள் மற்றும் கையடக்கத் தொலைபேசிகள் ஆகியவற்றின் அபரிமிதமான வளர்ச்சி காரணமாக எமது பகுதியில் காணப்பட்ட சிட்டுக்குருவி போன்ற பல சிறிய பறவையினங்கள் முற்றாக அழிந்து போயுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. இது வருத்தத்திற்குரியது. இந்த நிலை தொடருமானால் எதிர்காலத்தில் எமது குழந்தைகளின் மூளை வளர்ச்சி கூட பாதிப்படையும்.

வளர்ச்சியடைந்துள்ள நாடுகளில் இந்த நுண்ணலைகளின் தாக்கங்கள் பற்றி பொதுமக்களுக்கு விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதற்கு அந்த நாட்டின் அரசாங்கங்கள் ஏற்ற பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன. எனினும் எமது பகுதிகளில் தேவைக்கு அதிகமாக இந்தப் பாவிப்பானது ஒரு நவீன கலாசாரமாக மாறியிருப்பது வேதனைக்குரியது.

வளர்ச்சியடைந்துள்ள இந்த இலத்திரனியல் யுகத்தில் கையடக்கத் தொலைபேசிப் பாவனையற்ற சமூகத்தை உருவாக்குவதென்பது இயலாத காரியம். எனினும் இந்த இலத்திரனியல் சாதனங்களை எம்மில் இருந்து எவ்வளவு தூரத்தில் வைத்திருக்கவேண்டும், எங்கு வைத்திருக்க வேண்டும் அதன் பயன்பாடுகளை எவ்வாறு மட்டுப்படுத்த முடியும் என்பன பற்றி பொதுமக்கள் அறிவூட்டப்பட வேண்டும்.

எங்கள் பூர்வீகத்தைப் பற்றி சற்று சிந்தித்துப் பாருங்கள். இயற்கையை நேசிக்கின்ற இயற்கையோடு ஒன்றிய ஒரு சமூகமாகவே எமது முன்னோர்கள் இருந்தார்கள். மண்ணோடு வாழ்பவர்கள் மரத்தோடு வாழவே விரும்புவார்கள். கடல் நீரோடு வாழ விரும்புவர்கள்மீனோடு வாழவே விரும்புவார்கள். ஆனால் நெருப்போடு வாழ விரும்புபவர்கள்தான் பட்டணத்தில் மின்னோடு வாழ விரும்புகின்றார்கள். மின்சாரம் கைகொடுத்தால்தான் அவர்களுக்கு வாழ்வுண்டு. எங்களைப் பொறுத்தவரையில் நாங்கள் மண்ணோடும் நீரோடும் வாழ விரும்புவர்கள். ஆனால் இன்று மின்னோடு வாழப் பழக்கப்பட்டு வருகின்றோம்.

நாம் இயற்கையை நேசித்த, இயற்கையோடு ஒன்றி வாழ்ந்த ஒரு சமூகம் என்று. இயற்கையில் பிறந்த நாம் இன்று செயற்கைக்கு அடிமையாகிவிட்டோம்.

எமது வாழ்க்கை செயற்கையின் சிறைக் கைதியாகி விட்டது. ஆனால் நாம் இன்று இழைக்கின்ற செயற்கை பால்பட்ட தவறுகள் எமது வருங்காலச் சந்ததியினரின் வாழ்க்கையைக் கேள்விக்குறியாக்கி விடும் என்பதை மறக்காதீர்கள் என மேலும் தெரிவித்தார். (இ-9)

## தென்மராட்சியில் 2 நாட்களில் 6 பேர் விஷக்கடிக்கு இலக்கு

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பகுதியில் கடந்த இரு தினங்களில் ஆறு பேர் விஷக்கடிக்கு இலக்காகி சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

வரணியைச் சேர்ந்த 25 வயது த.கதீசன் பாம்புக் கடிக்கு இலக்கான நிலையிலும் மிருசுவிலைச் சேர்ந்த 3 வயது பவிசா, கிராம்புவிலைச் சேர்ந்த 21 வயது பிரகலாதன், கொடிகாமத்தைச் சேர்ந்த 52 வயது பராசக்தி, மிருசுவிலைச் சேர்ந்த 39 வயது சிவசுப்ரமணியம், கொடிகாமத்தைச் சேர்ந்த 5 வயது அனுசிகா ஆகியோர் இனந்தெரியாத விஷக்கடிக்கு இலக்கான நிலையிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர். (இ-30)

## வைத்தியரிடம் விளக்கம் கோரல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்குள் நுழைந்து அலுவலக நடைமுறைகளுக்கு ஒவ்வாத காரியங்களை மேற்கொண்ட வைத்தியரிடம பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் விளக்கம் கோரியுள்ளது.

கடந்த 7ஆம் திகதி சாவகச்சேரி ஆதார வைத்திய சாலை வளாகத்திற்குள் அத்தியடசகரின் அனுமதி இன்றி நுழைந்து அலுவலக ஆவணங்களை தவறாகப் பயன்படுத்தியமை, வைத்திய அத்தியட்சகர் கடமை முடிந்து சென்ற பின் வைத்தியசாலை வளாகத்திற்குள் வந்து அலுவலக நடைமுறைக்கு ஒவ்வாத நிகழ்வுகளில் பங்கு பற்றியமை தொடர்பாக உடனடியாக குறித்த பெண் வைத்தியரது விளக்கத்தை தெரிவிக்குமாறு யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரால் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (மு-30)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யாழ்.பிரதேசத்தில குளபபிட்டியிலிருந்து ஆனைக்கோட்டைவரை, மூத்த விநாயகர்கோவில் பிரதேசம், சென்பீற்றஸ் தேவாலயம், நவாலி, வேலக்கை பிள்ளையார் கோவிலடி, அட்டகிரி ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில அடம்பனிலிருந்து பாப்பமோட்டை வரை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2018

"சுவர்மையாகச் செவிமடுத்துக் கொண்டிருக்கும் விண்ணுடன் பேசுவதற்கான மண்ணின் இடையறாத முயற்சிகளே மரங்கள்"

–இரவீந்திரநாத் தாகூர் (வங்கக் கவிஞர்)

# பல்கலைக்கழகங்களுக்கிடையிலான கராத்தே போட்டி யாழ்.பல்கலைக்கழகத்திற்கு இரண்டு வெண்கலம்







பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான கராத்தே போட்டி கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை மொரட்டுவை பல்கலைக்கழகத்தில் இடம் பெற்றது.

இதில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இரண்டு வெண்கலப் பதக்கத்தை வென்றார்கள்.

50kgக்கு உட்பட்ட குமித்தே போட்டியில் ஒபயசேகர வெண்கலப் பதக்கத்தையும்,68kgக்கு உட்பட்ட குமித்தே போட்டியில் கவிந்து நெத்சர் வெண்கலப் பதக்கதையும் பெற்றுக் கொண்டார்கள்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கான கராத்தே பயிற்சிகளை சென்சை றொசிஹறிந் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-9)

# அனல் பறந்த ஆட்டம்; காலிறுதியில் சென்.பற்றிக்ஸ்



வாழ்வா சாவா என்ற போட்டியில், முழுத்திறனுடன் ஆடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி, முன்கள வீரர்களின் சிறப்பான நகர்வுகள் மூலம் கோல் மழை பொழிந்து காலிறுதிக்குள் நுழைந்தது.

இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் அனுமதியுடன், பப்பரே நிறுவனத்தால் இலங்கை பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு கால்பந்தாட்ட அணிகளுக்கிடையில் பப்பரே சம்பியன்சிப் சுற்றுப் போட்டியொன்று நடத்தப்பட்டு வருகின்றது.

தேசிய ரீதியில் 20 அணிகள் பங்குபற்றும் இந்தச் சுற்றுப்போட்டியில் அணிகள் 4 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பிரிவிலும் உள்ளடங்கியுள்ள 5 அணிகளுக்கிடையில் லீக் முறையில் முதற்சுற்று போட்டிகள் நடத்தப்பட்டு, அவற்றில் முதலிரு இடங்களையும் பெறும் அணிகள் காலிறுதிக்குத் தகுதி பெறும்.

அந்த வகையில், குழுபியில் இடம்பிடித்திருந்த யாழ்ப்பாணம் பத்திரிசியார் (சென்.பற்றிக்ஸ்) கல்லூரிக்கும் கட்டுனேரி சென். செபஸ்ரியன் கல்லூரி அணிக்கும் இடையிலான போட்டி வென்னப்புவ அல்பேர்ட் எப்.பீரிஸ் விளையாட்டு மைதானத்தில் கடந்த 9 ஆம் திகதி நடைபெற்றது.

ஏற்கனவே நடைபெற்ற 3 போட்டிகளில் 1 இல் வெற்றியும், 2 போட்டிகளை சமநிலையிலும் முடித்திருந்த சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி, இந்தப் போட்டியில் வெற்றிபெற்றால் மாத்திரமே, காலிறுதிக்கு நுழைய முடியும் என்ற கட்டாயத்தில் களமிறங்கியது. எதிரணியான செபஸ்ரியன் கல்லூரி 1 போட்டியில் வெற்றிபெற்று, இரண்டு போட்டிகளில் தோல்வியடைந்து சுற்றிலிருந்து ஏற்கனவே வெளியேறும் நிலையிருந்தது.

இந்தப் போட்டியில் தொடக்கம் முதல் சென்.பற்றிக்ஸ் அணியின் ஆட்டம் தூள் பறந்தது. பற்றிக்ஸின் முன்கள வீரர்களை செபஸ்ரியன் கல்லூரி பின்கள வீரர்களால் கட்டுப்படுத்த முடியாமல் போனது. முதல் பாதியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 3 கோல்களைப் போட்டது. தொடர்ந்து இரண்டாவது பாதியிலும், சென்.பற்றிக்ஸ் அணி அபாரமாகச் செயற்பட்டு, மேலும் 3 கோல்களைப் போட்டது. முடிவில் சென். பற்றிக்ஸ் அணி, 06:00 என்ற கோல்கள் கணக்கில் வென்றது.

சென்.பற்றிக்ஸ் அணி சார்பாக ஹெயின்ஸ் 3, சாம்சன் 2 மற்றும் சாந்தன் 1 கோலையும் போட்டனர். இந்த வெற்றியுடன் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி காலிறுதிக்குள்ளும் அதிரடியாக நுழைந்தது. (க-26)

# எவ்வளவோ முயன்றோம் ஆனால் முடியவில்லை

## தோல்வி குறித்து சண்டிமால்



இங்கிலாந்து அணியுடனான முதல் டெஸ்ட் போட்டியின் தோல்விக்கு பின்னர் அது குறித்து இலங்கை அணியின் தலைவர் சண்டிமால் பேசியுள்ளார்.

இலங்கைக்கு சென்றுள்ள இங்கிலாந்து கிரிக்கெட் அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இவ்விரு அணிகள் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி காலி மைதானத்தில் நடந்த நிலையில் இலங்கை அணி 211 ஓட்டங்கள் வித்தியாசத்தில் படுதோல்வி அடைந்தது.தோல்விக்கு பின்னர் பேசிய இலங்கை அணித் தலைவர் தினேஷ் சண்டிமால், எங்களது ஆட்டம் மோசமாக இருந்தது. இது போன்று ஆடினால், வெற்றி வாய்ப்பு கிடைக்காது. எல்லா சிறப்பும் இங்கிலாந்து வீரர்களையே சாரும்.

அவர்களது விக்கெட்டுகளை சீக்கிரம் வீழ்த்த கடுமையாக முயன்றும் பலன் கிட்டவில்லை. அவர்கள் எல்லா வகையிலும் எங்களை வீழ்த்தி விட்டனர். இலங்கை கிரிக்கெட்டுக்கு ஹெராத் எந்த அளவுக்கு பங்களிப்பை அளித்திருக்கிறார் என்பதை நாங்கள் அறிவோம்.

இது மிகவும் உணர்வுபூர்வமான நாளாக அமைந்தது. ஆனால் அவரை வெற்றியுடன் வழியனுப்ப முடியாமல் போனது வருத்தம் அளிக்கிறது என கூறியுள்ளார். (க)

# அறிமுகப் போட்டியிலேயே அசத்திய இந்திய அணியின் தமிழ்ப் பெண்



இந்திய அணியில் இடம் பிடித்துள்ள தமிழ்ப் பெண்ணான ஹேமலதா தயாளன், மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான போட்டியில் 3 விக்கெட்டுக்களை எடுத்து அசத்தியுள்ளார்.

மேற்கிந்திய தீவுகளில் தொடங்கியுள்ள மகளிர் இருபது- 20 தொடரின் முதல் ஆட்டத்தில், இந்திய அணி 34 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்தை வீழ்த்தியது. இந்திய அணித்தரப்பில் ஹேமலதா, பூனம் யாதவ் ஆகிய வீராங்கனைகள் தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இவர்களில் ஹேமலதா சென்னையைச் சேர்ந்த தமிழ்ப்பெண் ஆவார். மேலும் தனது அறிமுக இருபது-20 போட்டியிலேயே அவர் 3 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். அத்துடன் துடுப்பாட்டத்திலும் அதிரடியாக 7 பந்துகளில் 2 பவுண்டரிகளுடன் 15 ஓட்டங்கள் எடுத்து அசத்தியுள்ளார்.

தான் வீசிய 4 ஓவர்களில் 26 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 3 விக்கெட்டுகளை கைப்பற்றிய ஹேமலதா, சென்னையில் கல்லூரி படிப்பை முடித்தவர் ஆவார்.

இந்திய ஏ அணியில் இடம்பெற்ற ஹேமலதா, அவுஸ்திரேலிய சுற்றுப் பயணம் செய்தபோது 3 போட்டிகளில் 87 ஓட்டங்கள் குவித்திருந்தார்.

அதன் பின்னர், கடந்த செப்டெம்பர் மாதம் இலங்கை அணிக்கு எதிரான 3 ஒருநாள் போட்டிகளில் 41 ஓட்டங்கள் மற்றும் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# நரகத்துக்கு ஒப்பான வாழ்க்கையை வாழ்ந்தேன்; ஓய்வு குறித்துப் பேசிய முனாப் படேல்



சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ள முனாப் படேல்,

தான் ஓய்வு பெறுவதால் வருத்தங்கள் எதுவும் இல்லை எனவும் நான் கிரிக்கெட்டிலிருந்து விடைபெறுகிறேன் என்பதையும் என்னால் நம்பமுடியவில்லை.

எனக்கு கிரிக்கெட் தவிர எதுவும் தெரியாது எனவும் தெரிவித்துள்ளார். 15 ஆண்டுகள் களத்தில் இருந்த முனாப் படேல், தாம் கிரிக்கெட் பக்கம் வரவில்லை எனில், தங்களது கிராமத்து இளைஞர்கள் போன்று ஆபபிரிக்க நாட்டில் அன்றாட உணவுக்காக போராடும் நிலையில் இருந்திருப்பேன் என தெரிவித்துள்ளார்.

தரை ஓடுகள் கழுவும் நிறுவனம் ஒன்றில் தினசரி 35 ரூபாய் ஊதியத்தில் பணியாற்றிவந்த தமக்கு இந்திய கிரிக்கெட் அணியில் இடம் கிடைக்கும் என கனவிலும் கருதியதில்லை.

நரகத்துக்கு ஒப்பான வாழ்க்கை, இருப்பினும் தமது பெற்றோர்கள் அதை எதையும் தங்கள் பிள்ளைகளிடம் தெரிவித்ததில்லை என நினைவு கூர்ந்துள்ளார்.

கிரிக்கெட் வாழ்க்கையின் தொடக்க காலகட்டத்தில் தம்மை அனைவரும் தவறாகவே புரிந்து கொண்டனர் எனவும், குஜராத் மாநிலத்தின் மிகவும் பிற்படுத்தப்பட்ட கிராமத்தில் இருந்து வந்ததனால் கூட இருக்கலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (க)

# தேர்தல் நடத்த...

பெரமுனவின் உறுப்புரிமையை பெறும் உத்தியோகபூர்வ நிகழ்வு விஜேராம மாவத்தையிலுள்ள கட்சி தலைமையகத்தில் நேற்று இடம்பெற்றது. அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே, பிரதமர் மகிந்த தேர்தல் தொடர்பாக கருத்துத் தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் குறிப்பிடுகையில்,

நல்லாட்சி அரசாங்கத்தை கவிழ்த்து நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றுவதே எமது பிரதான திட்டமாக இருந்தது. அரசாங்கத்தை கவிழ்த்துவிட்டு மக்கள் தீர்ப்புக்கு செல்ல வேண்டும்என்பதே எமது நோக்கமாக இருந்தது.

நாம் எடுத்திருக்கும் இந்த தீர்மானம் சரியா, தவறா என்பதை தீர்மானிக்கும் அதிகாரம் மக்களிடமே இருக்கிறது. மக்களுக்குள்ள இந்த அதிகாரத்தை நீதிமன்றத்தால் கூட சவாலுக்குட்படுத்த முடியாது.

அவ்வாறு செய்யப்படுமாயின், அது எமது நாட்டு இறைமைக்கு எதிரானது. அத்தோடு, அது மக்களுக்கு எதிரான செயற்பாடாகவும் அமையும்.

ஜனநாயகத்தை நிலைநிறுத்துவதே தேர்தலாகும். தேர்தல் என்றால் ஏன் அச்சப்படுகிறார்கள் என்று எனக்கு தெரியவில்லை.

எங்களுக்கு தேர்தல் குறித்த அச்சம் கிடையாது. தேர்தலுக்கு முகங்கொடுக்க நாம் தயாராகவே இருக்கிறோம். தேர்தலில் கண்டிப்பாக வெற்றிபெறுவோம் என்ற நம்பிக்கையும் எமக்குள்ளது.

19ஆவது திருத்தச் சட்டத்தின்படி ஜனாதிபதிக்கு நாடாளுமன்றத்தை கலைப்பதற்கும் தேர்தலுக்குச் செல்வதற்கும் அதிகாரம் இருக்கிறது. எது ஜனநாயகம் என்பதை மக்கள் தீர்மானிக்கட்டும்.

நாங்களும் இப்போது எங்களது சட்டத்தரணிகளை சந்திக்கவுள்ளோம். அறிவித்தபடி ஜனவரி 5ஆம் திகதி தேர்தல் நடைபெறும். அதுகுறித்த வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டுள்ளது. இதனை எவராலும் தடுக்க முடியாது.

மக்களிடம் சென்று மக்களின் ஆணையை கேட்பதையே சர்வதேச நாடுகள் ஜனநாயகம் என ஏற்றுக்கொண்டுள்ளன. ஆகவே எமது முடிவை ஜனநாயகத்திற்கு விரோதமானதென கூற முடியுமா?

ஜனாதிபதியும் எமது கட்சியின் தலைவர்களும் சர்வதேச நாடுகளின் இராஜதந்திரிகளை சந்தித்து எமது தீர்மானம் குறித்து விளக்கமளித்து வருகின்றனர். அவர்கள் கண்டிப்பாக எமது தீர்மான்ம் குறித்து புரிந்து கொள்ள வேண்டும். நானும் அவர்களை விரைவில் சந்தித்து எமது தீர்மானம் குறித்து விளக்கமளிக்கவுள்ளேன் என்றார். (மு)

# 1 1/2 வயது...

பகுதியில் இடம்பெற்றுள்ளது.

அரியாலை புங்கங்குளத்தை சேர்ந்த ஒன்றரை வயதுடைய வசீகரன் ரித்திக் என்ற ஆண் குழந்தையே மேற்படி பரிதாபமாக உயிரிழந்துள்ளது.

நேற்று முன்தினம் குறித்த குழந்தையின் தாயார் இந்த குழந்தையுடன் அயல் வீட்டுக்குச் சென்றுள்ளார். அங்கு வேறு குழந்தைகளுடன் தனது குழந்தையை விளையாடுவதற்கு முற்றத்தில் விட்டுவிட்டு தாயார் வீட்டினுள் கதைத்துக்கொண்டு இருந்துள்ளார்.

குறித்த குழந்தை தவழ்ந்து சென்று அருகில் இருந்த கிணற்றினுள் விழுந்துள்ளது. ஆனால் குழந்தை விழுந்ததை அறியாத ஏனைய பிள்ளைகள் மற்றும் தாயார் சில மணி நேரத்தின் பின்னர் குழந்தையை காணவில்லை என தேடியுள்ளனர்.

அப்போது கிண ற்றினுள் குழந்தை இறந்த நிலையில் மிதப்பதை அவதானித்துள்ளனர். உடனடியாக குழந்தை மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனாவைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ் போதனா வைத்திய சாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (மு-9)

# நாடாளுமன்றி...

அதில் அவர் தெரிவித்ததாவது.

தற்போதைய அரசியல் நிலைமைகளை தெளிவுபடுத்தும் வகையில் 14 நாட்களுக்குள் இது நான் உங்கள் முன் உரையாற்றும் மூன்றாவது முறையாகும். முதலாவதாக மகிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியில் அமர்த்தியதை அடுத்து நான் எனது கருத்துக்களை முன்வைத்தேன்.

அதேபோன்று நவம்பர் மாதம் ஐந்தாம் திகதி பத்தரமுல்லையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின்போது இரண்டாவது தடவையாக அரசியல் நிலைமைகளை உங்களுக்கு தெளிவுபடுத்தினேன். நேற்று (இன்று) மூன்றாவது முறையாக உங்கள் முன் உரையாற்றுகின்றேன். இதன் முக்கியத்துவம் யாதெனில் இலங்கை பாராளுமன்றத்தைக் கலைத்ததன் பின்னர் உங்கள் முன் உரையாற்றுவதாகும். குறிப்பாக மிகச் சுருக்கமாகவேனும் பாராளுமன்றத்தைக் கலைத்ததற்கான காரணங்களை தெளிவுபடுத்த விரும்புகின்றேன்.

மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக்கியதை அடுத்து பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டிய தேவை ஏற்பட்டு அரசியல் நிலைமை சூடுபிடித்த பின்னணியில் பாராளுமன்ற உறுப்பினர்களின் பெறுமதி நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல் அவர்களாலேயே அது 500 மில்லியன் ரூபாய் வரை நிர்ணயிக்கப்பட் டது. அது மிகவும் வருந்தத்தக்கதோர் நிலைமையாகும். உங்களது மதிப்பிற்குரிய வாக்குகளைப் பெற்று இந்த பாராளுமன்றத்திற்கு வந்திருக்கும் பிரதிநிதிகள் தமது வணிக பெறுமதியை அல்லது ஒரு விலையை நிர்ணயிப்பது எந்தளவிற்கு அரசியல் ரீதியில் மோசமான துரதிஷ்டமான நிலையாகும் என்பதை நீங்கள் அனைவரும் ஏற்றுக் கொள்வீர்கள்

இதுவே பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கு முக்கிய காரணமாக அமைந்தது. பாராளுமன்றத்தைக் கலைக்க நேர்ந்த இரண்டாவது காரணி முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவின் அதிசயமான செயற்பாடாகும். அவரின் செயற்பாட்டையிட்டு நான் மிகவும் வருந்துகின்றேன். அவர் எனது மிகவும் நெருங்கிய நண்பராவார். நம் நாட்டு பாராளுமன்ற சம்பிரதாயத்தினுள் நியமிக்கப்பட்ட சபாநாயகர்கள் அவர்களது நடுநிலைத் தன்மையையும் பக்கச்சார்பின்மையையும் மிக சிறந்த முறையில் வெளிப்படுத்தி வந்தார்கள்.

அந்த நிலைமை 1947 முதல் இதுவரை இருந்து வந்தது. பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளை, பாராளுமன்றத்தின் சம்பிரதாயம் ஆகியவற்றைப் பொருட்படுத்தாது ஜனாதிபதிக்குரிய விஷேட அதிகாரங்களுக்கமைய பிரதமரை நியமித்ததை ஏற்றுக்கொள்ளாத தன்மையை ஏற்படுத்தி சபாநாயகரினால் வெளியிடப்பட்ட அறிக்கைகளும் அவரது நடத்தையும் பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கான இரண்டாவது காரணமாக அமைந்ததென்பதை நான் இங்கு குறிப்பிட வேண்டும்.

இங்கே அரசியல் ரீதியான ஒரு நிலைமையினை கவனத்தில் கொள்ளும் வகையில் உங்களது ஞாபகத்திற்கு இவ்விடயத்தையும் கொண்டுவர விரும்புகிறேன். 2015 ஜனவரி 08 ஆம் திகதி நடைபெற்ற தேர்தலின் பின்னர் அதற்கு மறுநாள் ஜனாதிபதியாக நான் பதிவியேற்ற மறுகணமே ரணில் விக்கிரமசிங்கவை பிரதமர் பதவியில் அமர்த்தினேன். அதன்போது பாராளுமன்ற உறுப்பினர்களில் 225 பேரில் 162 உறுப்பினர்களின் பலம் இருந்த டி.மு.ஜயரத்னவை நீக்கிவிட்டே 41 உறுப்பினர்கள் மாத்திரம் இருந்த ரணில் விக்கிரம சிங்கவை பதவியில் அமர்த்தினேன். இந்த நிலைமை உங்களுக்கு ஞாபகம் இருக்கும் என நான் நினைக்கின்றேன்.

அச்சமும் இன்று பலரும் பேசுகின்ற பாராளுமன்றத்தின் பெரும்பான்மையை பற்றி எவரும் பேசவில்லை என்பதை நீங்களும் அறிவீர்கள். பெரும்பாலும் ஜனாதிபதியினால் நம்பிக்கை வைக்கத்தக்க பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பாராளுமன்ற உறுப்பினர்களின் விருப்பத்தை வெல்லத்தக்க ஒரு பாராளுமன்ற உறுப்பினரை அரசியலமைப்பில் காணப்படுகின்ற உடன்படிக்கைகளுக்கு அமைய நியமிப்பதே சம்பிரதாயமாகும். அவ்வாறு நியமிக்கப்பட்டதன் பின்னர் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை பெற்றுக் கொள்வதற்கான நிலையியற் கட்டளை, அரசியலமைப்பின் சட்ட திட்டங்களின் கீழ் செயற்படுத்தப்படும்.

இருப்பினும் ஒரு பிரதம மந்திரியை நியமித்து அவர் பாராளுமன்றத்திற்கு செல்லும் முதல் தினத்திலேயே அவர் மீதான நம்பிக்கை இருக்கின்றதா என்பதை பற்றிய பெரும்பான்மையை நிரூபிப்பதற்கான வாக்கெடுப்பு எமது பாராளுமன்ற சம்பிரதாயத்தில் ஒருபோதும் நடந்ததில்லை. நிலையியற் கட்டளைகளுக்கு கீழும் அவ்வாறு நடப்பதில்லை.

இருப்பினும் பாராளுமன்றத்தின் அச்சம்பிரதாயத்தை மீறி கரு ஜயசூரியவை இரண்டு அறிக்கைகளை வெளியிட்டார். அவரது முதலாவது அறிக்கையில் மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக ஏற்று அவருக்கான உரிமைகளையும் வரப்பிரசாதங்களையும் பாராளுமன்றத்தில் பெற்றுத்தருவதாக அறிவித்தார்.

அதாவது பாராளுமன்றத்தில் பிரதமருக்குரிய ஆசனம், பாராளுமன்றத்தில் பிரதமருக்கான அலுவலகம் ஆகியன பெற்றுத்தரப்படும் என முதலாவது அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதற்கு சில தினங்களின் பின்னர் வெளியிட்ட இரண்டாவது அறிக்கை முதலாவது அறிக்கையை விட முற்றிலும் வேறுபட்டவொரு அறிக்கையாக அமைந்தது.

அதன்மூலம் அவர் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக ஏற்றுக் கொள்வதாக தெரிவித்தார். இந்த நிலைமையை கவனத்திற் கொண்டு ஏற்படும் நிலைமையைப் பற்றி நான் மிகுந்த கவனத்தை செலுத்தினேன். அத்தோடு இரு தரப்பையும் சார்ந்த உறுப்பினர்களும் அறிக்கைகளை வெளியிட்டார்கள். ஊடகங்களில் பல்வேறு கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. 14 ஆம் திகதி பாராளுமன்றம் கூடும் பட்சத்தில் ஒரு பாரிய மோதல் ஏற்படும் எனவும் சில சமயம் சிலர் மரணிக்க நேரிடும் எனவும் சிலர் தெரிவித்தார்கள்.

அதை அவ்வாறு நடக்க விட்டிருப்பின் 14 ஆம் திகதி பாராளுமன்றத்தைக் கூட்டி அதனைக் கலைக்காது அந்த மோதலை உங்களதும் எனதும் அன்புக்குரிய இந்த தாய் நாட்டின் நகரங்களிலும் கிராமங்களிலும் மோதல்கள் ஏற்பட்டு நாட்டில் சாதாரண சிவில் மக்களுக்கிடையிலான மோதலாக பாரதூரமான நிலைமை ஏற்படும் என்பதை உணர்ந்தேன். இந்நிலைமைகளை கருத்தில் கொண்டு பாராளுமன்றத்தை கலைத்தாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (மு)

# எந்த விளைவுக...

விளைவுகளையும் தயக்கமின்றி நான் எதிர் கொள்ள தயார் என முன்னாள் அமைச்சர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இலங்கை நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவம் செய்யும் பலகட்சிகளின் தலைவர்கள் பாராளுமன்றம் கலைக்கப்பட்டதற்கு எதிராக உச்ச நீதிமன்றம் செல்லப்போவதாக தெரிவித்துள்ளனர்.பாராளுமன்றம் ஜனாதிபதியின் நடவடிக்கையின் சட்டபூர்வதன்மை குறித்து தீர்மானிப்பதை, ஜனாதிபதி தடுத்துள்ளதன் காரணமாக இந்த நடவடிக்கை சட்டபூர்வமானதா என்பதை உச்சநீதிமன்றமே தீர்மானிக்கவேண்டும்.

பாராளுமன்றத்தின் பாதுகாவலன் என்ற அடிப்படையில் நான் கடந்த இரண்டுவார காலமாக ஜனாதிபதி பாராளுமன்றத்தின் உரிமைகளை பறித்ததையும் மக்களை பிரதிநிதித்துவம் செய்வதற்காக தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் அதிகாரங்களை முடக்கியதையும் நான் பார்த்துள்ளேன்.

இலங்கையின் இறைமையின் இயந்திரமான பாராளுமன்றம் குறித்து ஜனாதிபதி வெளிப்படுத்திய வேண்டுமென்ற அலட்சியம்காரணமாக இலங்கையின் சாதாரண பொதுமக்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரம் இதேபோன்று துஷ்பிரயோகத்திற்குள்ளாக கூடிய ஆபத்து உருவாகியுள்ளது.

இவ்வாறான சூழ்நிலையில் அரசமைப்பை பாதுகாப்போம் என சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொண்ட அனைத்து அரச பணியாளர்களையும் அந்த சத்தியப்பிரமாணம் குறித்து சிந்திக்குமாறு நான் கேட்டுக்கொள்கின்றேன்.நாங்கள் ஏன் அரசமைப்பு என்ற ஆவணத்திற்கு கட்டுப்படவேண்டும். ஏன் தனியொரு மனிதரிற்கோ அதிகாரத்திலுள்ளவர்களிற்கோ கட்டுப்படக்கூடாது என எங்களை நாங்களே கேள்வி கேட்க வேண்டும். எங்களது தலையாய கடமை என்பது அரசமைப்பிற்கேயுரியது.

நாட்டின் அனைத்து அரசபணியாளர்களையும் எங்கள் தாய்மண்ணின் அதிஉயர் சட்டத்திற்கான தங்கள் கடப்பாடுகளை நினைத்துப்பார்க்குமாறும் பொதுச்சேவை பொலிஸ் சேவை மற்றும் நீதித்துறையின் சுதந்திரத்தை பாதுகாக்குமாறும். நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அரச ஊழியர்களை அவர்களிற்கு கிடைக்கும் சட்டவிரோதமான உத்தரவுகளை நடைமுறைப்படுத்த மறுக்குமாறு நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அரசமைப்பின் கீழ் கடப்பாடுகள் வழங்கப்பட்டுள்ள அனைத்து பிரஜையும் நாடு குறித்தே முதலில் சிந்திக்கவேண்டும் கட்சி அல்லது தனிப்பட்ட தொடர்புகள் குறித்து சிந்திக்ககூடாது.

எமதுநாட்டில் ஜனநாயகத்தை காப்பாற்றுவதற்காக நாங்கள் அனைவரும் தேசப்பற்றுடனும் சுதந்திரமாகவும் செயற்படவேண்டும்.

நவம்பர் 14 ம் திகதி பாராளுமன்றம் கூடவிருந்தவேளை ஜனாதிபதி உரையாற்றுவதை நான் தடுக்கமுயன்றேன் என போலியான வெளிவிவகார அமைச்சரும் நன்கு மதிக்கப்பட்ட அரசியல்வாதியுமானவர் பொய்யான குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளமை குறித்து அறிந்து நான் கவலையடைந்தேன்.இவ்வாறான அனுமானத்தை முன்வைத்துள்ள அமைச்சர் இதன் காரணமாகவே பாராளுமன்றம் கலைக்கப்பட்டது என தெரிவித்துள்ளார்.

நான் குறிப்பிட்ட அமைச்சர் தனது சகாக்களின் நடவடிக்கைள் குறித்து நேர்மையான நம்பத்தகுந்த காரணங்களை முன்வைத்திருந்தால் அது சர்வதேச சமூகத்தின் மத்தியில் எங்கள் நாடு அவமானப்படுவதை குறைத்திருக்கும் என நான் கருதுகின்றேன்.

அவரது கட்டுக்கதையை அடிப்படையாக வைத்து அவரது சகாக்கள் பலர் என்னை சிறைக்கு அனுப்பபோவதாக எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

சபாநாயகரினதும் பாராளுமன்றத்தினதும் செயற்பாடுகள் எப்போதும் ஜனாதிபதியின் விருப்பத்திற்கமைவாக காணப்படாது. 1641இல் பொதுச்சபையின் சபாநாயகர் தனது உறுப்பினர்கள் முதலாம் சார்ல்ஸ் மன்னனால் கைதுசெய்யப்படுவதிலிருந்து அவர்களை பாதுகாத்தது முதல் பாராளுமன்றத்தின் இந்த சுதந்திரம் காணப்படுகின்றது.

அரசாங்கத்தின் சட்டபூர்வதன்மை குறித்த வாக்கெடுப்பை நடத்துமாறு பாராளுமன்றத்தின் 124 உறுப்பினர்கள் வேண்டுகோள் விடுத்தார்கள். 116 உறுப்பினர்கள் என்னை சந்தித்து வேண்டுகோள் விடுத்தனர்; ஏனைய 8 உறுப்பினர்கள் என்னை தனிப்பட்ட முறையில் தொடர்புகொண்டு இந்த அழைப்பை விடுத்தனர்.

பாராளுமன்றத்தின் சபாநாயகர்கள் முன்னர் நடந்துகொண்டது போல நானும் பெரும்பான்மை உறுப்பினர்களின் விருப்பத்தை ஏற்று வாக்கெடுப்பை நடத்த அனுமதிப்பேன் என தெரிவித்தேன்

அரசாங்கத்தின் கொள்கை விளக்கவுரையை நிறுத்துமாறு எந்த உறுப்பினரும் கேட்டுக்கொள்ளவில்லை நானும் அதனை ஏற்றுக்கொண்டிருக்க மாட்டேன்.

இந்த நடவடிக்கைகளிற்காக எந்த விளைவுகளையும் தயக்கமின்றி நான் எதிர்கொள்ள தயார் என கருஜெயசூரிய தெரிவித்துள்ளார்.(மு)

தன நிதானய
திகதி 2018-11-11
சீட்டிழுப்பு இலக்கம் 74
Y 12 21 47 61

மஹஜன சம்பத
திகதி 2018/11/11
சீட்டிழுப்பு இலக்கம் 3787
Z 1 2 7 1 7 2

கொவிசெத
திகதி 2018.11.11
சீட்டிழுப்பு இலக்கம் 1940
J 16 18 29 65

நீரோகா
திகதி 2018/11/11
சீட்டிழுப்பு இலக்கம் 471
தனு 28 37 45 60 21

## CNR உள்நாடு, வெளிநாடுகளுக்கான தபால், பொதிகள் விநியோக சேவை



- அதிவேக மற்றும் சிக்கன பொதிகள் சேவை
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- வீடு, அலுவலகங்களில் இருந்தவாறு அனுப்பும் வசதி
- அனுப்பும் பொதிகளுக்கான காப்புறுதி உத்தரவாதம்
- கடல் ஆகாய மார்க்க பெரிய சரக்குப் பரிமாற்ற சேவை

CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி,
(பெருமாள் கோவில் அருகாமை)
யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு:
021 5674145
077 2931062
077 6655413

(C-4384)



## உடனடி வேலைவாய்ப்பு

யாழ். மாவட்டத்தில் இயங்கும் எமது நிறுவனத்துக்கு கட்ட வரைவாளருக்கான (Draughtsman) வெற்றிடம் காணப்படுகின்றது. தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

- தகைமை : உயர் தேசிய டிப்ளோமா பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.
- வயது எல்லை: 18 தொடக்கம் 30வரை

விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.
சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

**விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:**
Email: rajaz_25@yahoo.com
Tel: 0764463708/ 0771369765

(6402)



## டுபாய் வேலைவாய்ப்பு
### அரசாங்க வேலைத்தளம்

**மெக்கானிக் சம்பளம் 82,800 - 207,000/-**
வாகன எஞ்சின் & கியர், மோட்டார் சைக்கிள், வாகன வயறிங், ரயர் டெக்னீஷியன், சேர்விஸ்

ஆரம்பக் கட்டணம் இல்லை
பதிவுக் கட்டணம் ரூ 200/- மட்டுமே

077 00 38 215
021 222 00 11

Emerald Isle
Manpower & Travel Services
The Sri Lankan Recruitment Specialists
License No. 2268

221-1/1
மின்சார நிலைய வீதி
2ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்
www.emeraldisle.lk
email: jaffna@emeraldisle.lk

வடக்கின் வயது & ஒரேயொரு வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்


## வவுனியாவில்...

வெட்டுச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் 23வயதுடைய இளைஞரொருவர் காயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (மு-250)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



## வேலைவாய்ப்பு

சர்வதேச ரீதியில் இயங்கி வரும் எமது (Granton International Ptd) கம்பனியால் (யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார்) ஆகிய பிரதேசங்களில் O/L பயின்றவர்கள் முதல் இன்றே விண்ணப்பங்களை பதிவு செய்யுங்கள்.



- விநியோகஸ்தர்கள்
- மேற்பார்வையாளர்கள்
- அலுவலகர்கள்
- உதவி அலுவலகர்கள்
- உதவி முகாமையாளர்கள்

- ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
- 18-30 வயதுக்குட்பட்டவர்கள்.
- தங்குமிட வசதி மற்றும் மருத்துவ வசதி செய்து கொடுக்கப்படும்.
- பயிற்சிக்காலத்தில் 18,500/= - 25,000/= வரையிலும் பின்னர் அவர்களின் பதவிக்கேற்ப 35,000/= க்கு மேல் (EPF, ETF) அடங்கலாக வழங்கப்படும்.
- விண்ணப்பதாரிகள் (CV, NIC Copy) கொண்டு வரவும்.

**தொடர்பு:0767707759**

(6413)



## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவலர் வீதி, முஸ்லிம் தெருவில் வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: **076 592 8791**

(6226)



## விரைவு பொதிகள் சேவை
### விசேட விலை குறைப்பு



DELIVERY IN 3-5 DAYS

UK- 550 */=Kg
கனடா-900 */=Kg
ஜேர்மனி- 700 */=Kg
நெதர்லாந்து-700 */=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)

0768226240

- மானிப்பாய்
- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி
- நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

V2 TRAVELs

(C-4381)


## ஓராண்டு நினைவலைகள்



தோற்றம்
29 . 10 . 1952

மறைவு
24 . 10 . 2017

## அமரர் கந்தசாமித்துரை சுந்தரேஸ்வரன்

ஆண்டொன்று ஆனதப்பா
அன்பு கொண்ட உம் வதனம்
அருகினில் இருப்பது போல்
உணர்கின்றோம் அன்பால் என்றும்!
எத்தனை ஆண்டுகள் ஆனாலும்
நீங்காது உங்கள் நினைவு
எம் நெஞ்சோடு!!

வி.எம். றோட்,
பருத்தித்துறை.

இங்ஙனம்
குடும்பத்தினர்

(பி-4387)


IBC தமிழ்

NOBLE INTERNATIONAL
Papers Lanka (Private) Limited

## Joint our Team...
## எங்கள் அணியில் இணையுங்கள்

யாழ்ப்பாணம், அச்சுவேலி கைத்தொழிற்பேட்டையில் இயங்கி வரும் எமது காகித உற்பத்தி தொழிற்சாலைக்கு பின்வரும் பணி நிலைகட்கு ஆர்வமுள்ள, துடிப்பான அர்ப்பணிப்புடன் வேலை செய்யக்கூடிய இளைஞர்கள் யுவதிகள் வேண்டப்படுகின்றீர்கள்.

- *தொழிற்சாலை உற்பத்தி உதவியாளர்கள்*
  **Factory production workers:**
  01. வயது - 20 தொடக்கம் - 30 வரை
  02. கல்வித்தகைமை : G.C.E O/L



- *இயந்திர தொழில்நுட்ப உதவியாளர்கள்*
  **Mechanical Engineering Assistance**
  01. கல்வித்தகைமை : தொழில்நுட்ப கல்லூரியில் இயந்திர தொழில்நுட்ப பிரிவில் Diploma Certificate அல்லது கல்வி கற்றுக்கொண்டு இருப்போர்.
  02. வயது - 20 தொடக்கம் 30 வயது வரை

- *பாதுகாப்பு மற்றும் சுகாதார பரிசோதனை*
  **Security, Safety and health Supervisor**
  01. கல்வித்தகைமை : மேற்குறித்த பதவிகளில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
  02. வயது எல்லை : ஆகக்குறைந்தது 30 வயது முதல் - 60 வயது வரை

நேர்முகத்தேர்வு : 15.11.2018 காலை 9.30 மணிக்கு அச்சுவேலி கைத்தொழிற் பேட்டையிலுள்ள தொழிற்சாலை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ளோர் நேரில் சுயவிபரக்கோவையுடன் சமுகமளிக்கவும்.

**தொடர்புகளுக்கு: 021 221 3000**

(C-4389)



## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை.
- கடலுணவு, இறைச்சி, எண்ணை வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள்,
- பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்

## அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576
சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3536

(பி-4383)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.11.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.